
கல்கி

KALKI 29-5-83 ரூ. 1.20



ஜய ஜய சங்கர

ஹர ஹர சங்கர

௯௦


வேர்க்குரு
தாக்கும்
போது...
ஜான்ஸன்ஸ் ப்ரிக்லி ஹீட் பவுடர் மட்டுமே
உடல் அரிப்பு மற்றும் எரிச்சலை நிறுத்து-
கிறது உடனடியாக.
எப்போது வேர்க்குரு தாக்கினாலும்
அதை முறியடிக்க உபயோகியுங்கள்
ஜான்ஸன்ஸ் ப்ரிக்லி ஹீட் பவுடர்.
ஜான்ஸன்ஸ் ப்ரிக்லி ஹீட் பவுடரில்
மட்டுமே நிரூபணம் பெற்ற மருந்துக்
கலவை அடங்கியுள்ளது. அது
3 வழிகளில் தீவிரமாக செயல்
படுகிறது :
☐ பாக்டீரியா கிருமிகள் பெருகுவதைத் தடுக்கிறது.
☐ வியர்வையை உறிஞ்சுகிறது.
☐ உடல் அரிப்பு மற்றும் எரிச்சலுக்கு நிவாரணமளிக்கிறது உடனடியாக !
Johnson's
PRICKLY
HEAT
POWDER
for
instant relief
சந்தன
மணத்திலும்
கிடைக்கிறது
Johnson & Johnson
© J&J '83
OBM 9777 TM


ஊர்வலம்

ஊரை வலமாக வருவது ஊர்வலம். தற்பொழுது தேவைகளை வைத்து அரசியல் ஊர்வலம், பொதுஜனங்கள் ஊர்வலம், ஆபீஸ் ஊர்வலம், மாணவர்கள் ஊர்வலம், பெண்களின் ஊர்வலம் என்று பலவகையான ஊர்வலங்கள் இருக்கின்றன. மாப்பிள்ளை அழைப்பும் தற்பொழுது ஊர்வலமாக நடைபெறுகிறது.

ஒவ்வொரு கிராமத்திலும், நகரத்திலும் உள்ள சிறிய கிராம தேவதை கோயில்கள் முதல் பெரிய சிவ விஷ்ணு கோயில்கள் வரை திருவிழாக்கள் நடைபெறும். அப்போது உற்சவர் ஊர்வலமாக வருவார். சுவாமி ஊர்வலத்தின் மூலம் மக்களிடையே எல்லாவிதமான வேற்றுமைகளும் அகன்று இறைவன் முன்பு அனைவரும் சமம் என்ற உணர்வு ஏற்படும். அதிலும் ரதோத்சவம் (தேர்த் திருவிழா) நம்முடைய மக்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்தும். ஒவ்வொரு ஊரிலும் அந்தக் கோயிலைச் சுற்றியுள்ள மாட வீதிகளில் ஸ்வாமி ஊர்வலமாக வரும். விஷ்ணு காஞ்சியில் உள்ள பெருமாள் சாமானிய உற்சவங்களில் தன் கோயிலைச் சுற்றியுள்ள மாட வீதிகளில் வலம் வருவார். பிரும்மோற்சவ காலத்தில் விஷ்ணு காஞ்சியிலிருந்து புறப்பட்டு சிவகாஞ்சிக்கு வந்து, காஞ்சி காமாட்சியம்மன் வீதியான நான்கு இராஜ வீதிகளிலும் ஊர்வலமாக வருவது மிகவும் சிறப்பு வாய்ந்தது. இதன் மூலம் சைவ, வைஷ்ணவ பேதங்கள் ஏதுமில்லை என்பது புலப்படும். காஞ்சியில் ஒவ்வொரு கோவிலிலும் உள்ள உற்சவ விக்ரஹமும் அந்தந்தக் கோவில்களின் விசேஷ உற்சவக் காலங்களில் ஸ்ரீ காஞ்சி காமாட்சி அம்மனின் ராஜ வீதியில் ஊர்வலமாக வரும். திருவாரூரில் தேர் உற்சவம் மிகவும் பிரசித்தமானது. ''திருவாரூர் தேரழகு'' என்பார்கள். ஸ்ரீரங்கம் உற்சவத்தில் பெருமாளை எடுத்துக் கொண்டு வரும் ''நடையழகு'' மிகவும் விசேஷமானது. காஞ்சிபுரம் உற்சவத்தில் பெரிய குடைகளை நடைபோட்டு எடுத்துக் கொண்டு வருவது அற்புதக்காட்சி. ''காஞ்சிபுரம் குடையழகு'' என்றே குறிப்பிடுவார்கள்.

பெருமாள் கோவிலில் விசேஷமாக பிரம்மோற்சவம், ரதோற்சவம் முதலியவைகள் நடைபெற்றால் அப்போது அந்தணர்கள் முதல் ஹரிஜனங்கள் வரை இந்து சமயத்தைச் சார்ந்த அனைத்து சமுதாயத்தைச் சேர்ந்த பெருமக்களும் சைவம், வைணவம் என்ற வேறுபாடு இல்லாமல் அவரவர்கள் தங்கள் தங்கள் சமுதாயத்திற்கு அப்பாற்பட்டுப் பெருமாளைச் சேவிப்பதில் ஈடுபடுவார்கள். பெருமாள் கோவில் திருவிழா ஒரு இந்து சமயத் திருவிழா. இந்து மக்களிடையே ஆன்மீக வழியில் ஒற்றுமையை ஏற்படுத்துவது திருவிழாவும் சமய ஊர்வலமும்.

-ஜகத்குரு ஸ்ரீகாஞ்சி காமகோடி
பீடாதிபதி ஜயேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய சுவாமிகள்



தர்ப்பாஸனத்தில் தவமுனிவர்

ஆனந்தி

“மூதல்வன் பாதமே பற்று நின்றாரைப் பற்று பாவமே!” என்பது அருள் குழந்தையான ஞான சம்பந்தரின் வாக்கு. நம்மையெல்லாம் அருள் மழையில் நனைத்து, உள்ளத்து மாசுகளைக் கழுவி, பாவங்கள் தாமே நீங்கும்படியாகச் செய்கின்ற மகான் காஞ்சி முனிவர்.

ஹைதராபாத் எக்ஸ்பிரஸில் ஏறுவதற்காக சென்ட்ரல் ஸ்டேஷனில் காத்திருந்தபோது சென்னை வாசிகள் பலரைக் காண நேர்ந்தது. ‘‘ஹைதராபாத்தில் என்ன விசேஷம்?’’ என்று கேட்டால் ‘‘பெரியவாளைத் தரிசனம் செய்யப் போகிறோம்’’ என்று அத்தனை பேரும் கூறினார்கள். ‘இந்த வெய்யில் காலத்தில் காஞ்சிப் பெரியவர்களைப் பார்க்க வேணுமென்று மக்கள் கூட்டம் கூட்டமாகச் செல்வதென்றால் அவரிடம் எவ்வளவு ஆகர்ஷண சக்தி இருக்கிறது?’’ என்று அதிசயித்தபடியே ரயில் ஏறினேன்.

ஆதி சங்கர பகவத்பாதாள் பரத கண்டத்தை மூன்று முறை வலம் வந்ததாகச் சொல்கிறார்கள். அதை நாம் பார்த்ததில்லை. இதோ தமது தொண்ணூறாவது வயதிலும் பாரத புண்ணிய பூமியை வலம் வந்து கொண்டிருக்கும் நமது பெரியவாளின் அபூர்வமான சக்தியைப் பார்க்க நமக்குக் கொடுத்து வைத்திருக்கிறது.

பெரியவாளுடைய உபந்நியாசங்களைத் தொகுத்த ஸ்ரீ சங்கர விஜயம் என்ற நூலில் அவர்களே ஒரு சந்நியாசியின் லட்சணம் என்ன என்று விளக்குகிறார்.

‘‘அபயம் ஸர்வ பூதேப்யோ
மத்தஸ் ஸ்வாஹா

என்று சொல்லிக் கொண்டு ஒருவன் சந்நியாஸாச்ரமத்தைப் பெற்றுக்கொள்கிறான். அவனைக் கண்டால் ஒரு பிராணியும் பயப்படக் கூடாது. எல்லா ஜனங்களுக்கும் அவனைப் பாரக்கிறபோது ஓர் ஆனந்தம் இருக்க வேண்டும்.

அதற்காகத்தான் அஹிம்சா தர்மம் சந்நியாசிக்கு முக்கியமாகக் கொடுக்கப் பட்டிருக்கிறது.’’ என்று கூறியிருக்கிறார்.

இதற்கு விளக்கமாக அவரே திகழ்வதை நாயோனி பள்ளியில் கண்டேன்.

பிற்பகல் ஒன்றரை மணி. ஹைதராபாத் நகரிலிருந்து நாற்பது கிலோ மீட்டர் பயணம் செய்து ஸ்வாமிகள் இருக்குமிடத்தை ஆவலுடன் தேடுகிறோம்.

ஓரிடத்தில் ஷாமியானாப் பந்தலும் ஒரு சிறிய கும்பலும் இருப்பதைக் கண்டதும் இந்த இடமாகத்தான் இருக்க வேண்டும் என்று உள்ளே நுழைகிறோம். இடதுபுறத்தில் ஒரு வீடு. அங்கே கொசுவம் புடவை உடுத்திய சில தமிழ்ப் பெண்மணிகளும் வைதிகத் தோற்றம் கொண்ட சில பெரியோர்களும் காணப்படுகிறார்கள். இடதுபுறம் ஒரு பசிய பந்தல். முதலில் திராட்சைப் பந்தலொன்று தோன்றுகிறது. அதன் எதிரே ஷாமியானா பந்தல்.

தட்டுப் பந்தலாகப் படர்ந்துள்ள பசுமைப் பந்தலின் நிழலில் ஸரஸ்வதி பீடத்தின் மேல் வைக்கப்பட்டுள்ள ஆதி சங்கரரின் படம் கண்களுக்குப் புலனாகின்றது. அதற்கு அடுத்தாற் போல காவி வண்ண வஸ்திரமும் சற்று மேல் நோக்கிய இடது பாதமும் தரிசனமாகிறது.

மனம் ஏன் சிலிர்க்கிறது? இந்தப் பரவசம் ஏன் ஏற்படுகிறது? துறவியின் லட்சணமென்பது இதுதானோ?

கல்லும் கட்டியுமான தரை. ஸ்வாமிகளை அடுத்து நாணல் புல்லினால் கட்டிய தட்டி. வலது பாதம் தட்டியின் மேல் வைக்கப்பட்டிருக்கிறது. பாரத நன்னாட்டு மக்களை மேம்படுத்தவே மக்களின் ஆன்மீக வாழ்வை மலரச் செய்யவே நாட்டைச் சுற்றிச் சுற்றி வரும் பாதங்கள். கண்ணத்தில் போட்டுக் கொள்கிறோம்.



உள்ளே இருந்து மடத்தைச் சார்ந்த தொண்டர்கள் வந்து புதிதாக வந்தவர்களைச் ''சாப்பிட வாருங்கள்'' என்று அழைக்கிறார்கள். ஜனசஞ்சாரமில்லாத இடத்தில் கூட அதிதி உபசாரம் செய்வது நமக்கு வியப்பாக இருக்கிறது. தாய்மையின் பரிவோடு வருவோருக்கெல்லாம் மடத்தில் உணவளிக்கப்படுவது மிகவும் சிலாகிக்கப்பட வேண்டிய விஷயம்.

பர்ணசாலையின் நிழலில் அமர்ந்து பெரியவாள் கண் விழிக்கும் நேரத்தை எதிர்நோக்கிக் காத்திருக்கிறோம்.

ஸ்வாமிகளுக்கு அருகில் இரண்டு அலாரம் கடிகாரங்கள். தர்ப்பாஸனத்தில் சாய்ந்து படுத்திருக்கும் பெரியவரின் சிரத்துக்கு மேலாகத் தாழங்குடை நாகாபரணம் சாத்தியிருப்பது போலத் தோன்றுகிறது. அறிதுயில் அல்லவா? பக்தர்கள் சமர்ப்பித்த தேங்காய் பழங்கள், பூஜா திரவியங்கள் காணப்படுகின்றன.

ஆதி சங்கரரின் பீடத்துக்கு எதிரே ஹோமம் செய்த அடையாளம் பாதுகையின் மீது வஸ்திரம் சாத்தப்பட்டிருக்கிறது. ஒற்றை வில்வ தளம் அதன் மீது. சங்கர ஜயந்தி தொடங்கி விட்டது.

மனம் பழைய நினைவுகளில் லயித்து விடுகிறது. எதிரில் சரிந்து மணற் குன்றில் முடியும் இடத்தில் கானல் நீர் அலை அலையாக. அதில் ராதா நல்லூரில் சின்னஞ் சிறு சிறுமியாக இருந்தபோது பெரியவா பூஜை பண்ணினதைப் பார்த்தது தெரிகிறது. தீபாராதனை செய்த காட்சி நிழலாடுகிறது.

பின்னர் ஸதாராவுக்கு அருகிலிருந்தபோது பெரியவாளின் தரிசனம் கிடைத்ததும் நினைவுக்கு வருகிறது. அன்று ''உங்கப்பா எழுதினதை யெல்லாம் படிச்சிருக்கியா?'' என்று கேட்டதும், ''சோழ தேசம் பல்லவ தேசத்தில் உள்ள இடங்களை யெல்லாம் பார்த்திருக்கிறாயா?'' என்று கேட்டதும் நினைவுக்கு வருகிறது. குடும்பத்தில் ஒவ்வொருவரையும் பற்றி நினைவு வைத்துக் கொண்டு எவ்வாறு தாயின் பரிவோடு இவாளால் விசாரிக்க முடிகிறது? என்று வியப்பாக இருக்கிறது?

''ஸ்ரீ சந்த்ரமௌளி சரணார்ப்பித
ஹ்ருதயாப்ஜம்
ஸ்ரீமத் காமகோடி பீடாதீசம்''
ஸ்ரீ சந்த்ர சேகர யதீந்த்ரம் பஜே''

என்று சங்கராபரணத்தில் மனம் பாடுகிறது.

மக்கள் கலகலவென்று பேசுகிறார்கள். ஸ்வாமிகள் அசந்திருக்கிறாரே சற்று பேசாமலிருக்கக் கூடாதா என்று நினைத்துக்கொண்டிருக்கும்போதே அவர் கண் விழித்து எழுந்து அமருகிறார். இதை அன்பர்கள் எப்படித்தான் அறிந்தார்களோ பந்தலில் வந்து குழுமி விட்டார்கள். ஸ்வாமிகள் தம் கரத்தினால் துழாவுகிறார். கண்ணாடியை எடுத்து அணிந்து கொள்கிறார். இன்னார் இன்னார் வந்திருக்கிறார்கள் என்று தொண்டர் ஒருவர் கூறுகிறார். யார் யார் என்று சரியாகக் கேட்டுத் தெரிந்து கொள்கிறார். புன்னகையுடன் கரத்தைக் காட்டி அனுக்ரஹம் செய்கிறார். வந்திருப்பவருடைய பூர்வீகத்தைக் கேட்டுத் தெரிந்து கொண்டு அந்த ஊரைச் சேர்ந்த மற்றொருவரைப் பற்றிக் கேட்டுத் தெரிந்து கொள்கிறார். ''அப்பா முகத்திலேயே விழிக்க மாட்டேனு சொல்லியிருந்தாளேன்னோ இப்போ ராசியாயிடுத்து இல்லையா?'' என்று கேட்கிறார்.

இன்னொருவர் பெரியவா சொல்லியிருந்த காரியத்தைச் செய்து முடித்தாகி விட்டது என்று கூறுகிறார்.

தமிழ் நாட்டில் மழையே இல்லை. தண்ணீர்ப் பஞ்சம் என்று ஒருவர் கூறுகிறார். ''இங்கே இருந்துதானே அனுப்பறா?'' என்று கேட்டு விட்டுக் கிருஷ்ணா நதியில் எங்கேயிருந்து எப்படி நீர் எடுத்து எவ்வாறு அனுப்பப்படுகிறது என்பதைக் கேட்கிறார். பிட்ரகுண்டாவிலிருந்து வாகன்கள் சுத்தம் செய்யப்பட்டு விஜயவாடாவிலிருந்து தண்ணீர் நிரப்பி அனுப்பப்படுவதை ஒருவர் கூறுகிறார்.

''மழை பெய்ததோ?'' என்று பெரியவா கேட்கிறார். மழையே இல்லை என்று கூறியதும் ''தூற்றல் கூடப் போடவில்லையா?'' என்று மறுபடியும் கேட்கிறார்.

ஸ்வாமிகள் மழையைப் பற்றிக் கேட்டபோது சென்னையில் அன்று மழை பெய்தது அங்கே இருக்கும் யாருக்கும் தெரியாது. அன்றிரவு ரேடியோவில் 'சென்னையில் மழை பெய்தது' என்று ஆங்கிலச் செய்தியில் கேட்டபோது ஆச்சரியமாக இருந்தது.

கல்வி ஸ்தாபனத்தின் சார்பில் கொடுத்து அனுப்பியிருந்த விடுமுறை மலரைச் சமர்ப்பித்தேன். மடத்துத் தொண்டர் பிரித்துக் காட்டுகிறார். பக்கங்களைப் புரட்டி ''பெரியவாள் படம், புதுப் பெரியவா படம் போட்டிருக்கு'' என்று கூறுகிறார். ஒரு சிறு புன்னகை.

அருள்வாக்கு

பரமாத்மா பலவாகத் தோன்றியிருக்கிறார். தோன்றிய பின்னும் சமுத்திரம் மாதிரி கூடாமல் குறையாமல் இருக்கிறார். நமக்குக் கூடுதல் குறைவு எல்லாம் உண்டாகிறதாகத் தோன்றுகிறது. ஆனால் உள்ளது ஒன்றேதான் என்ற ஞானம் வந்தால் எங்குமே கூடுதலும் இல்லை, குறைவும் இல்லை.





அட்டைப்படம்:

காஞ்சி காமகோடி சந்திரசேக ரேந்திர சரஸ்வதி சுவாமிகள்.

வண்ணப்படம்: எலிகண்ட் ஸ்டுடியோ

சித்திரம்: மணியம் செல்வன்

''பெரியவாளுடைய ஜெயந்தி வருகிறது. அதை யொட்டிக் கட்டுரை எழுதுவதற்கு அனுக்கிரகம் செய்ய வேண்டும்'' என்று கூறியபோது கையைத் தூக்கி அபய ஹஸ்தம் காட்டுகிறார்.

''என் பிள்ளைக்கு வேலையாகி யிருக்கு. என் பெண்ணுக்கு இந்த வருஷம் கல்யாணம் ஆகணும். பெரியவா அனுக்ரஹம் பண்ணணும்'' ''அதே அபய ஹஸ்தம்.

கல்யாணம் ஆகப் போகும் பிள்ளையுடன் வந்திருக்கும் பெற்றோர்கள் பத்திரிகையைக் கொடுக்கிறார்கள். முழுவதும் படிக்கும் வரை காது கொடுத்துக் கேட்கிறார்கள். அவர்கள் கொண்டு வந்த காணிக்கையை ஏற்றுக் கொள்கிறார்.

''பெரியவா தமிழ் நாட்டுக்கு வரணும்''

''அங்கேதான் ஒருத்தர் இருக்கிறாரே! இரண்டு பேர் எதற்கு?'' என்று கை ஜாடையிலே சிரித்துக் கொண்டு கேட்கிறார்.

''ஹைதராபாத்துக்குப் பெரியவா வரணும்னு சொல்லச் சொன்னா.''

''இரண்டு பக்கமும் இழுத்தா என்ன செய்யறது?'' என்பது போல் மறுபடியும் கைகளாலேயே அபிநயத்தே கேட்கிறார்.

—யாரோ ஒருவர் ஒரு கூடையில் பறங்கிக் காய். இன்னும் சில காய்கறிகள், சர்க்கரை இவற்றைக் கொண்டு வந்து வைக்கிறார். அதைத் தொட்டுப் பார்த்துப் பெரியவர்கள் அங்கீகாரம் செய்த அழகு நெஞ்சைத் தொடுகிறது.

ஒரு வயது முதிர்ந்த பெண்மணி தன் பேத்திகளுடன் வந்து வந்தனம் பண்ணுகிறார். அவரை இன்னாரென்று தெரிந்து கொண்டதும் சுவாமிகளின் முகத்தில் ஒரு பிரகாசம். அந்த மூதாட்டியார் தமது முதிர்ந்த குரலில் தோடகாஷ்டகம் பாடிக் கொண்டே 'பவ சங்கர தேசிகமே சரணம்' என்று ஒவ்வொரு தடவையும் நமஸ்கரிக்கிறார். சுவாமிகள் சுவரில் சாய்ந்த வண்ணம் கண்களை மூடிக் கொண்டு கேட்பதில் அவருடைய தயை நிரம்பிய உள்ளம் புலனாகிறது.

நாமெல்லாம் ஜகத் குருவான சுவாமிகளிடம் போய் நம் குறை நிறைகளையெல்லாம் சொல்கிறோம். ஒரு துறவியை அவர் துறவற நிலையில் இருக்கும்படி விடாமல் ஏன் லௌகிக விஷயங்களை அவரிடம் சொல்ல வேண்டும். நாம் அவரைத் தரிசிப்பதால் உயர வேண்டுமே தவிர பற்றற்ற நிலையை அடைய முயற்சி செய்ய வேண்டுமேயன்றி நம்முடைய ஆசா பாசங்களையே சொல்லி அவரிடம் முறையிடுவது என்ன நியாயம் என்று நினைப்பதுண்டு. இறை உணர்வில் நாம் லயிப்பதற்குப் பதிலாக சுவாமிகளை நம் கவலை மூட்டைகளை இறக்கி வைக்கும் சுமை தாங்கியாகப் பயன்படுத்துகிறோமே இது சரியா என்று எண்ணுவதுண்டு.

நம்முடைய ஆச்சாரிய சுவாமிகள் துறவு நிலைக்கும் அப்பாற்பட்டவர். தம்முடைய துறவு நிலையையும் துறந்து நம்முடைய சுக துக்கங்களைக் கேட்டறிந்து கொண்டு அருள் புரிகிறார்கள். சண்டை பூசல்களைப் பற்றிக் கேட்டு அறிந்து கொள்கிறார்கள். தவறான பாதையில் போகும் இளைஞர்களைப் பற்றிக் கவலைப் படுகிறார்கள். திருந்தி விட்டால் மகிழ்கிறார்கள்.

இல்வாழ்வானின் பணி சநாதன தர்மத்தைக் காக்க இன்றியமையாதது என்பதால் ஆண் மக்களும் பெண்மணிகளும் தர்ம வாழ்க்கையில் நின்று நாட்டை உயர்த்த வேண்டும் என்று விரும்புகிறார்கள். நம்முடைய உயர்வுக்காகவே நம்மைப் பற்றி அக்கறை எடுத்துக் கொள்கிறார்கள்.

அவர் இமய மலைக்கோ பொதிகை மலைக்கோ தவம் செய்யப் போய்விடாமல் இந்தப் புண்ணிய பூமியில் நடமாடிக் கொண்டிருப்பது நமக்காகத்தான். அவர் அருகில் நிற்கும்போது நம்முடைய கவலைகள் தூசாகிவிடுகின்றன.

கல்கியில் பிரசுரமான அருள்வாக்கில் ஒரு சமயம் நமஸ்காரத்தைப் பற்றிக் கூறியிருக்கிறார்கள்.

''மனப்பூர்வமாக ஈசுவரனை நமஸ்காரம் செய்து விட்டால் போதும். அவர் நம்மை ஜனன மரண சக்கரத்திலிருந்து விடுவித்து விடுவார். நம் பாவங்களை யெல்லாம் போக்கி முக்தி தந்து விடுவார்.''

''பொறுப்பை உன்னிடமே பூரணமாகப் போட்டேன்'' என்பதற்கு அடையாளம் சரீரத்தைத் தரையில் போடுவது. நம்முடைய நல்லது கெட்டது அவ்வளவும் அவர் விட்டபடி என்று சகல பொறுப்பையும் அவரிடம் தள்ளுவதற்கு வெளி அடையாளமாக உடம்பைத் தரையில் தள்ளி நமஸ்காரம் பண்ண வேண்டும். அப்படிச் செய்தால் நம் பாரம் அனைத்தையும் கிருபா சமுத்திரமான சுவாமியே ஏற்று அனுக்கிரகிப்பார்.''

இதே எண்ணத்தோடு பெரியவாளுடைய தொண்ணூறாவது ஜயந்தியில் மனப்பூர்வமாக அவரை நமஸ்கரிக்கிறோம்.

''ஸ்ரீ குரு நா பாலி தோஸ்மி''

''தாபத்ரயங்களுக்கு அப்பாற்பட்டவரான ஸ்ரீ குருவே! எங்களைக் காத்தருள வேண்டும்'' என்று வேண்டுகிறோம்.

நேருக்கு நேர் ஓர் அனுபவம்

● சமீபத்தில் கோவையில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக மாணவர்களின் அமைப்பான மாணவர் மன்றத்தின் சார்பில் நேருக்கு நேர் நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சி நடக்கவிருந்த அன்று என் கையில் மாணவர்களின் கேள்விகள் கொடுக்கப்பட்டன. அவைகளைப் படித்துப் பார்த்த நான் அதிர்ச்சி யடைந்தேன். என்னோடு அமர்ந்திருந்த மற்ற எழுத்தாள நண்பர்களைக் கேட்டபோது அவர்களது கேள்விகளும் பெரும்பாலானவை அவ்வாறு இருப்பதை அறிந்தேன்.

என்னிடம் தரப்பட்ட கேள்விகளில் சிலவற்றை மட்டும் இங்கே மாதிரிக்காகக் குறிப்பிடுகிறேன்.

(1) ஏன் நீங்கள் கதையெல்லாம் எழுதி எங்களை அறுக்கிறீர்கள்? வேறு வேலை இல்லையா?

(2) நீங்கள் ஆறு மாதம் முழுகாமல் இருக்கிறீர்கள் என்று கேள்விப்பட்டேன். உண்மையா, இல்லை கிசுகிசுவா?

(3) நீங்கள் ஆணா அல்லது பெண்ணா? அல்லது இரண்டும் கலந்ததா?

(4) நீங்கள் ஏன் இவ்வளவு பருத்துக் காணப்படுகிறீர்கள்? நீங்கள் என்ன சாப்பிடுகிறீர்கள்?

(5) உங்கள் மகளை விவசாயக் கல்லூரியில் சேர்க்க விரும்புகிறீர்களா?

(6) நீங்கள் ஆனந்தமாகத் ''தீர்த்தம்'' போடுவது உண்டா?

(7) இந்த வயசுக்கு ஏன் இப்படிக் கதை எழுதுகிறீர்கள்?

(8) வேலை இல்லாதவர்கள்தான் கதை எழுதுகிறார்கள் என்று நினைக்கிறேன். அதைப் பற்றி உங்கள் கருத்து என்ன?

(9) நீங்க எழுதிக் கிழிச்சது என்ன? கிழிக்கப் போவது என்ன?

(10) ஆண்களைக் கெடுப்பது பெண்களா, பெண்களைக் கெடுப்பது ஆண்களா?

(11) நீங்கள் புடவை கட்டிக்கொண்டால் அழகாக இருப்பீர்கள். தங்கள் கருத்து?

(12) பொட்டையனே இனிமேல் கதை எழுதாதே. போய்ச் சாவு. உன் முகமூடி கிழியப் போகிறது.

திருமதி விமலா ரமணி அவர்களைக் கேட்கப்பட்ட கேள்விகளில் ஒன்று ''உங்களுக்கு பாய் ஃப்ரண்ட்ஸ் உண்டா? யார்?''

திரு ராஜேஷ் குமாரிடம் கேட்கப்பட்ட கேள்விகளில் ஒன்று — ''உனக்கும் சிலுக்குக்கும் இதுவாமே? உண்மையா?''

திரு கோமதி சுவாமிநாதனிடம் கேட்கப்பட்ட ஒரு கேள்வி — ''இவ்வளவு பணம் செலவழித்து உங்களைப் போன்ற எழுத்தாளர்களை . வரவழைத்து நீங்கள் பேசுவதை நாங்கள் கேட்கத்தான் வேண்டுமா?''

மாணவர்களும் நிர்வாகிகளும் இப்படிப் பண்பற்ற முறையிலே நடந்து கொள்ள வேண்டுமா? என்ற வேதனையில் சென்னை திரும்பிய பிறகு சில எழுத்தாள நண்பர்களுடன் பேசிக்கொண்டிருந்தபோது கடந்த ஆண்டு இதே கல்லூரியில் இந்த மாணவர் மன்றம் வேறு சில எழுத்தாளர்களை இவ்வாறு அவமானப்படுத்தியது தெரிய வந்தது.


திருமதி சுபாஷிணி அவர்களிடம் கேட்கப்பட்ட கேள்வி — ''உன்னை நான் மணந்து கொள்ளலாமா?''

திருமதி உஷா சுப்பிரமணியம் சந்தித்த ஒரு கேள்வி — ''உன்னை நான் முத்தமிடலாமா?''


ஒவ்வொரு வருடமும் எழுத்தாளர்களை வரவழைத்து, இதுபோல் அவர்களை அவமதித்து வேதனை அடையச் செய்து திருப்பி அனுப்ப வேண்டியது அவசியம்தானா என்பதை வேளாண்மைப் பல்கலைக் கழகத் துணைவேந்தரும் மற்ற சம்பந்தப்பட்ட நிர்வாகிகளும் யோசிக்க வேண்டுகிறேன்.

-ஹேமா ஆனந்ததீர்த்தன்









எதிர்க் கட்சிகளின் ஒற்றுமைக்கு ராமராவ் முயற்சி!




கல்கி

1983 மே 29

ருத்ரோத்காரி வைகாசி 15

மலர் : 41 இதழ் : 44



ஹெக்டே வெற்றி!

கர்நாடகத்தில் நடந்த உபதேர்தல்களில் இ. காங்கிரஸ் தனது தொகுதியையும் ஜனதா தனது தொகுதியையும் தக்க வைத்துக்கொண்டன. சட்ட சபையில் கட்சிகளின் பலத்தில் மாறுதல் ஏதுமில்லை. என்றாலும் ஹெக்டேயின் வெற்றியில் நம் கவனத்தை ஈர்க்கிற பல அம்சங்கள் உண்டு.

'பொதுத் தேர்தலில் வெற்றி பெற்று வந்த ஒருவரே முதல்வராகியிருக்கக் கூடாதா: மேலிடம் ஒருவரைத் திணிக்க வேண்டுமா?' என்ற கேள்விக்குச் சமாதானம் கிடைத்து விட்டது. உப தேர்தலில் கனகபுரா தொகுதி மக்கள் ஹெக்டேக்குத் தங்கள் பேராதரவை அளித்து 23,000 வோட்டு வித்தியாசத்தில் அவர் வெற்றி பெறச் செய்தனர்.

ஜனதா சின்னத்தில் பொதுத் தேர்தலில் போட்டியிட்டு வென்ற பங்காரப்பா, தேர்தலுக்குப் பிறகு, தமது கிரந்திரங்கா கட்சியின் ஆதரவினால்தான் ஜனதா வெற்றி பெற்றது என்றும் எனவே தமக்குத்தான் முதல்வர் பதவி தரப்பட வேண்டும் எனவும் வாதாடினார். முதல்வர் பதவி தமக்குக்கிடைக்காதபோது தமது ஒத்துழைப்பைஅமைச்சரவைக்குத் தர மறுத்து எதிர்க்கவும் செய்தார். இந்தத் தேர்தலில் ஹெக்டேயை எதிர்த்த கிரந்திரங்கா வேட்பாளர் டெபாஸிட் இழந்து படுதோல்வி அடைந்தார். பங்காரப்பாவின் சந்தர்ப்ப வாதப் போக்கு தங்களுக்குப் பிடிக்கவில்லை என்பதை மக்கள் தெளிவாக்கியுள்ளனர்.

உட் பூசல்கள் மலிந்த இ. காங்கிரஸ், கடைசி நிமிஷம் வரை வேட்பாளர் யார் என்று நிர்ணயிக்க முடியாமல் தவித்து, கடைசியில் ஜாதி அடிப்படையில் வோட்டுக்களைப் பெற வசதியாக ஒருவரை நிறுத்தியது. இவரால், 22,199 வோட்டுக்களே பெற முடிந்தது. இது இத்தொகுதி மக்களின் மன முதிர்ச்சியைக் காட்டுகிறது.

ஹெக்டேயின் வெற்றியை அவரது நாலு மாத ஆட்சிக்கு மக்கள் அளித்த ஆமோதிப்பாகவும் கருதலாம். கட்சி மாறுவதைத் தடுக்க மசோதாவும் லஞ்ச ஊழல் புகார்களை விசாரிக்க லோக் அயுக்தா மசோதாவும் கொண்டு வந்து தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் தாம் தீவிரமாக இருப்பதைக் காண்பித்துக் கொண்டிருக்கிறார் ஹெக்டே. என். டி. ஆர். போல ஒரு பரபரப்புடன் பல திடீர் அறிவிப்புகளையும் உத்தரவுகளையும் பிறப்பிக்காது போனாலும் அமைதியான. ஆக்கபூர்வமான ஆட்சியைக் காண்கிறோம். ஒவ்வொரு கிராமத்திலும் ஐந்து குடும்பங்களையேனும் வறுமைக் கோட்டுக்கு மேலே உயர்த்தும் அந்த்யோதயத் திட்டமும் வரட்சி நிவாரணப் பணிகளும் மக்களை மகிழ்வித்துள்ளன.

எல்லாவற்றுக்கும் மேலே ஹெக்டே மீது பங்காரப்பா சுமத்திய ஊழல் புகார்கள் ஆதாரமற்றவை என்று மக்கள் கருதுவதை இத் தேர்தல் நிரூபிக்கிறது. இ. காங்கிரஸ் ஆதரவையும் பெற்ற இந்த ஊழல் புகாரை விசாரிக்க, எதிர்க் கட்சி உறுப்பினர்களை உள்ளடக்கிய குழு அமைக்குமாறு சபாநாயகரைக் கேட்டுக் கொண்டார். ஹெக்டே. இக் குழுவுக்குத் தலைவராக இ. காங்கிரஸ் சட்ட மன்றத் தலைவரே செயல்படலாம் என்றும் கூறப்பட்டது. ஆனால் குற்றம் சுமத்திய இரு தரப்பினரும் விசாரணைக் குழுவில் பங்கேற்க மறுத்ததன் மூலம் அசடு வழிகின்றனர். இவ்விஷயத்தில் மிக சாமர்த்தியமாகவும் யாரும் எதிர்பாராத விதமாகவும் செயல்பட்டு மக்களின் மனம் கவர்ந்திருக்கிறார் ஹெக்டே.

கர்நாடக பொதுத் தேர்தலில் ஜனதா வெற்றியும் கனகபுரா உபதேர்தலில் ஹெக்டே வெற்றியும் அகில இந்திய ரீதியில் மீண்டும் மாற்றுக் கட்சி பதவிக்கு வரமுடியும் என்ற நம்பிக்கையைத் தோற்றுவிக்கின்றன. தேச நலனைக் கருதி எதிர்க் கட்சிகள் ஓர் அடிப்படைத் திட்டத்தை வகுத்து ஒன்றுபட்டு ஒத்துழைக்கத் தீர்மானித்தால் நம்பிக்கை நிறைவேறும்.

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா -பாரதியார்

அன்னபூரணி



அனுராதா ரமணன்

வாசற்பக்க காமரா அறையில் சின்னதாய் வட்டமேஜை நடந்து கொண்டிருக்கிறது.... அநேகமாக குடும்ப அங்கத்தினர் அனைவருமே இங்கே ஆஜராயிருந்தனர். மன்னியைத் தவிர... ரகுவைத் தவிர...

மன்னிக்கு இப்படி ஒரு மகாநாடு நடப்பதே தெரியாது. ரகுவுக்குத் தெரியும். உள்ளே, யாரைப் பற்றி என்ன பேசிக்கொண்டிருக்கிறார்கள் என்பதும் அவனுக்குத் தெரியும்.

எல்லாம் யாரைப்பற்றி... மன்னியைப் பற்றித்தான் பேசுவார்கள். பேசும்படியாக மன்னி எந்தத் தவறும் செய்துவிடவில்லைதான்.

அது என்னவோ வீட்டுக்கு மருமகளாக வருகிறவர்களின் சுபாவங்களும், குண விசேஷங்களும் அவளின் மாமியார் நாத்தனார்களுக்கு ஒத்துப் போவதே இல்லை. இங்கேதான் என்றில்லை. எல்லாக் குடும்பங்களிலும் அநேகமாக இப்படித்தான்.

சாதாரணமாகவே நாக்கைச் சுழட்டுபவர்களுக்கு, மன்னியின் வரவு லாலாக் கடை கோதுமை அல்வாவாக நான் முழுக்க மென்று கொண்டே இருக்க வசதியாய் அமைந்து விட்டது.

''நீ வீணாப் புலம்பிப் பிரயோசனமேயில்லேம்மா. 'கல்யாணமான அன்னிக்கே அவ நம்ம ரகுவை இழுத்துக் கட்டிண்டு, முத்தம் கொடுத்தா இல்லே, அப்பவே எனக்குச் 'சோரேர்'னுது. 'என்னடா, இவ மச்சினன் கிட்ட நடந்துக்கற முறையே சரியில்லையே'ன்னு... நான் உன்கிட்டச் சொன்னேன். அப்போ உனக்கு அது பெரிசாப் படல்லே.''

ரகுவின் தமக்கை சரோ நீட்டி, நீட்டித் தாயிடம் சொல்கிறாள்.

''அப்போ ஏதோ ரெண்டுங்கெட்டான்னு நினைச்சேன்டி... இப்பத்தானே தெரியறது.. இது சனியன், நம்ம குடும்பத்தை அவமானப்படுத்தறதுக்குன்னு வந்திருக்குன்னு''

ரகுவினால் இதற்கு மேல் இந்த நாராசத்தைச் சகித்துக் கொண்டிருக்க முடியவில்லை. எழுந்து சமையலறைப் பக்கம் போகிறான்.

மன்னி, அங்கேதான் ஏதோ டப்பாவைக் குடைந்து கொண்டிருக்கிறாள்.

''என்ன ரகு... காப்பி வேணுமா...''

''இல்லே மன்னி... சும்மாத்தான் வந்தேன். என்ன பண்றேள்?''

''வேலைக்காரி கண்ணம்மாவோட குழந்தை அவளை வேலை செய்ய விடாம 'நைநை'ன்னு அழுதுண்டே இருக்கு. அவளானா, ஆத்திரத்துல முதுகுலே ரெண்டு வைக்கறா. அடியத்தாங்கக் கூட அதுக்குச் சக்தி இல்லே.... அக்குழந்தைக்கு ஏதாவது திங்கக் கொடுக்கலாம்னு வந்தேன்... நேத்து மத்தியானம் எதிர் வீட்டுக் குழந்தை பிறந்த நாள்னு கல்கண்டு கொண்டு கொடுத்ததோல்லியோ... அதை இங்கேதான் டப்பாவுல போட்டு வச்சேன். தேடறேன்...''



மன்னி, அவனைப் பார்த்துப் புன்னகைக்கிறாள்.


ரகு, அவளையே ஒரு கணம் இமைக்காமல் பார்க்கிறான்.

இந்த மன்னியைப் பற்றி எத்தனை அபாண்டமாய்ப் பேசுகிறார்கள் இவர்கள்....

மன்னியின் பெயர் ஜானகி. ரகுவின் அண்ணா இவளின் கணவன் — 'ஜானா' என்றழைப்பான். ஆனால் ரகுவுக்கு என்னமோ இவளை 'அன்ன பூரணி' என்று கூப்பிட வேண்டும் போல இருக்கும்.

அன்னபூரணிதான். ஒரு கையில் அன்னம் நிரம்பிய பாத்திரமும் மறு கையில் கரண்டியுமாக... உலகத்தில் உள்ள சகல ஜீவராசிகளின் பசியையும் தீர்ப்பவளாக.. சமுத்திரம் போலக் கருணை உள்ளவளாக...

இன்று, இவளைப் பற்றி வாய் கிழியப் பேசும் சரோ, சற்று முன் இடுப்பில் ஒரு துண்டைக் கட்டிக் கொண்டு இவளெதிரில் உட்கார — இவள் மங்கு மங்கென்று எண்ணெய் தேய்த்து விட்டிருக்கிறாள்...



''சரோ, தலை இந்தச் சூடு சுடறதேடி யம்மா... வாரத்துல ஒரு தடவைகூடவா எண்ணெய் தேய்ச்சுக்க ஒழியாது... உம்?''

அன்று, கல்யாணப் பந்தலில் ரகுவைக் கட்டி முத்தமிட்டதைப் பெரிய விஷய மாகச் சொல்பவனுக்கு — ஜானகி தன்னிடம் நடந்து கொள்வது மட்டும் வித்தியாச மாகப் படவில்லையே... ஏன்?

இத்தனைக்கும் அன்று ரகுவுக்கு வயசு பதினாறு. ஜானகிக்கு இருபத்தி மூணு. சொந்தத் தம்பியாக இருந்தால் இழுத்து முத்தமிட மாட்டாளா...

தப்பென்றால் எல்லாமே தப்புத்தான்.

அவள் அப்படி அணைத்தபோது ரகுவுக்குக் கூடக் கொஞ்சம் சங்கடமாகத்தான் இருந் தது. கல்யாணத்துக்கு வந்திருந்த அவனது சிநேகிதர்கள் கூட ஒரு மாதிரியாகச் சிரித் தனர்....

பெண்ணின் அணைப்பும் மெத்தென்ற நெஞ்சில் தலையைப் பதித்தபோது ஏற்பட்ட இதமும் புதுசாய்.... கொஞ்சம் சந்தோ ஷத்தையும், நிறையச் சங்கோசத்தையும் தரக் கூடியதாய்...

ஒரு விநாடிதான் அந்தத் தடுமாற்றம். அதற்குப் பிறகு எதுவுமே விகல்பமாய்ப் படவில்லை அவனுக்கு. இத்தனை நாள் தொலைந்து போயிருந்த தாயை, இப்போது தான் தேடிக் கண்டுபிடித்தாற் போல் இருந்தது...

இன்று இவள் இந்த வீட்டுக்கு வந்து பத்து வருடங்கள் ஆகிவிட்டன. இத்தனை நாட்களில் யாருக்கு இவள் சுபாவம் புரிந் ததோ இல்லையோ... ரகுவுக்கு அத்துபடி யாகி விட்டது.

அவள் கணவன் ஸ்ரீதரன், தன் சிநேகிதர் களை முன்பெல்லாம் அடிக்கடி அழைத்து வருவான். பெண்டாட்டி வந்த பிறகு கொஞ்சம் தயங்கினான்.

ஒரு நாள்—

அருள்வாக்கு

பழுத்த நிலையை நாம் அடைவதற்கு முன் மொட்டாக, பூவாக, பிஞ்சாக, காயாக இருந்துதான் முதிர வேண்டும். பழுக்கும் நிலைவரைக்கும் பொறுமையா கத்தான் இருக்க வேண்டும். காயாக இருக்கும்போதே பழமாவதற்கு அவ சரம் காட்டி. வெம்பி விழுந்து விட்டால் பலன் இல்லை.



ஸ்ரீதரன் வீட்டு ஹாலில் தன் சிநேகிதர் இருவரோடு பேசிக் கொண்டிருந்தான். ஒருத் தன் பரசு, இன்னொருத்தன் டவுனில் கடை வைத்திருக்கும் ரஹீம்.

பேச்சு முடிவே இல்லாமல் நீண்டு கொண்டே போயிற்று. சாப்பாட்டு நேரம் கடந்து வெகு நாழிகையாகி விட்டது.

''இந்தா ஜானு... உன் புருஷனைச் சாப் பிடக் கூப்பிடு போ...'' — மாமியார் சொன்னாள்.

இவள் விடுவிடெனப் போய் அவர்களெதி ரில் நின்றாள்.

''சாப்பிட வாங்கோ மூணு பேரும்.''

''சாப்பாடா... ஓ, ரொம்ப நேர மாச்சு இல்லே... ஸ்ரீதரா, அப்ப நாளைக்குக் காலைல பார்த்துக்கலாம். நான் கிளம் பட்டுமா?''

ரஹீம் எழுந்து விட்டான். பின்னாலேயே பரசுவும் ஸ்ரீதரனுமே, இவர்களை வழி யனுப்ப எழுந்து விட்டான்.

ஜானகிதான் விடுவதாயில்லை.

''நன்னாத்தான் இருக்கு. இப்பவே மணி பத்தாறது. இத்தனை நேரத்துக்கு மேலே உங்க ரெண்டு பேருக்கும் வீடு கூட இல்லே... லாட்ஜுலே தங்கி யிருக்கிறதா இவர் சொன்னார். எங்கே போய்ச் சாப்பிடுவேள்... கையைக் காலை அலம்பிண்டு வாங்கோ... இதோ ஒரு நிமிஷத்துல இலை போட றேன்...''

அன்று வீட்டில் ஏற்பட்ட கொதிப்பு...

ஜானகி, பரிந்து பரிந்து பரிமாறினாள். பரசு போதுமெனக் கையால் இலையை மறைத்துக் கொண்டபோது, 'சட்'டென அவனது கையை நகர்த்திவிட்டு இன்னொரு கரண்டி சோற்றை எடுத்து அவனது இலை யில் போட்டபோது...

ஸ்ரீதரன் பார்வையிலேயே மனைவியை எரித்தான். அவள், இதையெல்லாம் கண்டு கொண்டால்தானே...ரகு மாத்திரம்கையைக் கட்டிக் கொண்டு சுவரில் சாய்ந்தபடி, மன்னியின் முகத்தையே பார்த்துக்கொண் டிருந்தான்.

''உங்க வயிறு பசிக்கிறது. வாய் மாத் திரம் மேலுக்கு 'வேண்டாம், வேண்டாம்'னு சொல்றது.... எனக்குத் தெரியறதே...''

பரசு, தலையைக் கவிழ்த்துக் கொண் டான்.

இந்த நிகழ்ச்சிக்குப் பின், இவர்களிரு வரும் இவளைப் பார்க்கும் பார்வையில் தாயைப் பார்க்கும் பரிவும் பாசமும்தான் சுடர் விடும். மற்றப் பெண்களைப் பார்க்கை யில் தென்படும் சலனம் எதுவுமே இருக்காது.

ஆனால்—

குடும்பத்தினர் இவளை ஏதோ செய்யக் கூடாத தவற்றைச் செய்து விட்டவளைப் பார்ப்பது போலத்தான் பார்க்கத் தொடங் கினர்.

ஸ்ரீதரன் சில சமயங்களில் சற்று அழுத்த மாகவே கண்டித்திருக்கிறான்.

''நீ, இப்படி எல்லார் மேலேயும் விழுந்து பழகறது அத்தனை நன்னாயில்லே ஜானு... அம்மாவுக்கு இதெல்லாம் பிடிக்கல்லே.''

''அப்படி என்ன தப்பாப் பழகிட்டேன்... எல்லார் கிட்டேயும் ஒரே மாதிரிதானே பழகறேன்...''

''அதைத்தான் சொல்ல வந்தேன். எல்லார் கிட்டயும் இப்படி ஒரே மாதிரி பழகறது தப்பில்லையா... அகமுடையானும், அவன் சிநேகிதன் பரகவும், ரஹீமும் ஒண்ணு... நான் சாப்பிடறச்சே என்கையை ஒதுக்கிட்டுக் சாதம் போடலாம். அது மாதிரி அவா கிட்டயும்... சேச்சே... துளிக்கூட ரசிக்கும் படியா இல்லே...''

இவன் இப்படிச் சொல்லிவிட்டு, எங்கே தன் வார்த்தைகள் இவளை ரொம்பவும் துன்புறுத்தி விட்டதோ என்கிற ஆதங்கத்துடன் இவள் முகத்தை ஏறிட்டுப் பார்க்கிறான்.

அவளோ புன்னகைக்கிறாள். அந்தப் புன்னகையைக் கண்டதும் இவனது ஆதங்கம் மறைந்து ஆத்திரம்தான் பற்றிக் கொண்டு வருகிறது.

''என்ன சிரிப்பு?''

''ஒண்ணுமில்லே... சின்ன வயசுலே-யிருந்து என் குணம் இப்படி... யாரையும் பேதம் பிரிச்சுப் பார்க்க முடியல்லே...''

''அதுக்காக? புருஷனுக்கும் மத்தவனுக்கும் கூட பேதம் தெரியாம நடந்துப்பியா?''

இவன் இப்படிக் கேட்பது, அந்த அறையை யொட்டிய நடையில் அமர்ந்திருக்கும் ரகுவின் காதில் விழும்போது, நடுக்கத்துடன் காதைப் பொத்திக்கொள்கிறான், அவன்.

ஆனால் ஜானகியின் பதிலோ...

''நான் இப்படிச் சொல்றேன்னு கோவிச்சுக்காதீங்கோ... எனக்கு நினைவு தெரிஞ்சு அதாவது, ஏழெட்டு வயசுல... எங்க அப்பாவைப் பார்க்கறப்பவே எனக்கு மனசுல மரியாதைக்குப் பதிலா பரிவுதான் அதிகமா யிருக்கும். என்னமோ சின்னக் குழந்தையைப் பார்க்கிற மாதிரி... எல்லாருமே குழந்தைகள் மாதிரியும், அவாளுக்கு வேண்டியதைச் செய்யற அம்மாவா என்னையுமே நினைச்சு... உங்களைக் கூட என்னால எப்பவும் புருஷன்கிற கண்ணோட்டத்திலே பார்க்க முடியறதில்லே...''

''பின்னே எப்படி என்கூட, வாழுறே?''

அண்ணா இப்படிக் கேட்டிருக்கக் கூடாது என்றே ரகு நினைத்தான். ஏனெனில் அவனுடைய இந்தக் கேள்விக்குப் பதில் சொல்கையில் மட்டும் மன்னியின் குரல் கொஞ்சம் தழுதழுத்தாற் போல...

''இது கொஞ்சம் கஷ்டம்தான்... உங்க கூட இருக்கிற சமயத்துலதான், நீங்க என் புருஷன்கிறதும், என் வயசு இருபத்தியாறு தான்கிறதும் நினைப்பிலேயே வர்றது.... என்னால இந்தச் சூழ்நிலையில ரொம்ப நேரம் இருக்க முடியறதில்லே...''

''பரகவைத் தொடறப்ப மட்டும்...''

ஸ்ரீதரன் மீதியை முடிக்கவில்லை.

''இலை முன்னாடி அவர் உட்கார்ந்திருந்தப்போ, ஏதோ தெரியாத வீட்டில சாப்பிட உட்கார்ந்த கூச்ச சுபாவமான குழந்தை மாதிரிதான் தோணித்தே தவிர.. அவர் ஒரு வளர்ந்த மனுஷன்னே எனக்குத் தோணலே.

கண்ணன்: ஏம்பா சர்வர்! இதுக்கு முன் நீ சலவைக் கடையில் இருந்தாயா?
சர்வர்: எப்படி சார் இவ்வளவு சரியாகக் கண்டு பிடிக்கிறீர்கள்?
கண்ணன்: தோசை ஒண்ணு கொண்டா என்றால், 'அர்ஜண்டா? ஆர்டினரியா?' என்று கேட்டாயே அது போதாதா?
—லலிதா செல்லப்பா



என் கண்ணுக்குத் தெரிஞ்சது எல்லாம் அவா வயிறுதான். பரகு வயிறுன்னு என்ன... ரஹீம் வயிறுன்னு என்ன... உங்க வயிறுன்னு என்ன... எல்லாருக்கும் பசி ஒண்ணுதான். அன்னிக்கு நான் சாதம் போடலைன்னு...''

''ஒண்ணும் குடிமுழுகிப் போயிருக்காது. ஏதாவது ஒரு ஹோட்டல்லே சாப்பிட்டுட்டுப் போயிருப்பா....''

ஸ்ரீதரன் கடுகடுப்பாய்ச் சொன்னான்.

மறுநாள் காலையில் காப்பி கலந்து கொண்டிருந்த மன்னியைப் பார்க்கவே முடியவில்லை ரகுவினால். தன் அண்ணன் அபசாரம் செய்து விட்டாற் போல...

ஜானகியின் முகமும் வாடித்தான் இருந்தது. ஆனால் கொஞ்ச நேரத்துக்குத்தான். இவனைப் பார்த்ததும் பூவாய் மலர்ந்து விட்டது. காப்பியைக் கலந்து கொண்டு வந்து இவனருகில் வைக்கிறாள்.

''தொடாதே ரகு... சுடறது.... இரு... நான் ஆத்தித் தரேன்...''

''நான் என்ன சின்னக் குழந்தையா மன்னி... காப்பியை ஆத்திக் குடிக்க எனக்குத் தெரியாதா...''

—ரகு சிரிக்கிறான்.

''போறுமே நீ காப்பி ஆத்தற லட்சணம். ஒண்ணு பேப்பர்லே மூழ்கி, பக்கத்துல காப்பி இருக்கிறதையே மறந்து போயிடுவே. இல்லேன்னா சுடச் சுட வாயிலே வச்சுண்டு குதிகுதின்னு குதிப்பே...''

இவனிடம் மட்டுமில்லை. ஸ்ரீதரனின் தகப்பனாரையும் ஒரு குழந்தையாகவே தானே அவள் நடத்துகிறாள்?

''அப்பா... சூடா ரசம் சாதமா பிசைஞ்சு எடுத்துண்டு வரட்டுமா...''

''இப்ப அதுவும் வேண்டியிருக்கலேம்மா.''

''உங்களுக்கு என்ன தெரியும்.. பசிச்சா சொல்லக் கூடத் தெரியாது... நேரங்கெட்ட நேரத்துல பசிக்கிறதுன்னு பரப்பேள்...''

இவள் இப்படி அலட்டும்போது மாமனார் கிழவர் வாத்சல்யத்துடன் மருமகளைப் பார்க்க, மாமியார் 'ணக்'கென்று தோளில் முகவாயை இடித்துக் கொள்வார்.

''ஆமா... இத்தனை வருஷமா நாமதான் இவருக்குச் சோறு போட்டுப் பார்த்துண்டோம். சொல்ல வந்துட்டா....''

ஹாட் டச்

பிக்காஸோ போன்ற பிரபலர்களின் ஓவியங்களை அச்சாய் நகலெடுக்கிற ஒரு திறமைசாலி, ஏலத்தில் அதையே பெரும் விலை கொடுத்து வாங்கி, ஏமாந்த பணக்காரன் தலையில் கட்டுகிற அவன் நண்பன் இந்த ரகசியத்தை அறிந்து கொண்டு கறுப்பு தபால் (புரியவில்லையா? 'பிளாக் மெயில்') செய்கிற வில்லி. அவளின் அடியாள் என்று கொஞ்சம் கொஞ்சம் திகிப்பான கதை. திறமைசாலி ஓவியன், அவனது அருமைக் காதலி, அந்தப் பொது நண்பன் — இவர்கள் மூவரும் வில்லத்தனத்துக்கு ஒரு வில்லத்தனம் செய்து ஏமாற்றுகிற செப்பிடி வித்தைதான் படம்.

கதாநாயகன் வேன் ரோஜர்ஸ் பரவாயில்லை. அவன் ஜோடி மேரி ஃபிரான்ஸ் பிஸியர் போன்ற முகங்கள் நம் சினிமாவில் இரண்டு நாட்கள் கூடத் தாக்குப்பிடிக்காது.

ஓரளவுக்கு விறுவிறுவென்று எடுத்துச் செல்கிற ரோஜர் வரும் அவ்வப்போது நம் பொறுமைக்குச் சவால் விடுகிறார்.

சென்ஸாருக்குத் தப்பின இரண்டு மூன்று இடங்களில் கூட ஜிலுஜிலுப்புக்குப் பஞ்சம்!

ஏ. ஸி. இல்லாம இயேட்டரும் அதன் நாற்காலிகளும் சூடாய் இருந்ததோடு சரி.

—ஜெய மன்மதன்



''நீ ஏன் அவளை இந்த அளவுக்குப் பேச விடறே... அவதான் ஒட்டுப் புல் மாதிரி சஷிக்கிறுளே... ரகுவையும் இழுத்து வச்சக் கொஞ்சறு... அப்பாவையும் மடியில போட்டுக்காத குறையாச் சீராட்டறு... எல்லாம் நீ கொடுத்த இடம்தான்...''

சரோ, தாயிடம் ரகசியமாய் முணு முணுப்பாள்.

''அவதான் இப்படி இருக்கான்னு உங்க அப்பாவுக்காவது புத்தி வேண்டாமோ... அது என்ன அவ சொல்றதுக்கெல்லாம் தலையைத் தலையை ஆட்டிண்டு...''

ஜானகிக்குத் தன் குழந்தைகள், பிறர் குழந்தைகள் என்ற வித்தியாசமும் கிடையாது. அவளது ஒரே மகன் முரளியுடன் விளையாட எப்பொழுதுமே பத்துப் பதினைந்து சிறுவர்கள்... அத்தனை பேருடனும் சரி சமமாய் உட்கார்ந்து விளையாடுவாள் அவள்.

ரகுவுக்கே ஞாயிற்றுக் கிழமை ஏன்தான் வருகிறதோ என்றிருக்கும். வீடு முழுக்க பாப்பா மலர் நடத்த வந்திருக்கும் குழந்தைகள் மாதிரி...

''மாமீ... குடிக்கத் தண்ணிதாங்கோ...''

''தண்ணி என்னடி பானகம் கரைச்சுண்டு வரேன்.''

''ஹைய்யா பானகமா... எப்படிமாமீ...''

''இது என்ன பிரமாதம்... வெல்லத்தைத் தண்ணியில் கரைச்சு ரவையூண்டு ஏலக்காயையும் சுக்கையும் தட்டிப் போட்டா பானகம்...''

குழந்தைகள் அத்தனையும் சர்க்கரை மிட்டாயை ஈ மொய்ப்பது போல, அவளை மொய்த்துக் கொள்ளும்.

சரோ, தலையில் துணியைக் கட்டிக் கொண்டு படுப்பாள். அவளின் தாய், வெளியே வந்து மொத்தமாய் இரைச்சல் போடுவாள்.

''எல்லோருக்கும் இங்கே என்னடா வச்சுக் கிடக்கு... அவங்க அவங்க வீட்டுக்குப் போய் விளையாடுங்கோ. மத்தியான நேரத்துல சித்தத் தலையைச் சாய்க்கலாம்னு முடியாதே... ஏண்டி ஜானு. ஒவ்வொருத்தியப் பார்த்தாவது உனக்குப் புத்தி வரவேண்டாம்... இந்தத் தெருக்காரிங்க பாடு தேவலே. பகல் நேரத்தில பிள்ளை குட்டி உபத்திரவம் இல்லாம, எல்லாத்தையும் நம்ம வீட்டுக்கு அனுப்பிட்டு நிம்மதியா இருக்காளுங்க... முதல்லே எல்லாத்தையும்விரட்டித்தொலே.''

ஜானகி மௌனமாய் நிற்பாள். முரளி, சட்டென ரகுவின் அருகில் படுத்துத் தூங்குவது போலப் பாவனை செய்வான். குழந்தைகள் மூலைக்கொன்றாய்ப் பறக்கும்.

அடுத்த அரை மணி நேரத்துக்கு ஊசி விழுந்தால் சத்தம் கேட்கும். வீடு அத்தனை நிசப்தமாக இருக்கும்.

ரகுவுக்கே அந்த மௌனம் ஆச்சரியமாயிருக்கும். மெள்ளக் கண்ணைத் திறந்து பார்ப்பான். பக்கத்தில் படுத்திருந்த முரளி காணாமல் போயிருப்பான். ஜானகியின் குரல் மட்டும் சமையல் அறையில் கிசுகிசுப்பாய்...

அதற்கு மேலும் ஆவலை அடக்க மாட்டாதவனுய்ச் சமையலறைக்குள் எட்டிப் பார்த்தால்....

துடைப்பம் பட்டுச் சிதறிய சிற்றெறும்புகள் அடுத்த சில விநாடிகளிலேயே ஒன்று சேர்வது போல...

முரளியுடன் தெருக் குழந்தைகள் அத்தனே பேரும் ஜானகியைச் சுற்றி அமர்ந்திருப்பார்கள். அவள், பெரிய பாத்திரம் நிறைய தயிர்ச் சாதத்தைப் பிசைந்து வைத்துக் கொண்டு ஒவ்வொரு பிஞ்சுக் கைகளிலும் உருட்டிப் போட்டுக் கொண்டிருப்பாள்.

''அடேய்... பராக்குப்பார்க்காதே, சாதம் வழியறது பார்.. இந்தாடீ மீனு... முரளி மாதிரி சாதத்தை உள்ளங்கையிலவச்சுண்டு கட்டை விரலாலே சின்னதாய்க் குழிச்சுக்கோ... அப்போதான் குழம்பு விடச் சௌகரியமா யிருக்கும்...''

ஜானகி பரம ரகசியமாய்ச் சொல்லுவாள். ரகுவைப் பார்த்ததும் 'உஷ்' எனச் சாடை காட்டுவாள், 'நீயும் வரயா' எனச் சங்கேத மொழியிலே கேட்பாள்.

உச்சி வெயிலில் ஜில்லென்ற தயிர் சாதம், வயிற்றில் இறங்கியவுடன், அடங்கிக் கிடந்த சத்தம் மெள்ள, மெள்ள உயிர் பெறும்.

''அடிக் குழம்பு... கட்டி மாம்பழம்... போனு வராது... யாருக்கு வேணும்...''

அவள் காலிப் பாத்திரத்தை ஒட்ட வழித்தபடி கேட்க, எல்லாம் தன்னே மறந்து கத்தும்.

''நேக்கு...நேக்கு...''

இவள், இந்தக் குழந்தைகளிடம் நடந்து கொள்வது போலத்தான் பெரியவர்களிடமும் நடந்துகொள்கிறுள். அதை ஏன் புரிந்து கொள்ள மாட்டேன் என்கிறுர்கள் இவர்கள்.

அன்று சரோ ரகுவை வைத்துக்கொண்டே தான் தாயிடம் சொல்கிறுள்.

''இதப் பாரு.. மன்னியோட சுபாவம், என் புகுந்த வீட்டு மனுஷா வரைக்கும் பரவியிருக்கு. 'உங்க மன்னி, இன்னமும் அப்படியேதான் இருக்காளாம்... துளிக்கூட மாறவே இல்லேயான்னு எல்லாரும் கேட்கறு... எனக்கு நாக்கைப் பிடுங்கிக்கலாம் போல இருக்கு. உன் மாப்பிள்ளே கூட இங்கே வரத் தயங்கறுர். கொஞ்சம் கவனிக்கலேன்னு, உங்க மன்னி சாதத்தைப் பிசைஞ்சு எடுத்துண்டு எனக்கு ஊட்டவே வந்துடுவாங்கறுர்... இவ இருக்கிற வரைக்கும் இந்த வீட்டில நுழையவே பயமா இருக்கும்!''

ரகுவிற்குச் சரோவின் கன்னத்தில் ஓங்கி அறைய வேண்டும் போல இருக்கிறது.

'நல்ல மனசைப் புரிந்து கொள்ளத் தெரியாத இவர்களெல்லாம் என்ன ஜென்மங்கள்...'

எப்பொழுதும் சிரித்துக் கொண்டே இருக்கும் ஜானகியையும் அழவைக்கும்படியாக அன்று அந்தச் சம்பவம் நடந்து விட்டதே...

யார் கண் பட்டதோ.. யார் இட்ட சாபமோ...

பத்து வயசு முரளி முதல் நாள் காலையில் தாயின் கையால் எண்ணெய் தேய்த்துக் குளித்தவன், பகல் வெய்யிலில் தெருவில் போன ஐஸ்கிரீமையும் வாங்கிச் சுவைத்தவன், விளக்குவைக்கும் நேரத்தில் தொண்டை வலிக்கிறது என்று படுக்க....

உடம்பு முழுவாய்க் கொதிக்கிறது..

''கொஞ்சம் போற கஷாயம் வச்சுக் கொடு''

மாமியார் மருமகளிடம் சொல்கிறுள்.

ஆனல் ஒரு உத்தரியத் தண்ணீர் கூடத் தொண்டையில் இறங்கவே இல்லேயே...

''பொழுது விடியட்டும் டாக்டர் கிட்டே எடுத்துண்டு போகலாம்....''

ஸ்ரீதரன் சொல்கிறுன்.

பாவம்... முரளிக்கு மட்டும் மறுநாளேயப் பொழுது விடியாமலே போய்விட்டதே...

குழந்தை போன பிறகு டாக்டர் வந்து சொல்கிறுர், 'இது டிப்தீரியா' என்று.. யாருக்கு இந்த வியாதிகளைப் பற்றி யெல்லாம் தெரிந்திருக்கிறது...

ஜானகிக்கு... எல்லாருக்கும் பரிந்தூட்டும் அன்னேயான அவளுக்கு... இப்பேர்ப்பட்ட துக்கம் தேவையா?

அவளே யாராலும் சமாதானப்படுத்தவே முடியவில்லே. குடும்பமே கண்ணீர் விட்டு அழும்பொழுது யார், யாருக்கு ஆறுதல் சொல்ல முடியும்?

இரண்டு நாட்கள் எழுந்திருக்கவே யில்லே ஜானகி. மூலேயில் சுருண்டு கிடக்கிறுள்.

மூன்றும் நாளிரவு பரபரவென எழுந்து உட்கார்ந்தவள், ரகுவை அருகில் அழைக்கிறுள்.

''ரகு....''

''என்ன மன்னி....''

''சாப்பிட்டியா?''

''மன்னி!''

ரகு, கண்களில் வழியும் நீரைத் துடைக்கவும் மறந்து அவளேயே பார்த்துக் கொண்டிருக்க....

அவள் புடவைத் தலேப்பினுல் முகத்தைத் துடைத்தபடி 'விருட்'டென எழுந்திருக்கிறுள்.

''அப்பா, அண்ணு ஒருத்தருமே சாப்பிடலேயா....''

''இருக்கட்டும் மன்னி... சாப்பாடுதானு முக்கியம்...''

''நன்னு யிருக்கு... அப்பாவால பட்டினி கிடக்க முடியுமோ? ஏற்கனவே உடம்பு சரியில்லாதவர்... அண்ணுவும்தானுகட்டும்.. அழுதுண்டே. இருந்தா ஆபீஸுக்குப் போக வேண்டாமோ... அரை மணி நேரம் பசி தாள மாட்டாரே... எல்லாரும் வாங்கோ... சாதம் போடறேன். நான் ஒரு மக்கு. என் துக்கத்துல மத்தவாளே மறந்தே போயிட்டேன்....''

ரகு மாத்திரமில்லே, சரோவும், அவர்களின் தாயும் கூட இவளேயே பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

'இது என்ன மனசு... இத்தனே துக்கத்துலேயும், பிறத்தியார் பசியையே நினேச்சுண்டு....'

'அன்னபூரணி....'

ரகுவின் நாக்கு நுனி வரையில் வந்த பெயரைச் சிரமப்பட்டு அடக்கிக் கொள்கிறுன்.

பெரியவாளுக்குப் பிடித்த காரியம்.1

சென்னை அயனவரத்தில் கொன்னூர் நெடுஞ்சாலையிலுள்ள 383ஆம் எண் இடத்திற்கு ஒரு விசேஷம் உண்டு. 'மதராஸ் பிஞ்ச்ராபோல்' என்ற பெயரைத் தாங்கியுள்ள இந்த இடத்தில் சுமார் 1200 பசு மாடுகளைப் பராமரித்து வருகிறார்கள். இதில் என்ன விசேஷம் என்று கேட்கலாம். இவை சாவின் கோரப் பிடியிலிருந்து மீட்கப்பட்டவை. புனர் ஜென்மம் எடுத்து வாழ்பவை. கசாப்புக் கடைக்காரரின் கத்தி இவற்றைப் பதம் பார்க்கும் முன் இவற்றை மீட்பவர் யார்?

பகவான் மகாவீரர் அகிம்சை பிரசார சங்கம் இந்த உயரிய பணியை அமைதியாகச் செய்து வருகிறது என்று தெரிவித்தார் இதன் கௌரவ ஆலோசகர் திரு கருப்பையா, தமிழ்நாடு ஆளுநர், முன்னாள் ஆளுநர் சாதிக் அலி, பெரியவர் பக்தவத்சலம், நீதிபதி கிருஷ்ணசாமி ரெட்டியார், நீதிபதி கோகுலகிருஷ்ணன் எல்லாம் இந்தச் சங்கத்தின் புரவலர்கள். வெறும் அலங்காரப் புரவலர்கள் அல்ல. ஆர்வத்துடன் உழைக்கிறவர்கள்.

முன்பெல்லாம் மாதவரம் பால் பண்ணையில், அங்குள்ள கால்நடை டாக்டர்களைக் கைக்குள் போட்டுக் கொண்டு, சில பால்காரர்கள் தொத்தலான பசுமாடுகளை அடிமாடுகள் என்று சர்ட்டிபிகேட் வாங்கிக் கசாப்புக் கடைக்கு விற்றுவிடுவார்களாம். திரு எம். கண்ணப்பன் அவர்கள் தி. மு. க. அமைச்சராக இருந்தபோது இந்தச் சங்கம் நீதிபதி கோகுல கிருஷ்ணன் அவர்களின் உதவியுடன் அவரை அணுகி, இவ்வகை மாடுகளை நியாயமான ஒரு தொகைக்கு இச்சங்கத்துக்கு விற்றுவிடக் கோரிக்கை விடுத்தனராம். குருடான மாடுகள், கறவை நின்றுபோன மாடுகள், அடிமாடு என்று சந்தேகம் வருகிற மாடுகள் எல்லாவற்றையும் இச்சங்கம் வாங்கி, பிஞ்ச்ராபோலில் சேர்த்தார்களாம். இது இவர்களது முதல் கட்டப் பணியில் கிடைத்த வெற்றி.

அப்போது தி. மு. க. எம். பி.யாக இருந்த திரு காதர் ஷா அவர்களிடம் நாங்கள் சொன்னபோது, அவர் எங்கள் செயல்களை ஆதரித்துப் பசு வதையை எதிர்த்துத் தில்லிக்குக் கடிதம் எழுதினார். தில்லியிலிருந்து வந்த மத்திய அரசின் குழு, முதலில் விவரங்களை திரு காதர் ஷாவிடம்தான் கேட்டுப் பதிவு செய்து கொண்டது! அப்புறம் திரு கிருஷ்ணசாமி ரெட்டியார், திரு பக்தவத்சலம், ரெவரண்ட் ஃபாதர் ஏ. ஜே. அடைக்கலம் அவர்களும் குழுவினருக்குச் சாட்சியம் அளித்தார்கள்.''

மோதிலால் நேருவின் தோழரும், 'முஸல்மான்' இதழின் ஆசிரியருமான, பல்லாவரத்தில் இருந்த பெரியவர் மௌலானா அப்துல் லத்தீஃப் பாருக்கி, பசு வதைத் தடுப்பில் மிகத் தீவிரமாக இறங்கி இவர்களுக்கு ஆதரவும் ஒத்துழைப்பும் கொடுத்தார்.

மத்திய அரசுக் குழு இவர்கள் கருத்தை எல்லாம் கேட்டறிந்த பிறகு, காஞ்சிப் பெரியவரை நேரில் பார்க்க வேண்டும் என்று விரும்பினார்கள். 27-7-1976 அன்று நான்கு கார்களில் இவர்கள் எல்லோரும் காஞ்சிப் பெரியவர்களைச் சந்தித்தபோது, ''உலக நன்மையைக் கருதி இவர்கள் இந்த வேண்டுகோளை விடுக்கிறார்கள். அதை நிறைவேற்றி 'வைத்தால் போதும், என் மனமார்ந்த ஆசிகள்!'' என்றார் சுருக்கமாக.

சில நாட்களிலேயே, 30-8-76 அன்றே, அரசு பசு வதைத் தடுப்புச் சட்டம் பிறப்பித்தது. இது இவர்களது முயற்சியின் இரண்டாவது கட்ட வெற்றி.



○ சென்னை பிஞ்ச்ராபோலில் பசுக்கள்



✖ கருப்பையா



அமைச்சர் கோமதி சீனிவாசன், போலீஸ் கமிஷனர் ஸ்ரீபால், செயலாளர் சேத்தியா, தலைவர் மோகன் மல்ஜி சோர்டியா.

இப்போது மூன்றாவது கட்டப் பணியாகக் கேரளாவுக்கும், மேற்கு வங்கத்துக்கும் அடி மாடுகளை ஓட்டிச் சென்று கசாப்புக் கடைக்கு விற்கும் கொடுமையைத் தடுக்க முயன்றிருக்கிறார்கள். அ.தி.மு.க. அரசில் இந்த முயற்சிக்கும் வெற்றி கிடைத்திருக்கிறதாம்.

பசு பாதுகாப்பில் இவர்களை முன்னுதாரணமாகக் காஞ்சிப் பெரியவர்களே பாராட்டியிருக்கிறார். நா. மகாலிங்கம் அவர்கள் தலைமையில் நடந்த சேலம் மாநாட்டில் ''சத்தம் போடாமல் சென்னையில் ஒரு நல்ல காரியம் செய்து வருகிறார்கள்!'' என்று பாராட்டியபோது, அருகிலிருந்த ஆளுநர் பட்வாரி சிலிர்த்துப் போய்விட்டார்.

ஊதியம் கொடுத்துப் பிரசாரகர்களை நியமித்து நாடெங்கும் பிரசாரம் செய்கிறார்கள். இவர்கள். திராவிடர் கழகத்தைச் சேர்ந்த திரு வேலாயுதம் அவர்கள் மிகத் தீவிரமாகப் பசு வதை எதிர்ப்பில் ஈடுபட்டு உழைப்பதைப் பெருமையுடனும் நெகிழ்ச்சியுடனும் தெரிவித்தார் திரு கருப்பையா.

திருவேற்காடு, பழநி, வடபழநி, திருத்தணி ஆகிய கோவில்களுக்குப் பக்தர்கள் வேண்டுதல், காணிக்கையாக அளிக்கும் மாடுகளைக்கூட ஏலம் போடுவதைத் தடுத்து நிறுத்தியிருக்கிறார்கள் இச்சங்கத்தினர். இதற்காக இந்து அறநிலையத் துறை ஆணையர் ஒரு ஆணையே பிறப்பித்திருக்கிறார்.

இவர்களது முயற்சிகளுக்கெல்லாம் பின்பலமாக இருப்பவர் திரு மோகன் மல்ஜி சோர்டியா என்ற முதியவர். இவர்தான் சங்கத்தின் தலைவர். தற்போது செயலாளராக இருப்பவர் திரு கே. வி. சேத்தியா.

பிஞ்ஜிராபோல் மானேஜர் சுந்தரமூர்த்தியின் சேவை பாராட்டுக்குரியது.

—தமயந்தி

பிஞ்சராபோல் புகைப்படங்கள்: சுபா



நடமாடும் தெய்வம்

நடமாடும் தெய்வம் என்ற வர்ணனைக்கு ஏற்ப எங்கும் நடந்தே செல்கிறார் பரமாச்சார்யாள். ஏன்?

அதிகாலை சுமார் 3.30 மணி. ஸ்ரீ ஜகத்குரு சந்திர சேகரேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள், உலகமெலாம் ஆழ்ந்த உறக்கத்தில், அமைதியில் ஆழ்ந்திருக்கும் வேளையில், நமது யோக நித்திரையிலிருந்து கண் மலர்கிறார். சில நொடிகளில் சூழ்நிலையெங்கும் நிலவியிருந்த அமைதி மறைந்து பரபரப்பு, கலகலப்பு. 'ஹர ஹர சங்கர! ஜய ஜய சங்கர!'' என்ற கோஷங்கள். நடமாடும் தெய்வத்தின் ''விஸ்வரூப தரிசனத்தை''க் கண்டு பேரின்பம் அடையும் சிஷ்யர்களும் அவ்வூர் மக்களும் பிறவிப் பயன் அடைந்த களிப்பில் திகழ்கின்றனர். சில நிமிடங்களில் பெரியவர் வந்து ரிக்ஷாவின் பின்புறத்தைப் பிடித்துக்கொள்ள, இரு பாலுவும் இரு ஸ்ரீகண்டனும் பெரியவரின் இருபுறமும் வர இரு ஏகாம்பரமும், இரு இந்துவாசனும் ரிக்ஷாவை இழுக்கப் பயணம் தொடர்கிறது. அந்த அதிகாலை வேளையிலும் அந்த ஊர் மக்களும் அருகே கிராமங்களில் உள்ளவர்களும் இரவே வந்து பெரியவரின் இருப்பிடத்தில் கூடியவர்களும் அப்பரம்பொருளைப் பின்தொடர்கின்றனர். சுமார் ஒரு பர்லாங் தொலைவை அடைந்ததும் பெரியவர் நிற்கிறார். நின்று தமது கருணை கடாட்சத்தை அனைவருக்கும் அளிக்கின்றார். நேரம் சுமார் நான்கை நெருங்கிக் கொண்டிருந்தது. அரிக்கேன் விளக்கின் ஒளியில் பெரியவரின் தெய்வீகத் திருமேனி புடமிட்ட பொன்னென, மினுமினுப்பதைப் பார்த்துப்பக்தர்களின் கூட்டம் பேரானந்தத்தை அடைகின்றது. சில நிமிடங்களில் பெரியவர் அனைவரையும் தத்தமது இருப்பிடம் செல்லப் பணிக்கிறார். அக்கருணைத் தெய்வத்தைப் பிரிய மனமில்லாது அவரது கட்டளையைத் தாங்கி, தயங்கி நிற்கிறது பக்தர்கள் கூட்டம். பெரியவரின் திருவுருவம் பார்வையை விட்டு அகலும் வரை அசையாதிருக்கிறது. பின்னர் ஏக்கத்துடன் திரும்புகிறது.

நான் பாரிஜாத மலரின் மென்மையை நினைவுறுத்தும் அவரது பாதார விந்தங்களையே பார்த்துப் பரவசப்பட்டுக்கொண்டே அவரைத் தொடர்கிறேன். ஒரு முறை, பெரியவருடன் நெருங்கிப் பழகிக் கைங்கரியம் செய்த ஒருவர், ''அப்பாதாரவிந்தங்களில் ஸ்ரீசக்ரமும், சங்குசக்கரமும் உள்ளன.'' என்று கூறியது எனது நினைவில் எழுந்தது. மலர்களால் பூஜிக்கப்பட வேண்டிய, மலரினும் மிருதுவான அப்பாதங்கள், கல்லிலும் முள்ளிலும், வெய்யிலிலும், மழையிலும் பனியிலும் உலகத்தாரின் க்ஷேமத்திற்காகவும்

கலாச்சாரத்தின் தொன்மையைக் காக்கவும் வேத உபநிடதங்கள் அழியாதிருக்கவும் தர்மம் தழைக்கவும் நடப்பதைக் கண்டு எல்லாம் வல்ல பரம்பொருளே, இவ்வாறு நடமாடும் தெய்வமாக, நம்மைப் போன்று அறியாமையில் மூழ்கிக் கிடக்கும் மக்களுக்குத் தரிசனம் தர வந்ததோ என்ற எண்ணத்துடன் பெரியவரின்பாதயாத்திரையில் நானும்தொடர்ந்து நடக்கிறேன்.

பண்டரிபுரத்தில் பெரியவர்கள் சிறிது நாட்கள் தங்கியிருந்தபொழுது நடந்த ஒரு நிகழ்ச்சி என் நினைவுக்கு வருகிறது. அப்பொழுது அருகே இருந்த சர்க்கரை ஆலையிலிருந்து அதை நிர்வகிக்கும் அதிகாரி ஒருவர் வந்திருந்தார். அவர் பெரியவர்களிடம், அவரது பாதாரவிந்தங்கள் தமது ஆலையை ஒருமுறை மிதிக்க வேண்டும் என்று வேண்டி, அப்பொழுதே வருவதாக இருந்தால் தமது வண்டியிலேயே அழைத்துப் போய் வந்து விடுவதாகக் கூறினார். பெரியவர் உடனே சிரித்துவிட்டு, ''நான் சக்கரம் வைத்த வண்டியில் ஏறுவதில்லை'' என்று கூறினார். வந்த அதிகாரி மிகவும் ஆச்சரியப்பட்டு, ''இந்த இருபதாம் நூற்றாண்டிலே தாங்கள் இப்படி இருக்க வேண்டுமா? வண்டியில் வந்தால் பல மணி நேரம் மிச்சமாகுமே. அதிகமான இடங்களைக் காண வாய்ப்புக் கிடைக்குமே'' என்று கேட்டார். பெரியவர்கள், ''நான் பதின்மூன்று வயதில் பட்டத்துக்கு வந்த உடனே சக்கரம் வைத்த வண்டியில் ஏறுவது இல்லை என்று சங்கற்பித்துக் கொண்டேன். ஒரு முறை நான் ஒரு ஊருக்குச் சென்று கொண்டிருந்தேன். மழையே பெய்யாமல் இருந்த அந்த ஊரில் என்னவோ தெரியவில்லை, நல்ல மழை பிடித்துக்கொண்டது. போகும் வழியில் இரு புறமும் பள்ளமாகவும் நடுவே சற்று மேடாகவும் இருந்ததால் ஓடும் நீரின் வேகத்திற்கு ஈடுகொடுக்க முடியாமல் அந்நிலத்திலிருந்த ஜீவராசிகள் பலவும் மேட்டுக்கு வந்து விட்டன. அப்பொழுது அச்சாலையில் சென்ற பல வாகனங்களால் அவற்றிற்கு அழிவு ஏற்பட்டது. அன்றே நான் சக்கரம் வைத்த வண்டியில் ஏறி ஜீவஹிம்சைக்குக் காரணமாகக் கூடாது என்று மீண்டும் சங்கல்பித்துக் கொண்டேன். இன்னொரு காரணமும் உண்டு. வண்டியில் போவதால் பல ஊர்களைக் காண இயலாது போய்விடும். வாகனத்தில் திடீரென்று ஓர் ஊருக்குப் போய் இறங்கினால் அங்குள்ளவர்களுக்குச் சிரமம். நடந்து போவதால் போகும் இடத்தில் உள்ள மக்கள் அடுத்த ஊருக்கு முன்பே தெரியப்படுத்தி வசதி செய்து தருகின்றார்கள். இல்லையா?'' என்ற வினா எழுப்பிச் சுற்றி நின்றவர்களைப் பார்த்துத் தமது அருளைப் புன்னகையோடு குழைத்து அளித்தார்கள்.

இவ்வாறு பலவாறான சிந்தனைகளுடன் நடந்த நான் ஆதவனின் பொற்கிரணங்கள் தோன்றஆரம்பித்ததை உணர்ந்து சுற்றிலும் பார்த்தேன். கோடங்கல்லின் எல்லை நெருங்கி வந்திருப்பது தெரிய வந்தது. அருகே ஓர் இடத்திலிருந்த கிணற்றில் பெரியவர் ஸ்நானம் செய்த பின்பு அவருடன் சென்ற அனைவரும் ஸ்நானம் செய்தோம். பெரியவர் ஜபத்தில் ஆழ்ந்தவுடன் நான் பெரியவரின் சீடர் திரு ஏகாம்பரத்தை அணுகி, ''பெரியவர் எங்கு போகிறார்?'' என்று கேட்டேன். ஏகாம்பரம் ''பெரியவர் எங்கு போகிறார், எங்கு தங்கப் போகிறார் என்பதை யாராலும் முன்கூட்டியே கூற முடியாது. நேற்று கோலாப்பூரிலிருந்து எழு கிலோ மீட்டர் நடந்து இரவு 9.30 மணிக்கு வந்து சேர்ந்தார். நேற்று ஏகாதசியானதால் ஆகாரம் செய்யவில்லை. இன்று பிரதோஷம். இன்றும் ஆகாரம் எதுவும் கிடையாது. இப்படி இருக்கையில் ஏறக் குறைய பதினைந்து கிலோ மீட்டருக்கு மேல் நடந்து விட்டார்.'' என்று சற்றே ஆதங்கத்துடன் கூறினார்.

ஜபத்தை முடித்த பெரியவர் ஊரை நோக்கிப் பயணத்தைத் தொடர, வழியில் கோடங்கல் பெருமாள் கோவிலிலிருந்து பெரியவருக்கு வரவேற்பு. சங்கு, சக்கரம், பல்லக்கு, பரிவட்டம், துந்துபி மேள தாளங்கள் எல்லாம் வந்தன. பெரியவர் கோவிலின் உள்ளே சென்று தரிசித்துவிட்டு, அருகிலிருந்த மாட்டுக் கொட்டகையில் எழுந்தருளினார். மாலை மீண்டும் நீராடி, பிரதோஷ நேரத்தில் தியானத்தில் ஆழ்ந்தார். சிரசில் வில்வ தளமும், ருத்திராட்சமும் அணிந்து காட்சி அளித்ததைக் காணக் கண்கோடிதான் வேண்டும்.

அங்கிருந்து பிரியாவிடை பெற்றேன். விடை பெறும்பொழுது எனது நண்பர் ஒருவர் திரு பானு அவர்களிடம் பிரசாதம் கேட்க, அதற்கு அவர், ''பெரியவரின் அருள் பார்வை ஒன்றைத்தான் நாம் பிரசாதமாக ஏற்று ஆனந்தம் அடைய வேண்டும்'' என்று கூற நாங்களும் அதை ஏற்று எல்லையில்லா ஆனந்தத்துடன் அவ்வருள் முகத்தை நினைந்து கொண்டே விடைபெற்று வந்தோம்.


—விஜயஸ்ரீ கண்ணன்

நாம் அன்றாடம் உபயோகிக்கும் பொருளான கர்சீப் என்பதற்குப் பிரெஞ்சு மொழியில் தலையை மறைக்கப் பயன்படும் துணி என்பது பொருள். இச்சொல் பிரெஞ்சு மொழியிலிருந்து ஆங்கிலத்திற்கு வழக்கத்திற்கு வந்தது.

—ஆர். நடராஜன்.



நீங்கள் விரும்பும் அம்சங்கள் அனைத்துமுள்ள உலகப்புகழ் பெற்ற டூ-இன்-ஒன்கள்



அத்துடன் பிலிப்ஸின் உத்தரவாதம்!

உயர்தரமான இயக்கத்திற்கு உத்தரவாதமும், பிலிப்ஸ் வழங்கும் ஒப்பற்ற ஸர்வீஸ் பெறும் உறுதியும். கேட்டுப் பாருங்கள் பிலிப்ஸ் வைத்திருப்பவர் எவரை வேண்டுமானாலும். இந்த உறுதியை வேறு எவருமே அளிக்க முடியாது.

புதிய 115

முற்றும் நவீன 2 பாண்ட் ரேடியோ ரெக்கார்டர். மிக உன்னதமான MW மற்றும் SW இயக்கம், 1.4W அவுட்புட். கண்டென்ஸர் மைக்ரோஃபோன். ஆட்டோமாடிக் ரெக்கார்டிங் லெவெல் கண்ட்ரோல். துல்லியமான ஒலித்தரம். வடிவமைப்பு, ஆஹா, சொல்லே அழகு!

AR 197

மற்ற அம்சங்கள் அனைத்துடனும் ஒரு இணையற்ற 'மியூடிங்' வசதி; டேப் பாதுகாப்பு வசதி மற்றும் முழுமையான ஆட்டோ ஸ்டாப். பணத்திற்கு பிலிப்ஸ் வழங்கும் மதிப்பு தான் எவ்வளவு உயர்ந்தது!

AR 107

பிலிப்ஸ் டெக்னாலஜி வழங்கும் உயர்தரமான வசதிகள் அனைத்துடனும், 1400 mW மியூஸிக் பவர் அவுட்புட் பெறுவீர்.

AR 508

இந்தியாவின் முதன்முதல் ஸ்பேஷியல் ஸ்டீரியோ ரெக்கார்டர்—பரவலான ஸ்டீரியோ ஒலி வெள்ளத்தை அளிக்கும் வகையில் டிசைன் செய்யப்பட்டுள்ளது. 6.5W மொத்த மியூஸிக் பவர். 'பாஸ்' மற்றும் 'ட்ரெபிள்' இரண்டுக்குமே ட்யூவல் டோன் கண்ட்ரோல சக்திவாய்ந்த ரேடியோ—ஸ்டீரியோ, FM இயக்க வசதியுடன்.



ஃபெர்ரோ கேஸட்டுகள்



விவரங்களுக்கும், இயக்கத்திற்கும் நம்பகமான பிலிப்ஸ் டீலரை காணுங்கள்!

PHILIPS

பிலிப்ஸ்

பிலிப்ஸ்—50 ஆண்டுகளுக்கும் மேலாக இந்தியாவில் இல்லங்களெங்கும் முழங்கும் நம்பகமான பெயர்.

CASPRR.10-202 TAM

அத்தியாயம் 18

அவளுடைய குரலில் புதிதாகத் தெரிந்த ஏதோ ஒன்று அவனைத் திடுக்கிட வைத்தது. அந்தக் கணம், ஓ. இவள் மாறி வருகிறாள்என்ற ஓர் இனம்புரியாத நூலிழைச் சஞ்சலம் அவனை அலைக்கழித்தது. யோசனை அதிகமாகி விட்டாற் போல் மௌன இடை வெளிகள் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறாள். என்ன நேர்ந்து விட்டது இவளுக்கு? சராசரி நிலைக்கு இறங்கி விட்டாளா? எத்தகைய ஏமாற்றமாக இருக்கும் அது!

அவன் அவள் அருகில் சென்று அவள் தோள்களைப் பற்றினான்.

''ஓ கமான் தாரா. யூ கான்ட் பீ ஸீரியஸ்! என்னைப் புரிஞ்சுக்க நீ ட்ரை பண்ணணும்!''

அவனை நிமிர்ந்து பார்த்து அவள் சிரித்தாள்.

''அப்படி ட்ரை பண்ணினதிலேதான் ஜாஸ்தி குழம்பிப் போறேன்!''

அவளது தமிழ் இன்னும் ஆங்கிலம் அதிகம் கலந்த மழலையாக இருந்தது. அவன் விளையாட்டாக அவள் கன்னத்தை அதரங்களால் வருடியபடிச் சொன்னான்: ''அப்ப என்னைப் பத்தி ஆராய்ச்சி பண்றதை நிறுத்து. நான் சாமான்யமானவன். வேறே ஏதாவது முக்கியமான வேலையைப் பாரு!''

''நீதான் எனக்கு முக்கியம் கார்த்திக். உன்னைப் பத்தி நினைக்காம எப்படி இருக்க முடியும்?''

''ஓ.கே. தாங்க்யூ. அப்ப என் வேலைப் பளுவைப் பத்தி நீ புரிஞ்சுக்கணும்!''

''எனக்கு அதெல்லாம் புரியாம இல்லே. என்னுடைய கவலைகள் பயங்கள் இதெல்லாம் வேறே...!''

''என்ன?''

அவள் தன்னைச் சமாளித்துக் கொண்டு சிரித்தாள். அவன் மூக்கைச் செல்லமாகத் திருகி, ''ஓ. ஃபர்கெட் இட் யார்!''என்றான்.

''என்னன்னு சொல்லு. அப்பத்தான் விடுவேன்.''

அவன் மேல் பதிந்திருந்த அவளுடைய கண்களின் பார்வை எங்கோ தொலைவுக்குச் சென்றிருந்தது.

''எனக்குச் சொல்லத் தெரியல்லே. சொன்னால் நல்லவிதமாப் புரிஞ்சுப்பியான்னு யோசனையா யிருக்கு....''

அவள் திடுதிப்பென்று அவன் பிடியி லிருந்து விலகி, ஜன்னலருகில் சென்று

ஒரு சங்கமத்தைத் தேடி

வாஸந்தி



நின்றாள். தெருவில் ஒரு குரங்காட்டி அந்த ப்ளாக் வாண்டுகளுக்கு உற்சாகமாகஇரண்டு குரங்குகளை ஆடவைத்து 'ஷோ' நிகழ்த்திக் கொண்டிருந்தான். ஜிகினா தைத்த ஸாட்டின் பாவாடையின் குலுக்கலிலும் முக்காட்டை வீசிய லாகவத்திலும் பெண் குரங்கு தன் கோபத்தைக் காட்டிற்று.

''மை மைக்கேச் சலீ ஜாவுங்கி தும் தேக் கத் தேரய்யோ....!''

சாதாரண சமயத்தில் தாரா கைக் கொட்டிச் சிரித்திருப்பாள். அவனது இடையில் கையைச் சுற்றிக் கூத்தடித்திருப்பாள். இன்று எதுவும் செய்யாமல் அந்தப் பெண் குரங்கைத் தீவிரமாகப் பார்த்தாள். பிறகு அவன் பக்கம் திரும்பி மென்மையாகப் புன்னகை புரிந்தாள்.

''உனக்குக் குடுத்திருக்கிற வேலையை ஒழுங்காச்செய்யணும்தான். ஆனால் செய்யற ஒவ்வொரு காரியத்துக்கும் ஆதாயத்தை எதிர்பார்க்கிறியோன்னு எனக்குச் சந்தேகமா இருக்கு. அந்த மாதிரி ஒரு வியாபாரத்தனம் உனக்குள்ளே ஏற் பட்டதுன்னு [illegible] பற்றிய



நினைப்பு மட்டும்தான் உனக்கு இருக்கும். 'நான்' என்கிற ஈகோ பலூன் மாதிரி ஊதி, உன் உலகத்திலே எனக்கு இடமில்லாமல்....''

வாக்கியத்தை முடிக்க விரும்பாதவன் போல் அவன் சட்டென்று சிரித்தான்.

''பயப்படாதே கார்த்திக். உனக்கு நான் லெக்சர் கொடுக்க எனக்கு இஷ்டமில்லே!'' அவள் சிரித்தாலும் எண்ணங்களின் தீவிரம் பார்வையில் பளிச்சிட்டது. உதடுகள் உணர்ச்சி வசப்பட்டாற் போல் தெரிந்தன.

''அப்படிச் சொல்லிண்டே லெக்சர் கொடுக்கறே! எனக்கும் விமோசனம் கிடைக்காதான்னு ஆயுசு முழுக்க ஏங்கி, கஷ்டப்பட்டு இப்பத் தலைநிமிர்ந்து நிக்கறேன்.!''

''பறக்கறே....!''

''ஓ.கே. ஓ.கே! ஸோ வாட்?''

நல்ல வேளை டெலிபோன் ஒலித்தது. அவள் சட்டென்று ஓடி ரிஸீவரை எடுக்கையில் அவனுக்கு இன்னும் நெஞ்சு படபடத்துக் கொண்டிருந்தது.

இவளும் இவளது கொள்கைகளும்! இவளுடைய மார்க்ஸிஸம் கீதோபதேசம் மாதிரி இருந்தது. அதில் அவளது பாட்டியும் அவனுடைய அப்பாவும் அத்தையும் எட்டிப் பார்த்தார்கள். எரிச்சல் ஏற்படுத்தினார்கள். இவளுடைய இந்தக் கோணம் இப்பொழுது ஏன் தன்னை ஆயாசப்படுத்துகிறது என்று திகைப்பேற்பட்டது.

''ஓ. நான் மறந்தே போயிட்டேன்.மம்மீ, ஸாரி!'' என்று அவள் சொல்லிக் கொண்டிருந்தாள். ''மெனி ஹாப்பி ரிட்டர்ன்ஸ்! அப்பா எங்கே கூப்பிடு. கங்க்ராசுலேஷன்ஸ் டாட்! எதுக்கு? இத்தனை வருஷம் நீங்க ஒருத்தரை ஒருத்தர் சகிச்சிண்டதுக்கு! இருபத்தி அஞ்சு வருஷம்! எத்தனை பொறுமை வேணும்?''

''அவாளுக்கு இருபத்தி அஞ்சாவது வெட்டிங் டே!'' என்று கார்த்திக்கைப் பார்த்துக் கண்ணடித்து, ''ஹஹ்ஹா!'' என்று போனில் சிரித்தாள். ''கார்த்திக் இஸ் ஃபைன்! உங்களை மாதிரி ஒரு டிஸ்கஸ்டிங் ப்யூரோக்ராட்டா ஆயிண்டிருக்கான்!''

மறுபடி பெரிய சிரிப்பு. அவனுக்கு ரசிக்கவில்லை. ஜன்னலுக்குவெளியில் பார்வையை ஓட்டினான். குரங்குகள் இன்னும் நாட்டியமாடிக் கொண்டிருந்தன. ஆண் குரங்கு ஜரிகைக் குல்லாயைக் கையில் எடுத்துப் பெண் குரங்கிடம் கெஞ்சிக் கொண்டிருந்தது. பெண் சீறிற்று.

''அரே, ஜூட் போலே...''

குரங்காட்டி குரலை உயர்த்தித் தானத் திற்கேற்பத் தகரக் குவளையைத் தரையில் டக்டக்கென்று தட்ட, ஜிகினா முக்காட்டைப் பெண் குரங்கு நொடிப்பு நொடிக்க - அடேயப்பா! அந்தக் குரங்காட்டி கொடுத்திருந்த பயிற்சியின் விளைவாக இது இருக்க முடியாது. அதற்கு உண்மையிலேயே தன் சகாவிடம் ஏதோ கோபம். புதையுண்ட ஆத்மார்த்த கோபம். ஜிகினாவில் சீறித் தெறித்தது.

''பார்ட்டிக்கெல்லாம் வரல்லேப்பா! ப்ளீஸ். எனக்குப் பிடிக்காது. அதுவும் உங்க கும்பல்! நோ! நான் மாறல்லே! எதுக்கு மாறணும்? சாயந்திரம் வரோம். ஆனா உங்க டின்னர் ஆரம்பிக்கிறதுக்குள்ளே போயிடுவோம். ஓ.கே?''

பேச்சில் தொனித்த உற்சாகம் முகத்தில் தெரியவில்லை என்பதை அவன் கவனித்தான்.

''என்ன தாரா?''

''இன்னிக்கு எங்க வீட்டுக்குப் போகணும் கார்த்திக்! அம்மா அப்பாவுக்கு ஏதாவது ப்ரஸெண்ட் வாங்கணும். ராத்திரி பார்ட்டியாம். நாம் ரெண்டு பேரும் வரணும்னு அப்பா சொன்னார். நான் வரல்லேன்னுசொல்லிட்டேன்.''

தன்னிடம் மாமனார் நேரிடையாகப் போனில் பேசியிருக்கலாம் என்று தோன்றிய நமைச்சலில் அவன் சொன்னான்.

''எனக்குப் சேர்த்து நீயே சொல்லிட்டியா?''

''அஃப்கோர்ஸ்!'' என்றான் அவன் முகத்தைக் கவனிக்காமல். ''ஓ. அங்கே வர கும்பலை நீ பார்க்க வேண்டும். எனக்குக் குமட்டிக் கொண்டு வரும். அர்த்தமே இல்லாத நுனி நாக்கு நாசூக்குப் பேச்சு. அவர்கள் செய்யும் பிஸினெஸ் டீலைத் தவிர வேறு எதுவுமே லட்சியம் இல்லை. இந்தக் கையால் ஒருத்தனை அமுக்கி....''

''போதும்! ஐ நோ தெம் நேட் இனஃப்!''

அவனுடைய குரல் உயர்ந்து போன காரணம் புரியாமல் அவளுடைய புருவங்கள் உயர்ந்தன. பிறகு பகபகவென்று சிரித்தாள்.

''அரே 'யார்' நான் மறந்தே போனேன்! நீயும் இந்தக் கும்பலைச் சேர்ந்தவன்தான். இப்ப! இதைப்பார். நீ வேறு பார்ட்டிக்குத்

புதுமனை புக, மற்றும் நல்ல காரியங்களுக்கு வலது காலை எடுத்து வைத்துச் செல்ல வேண்டும் என்று அறிவோம். இடது காலை எப்போது உபயோகப்படுத்த வேண்டும் தெரியுமா?

போருக்குப் போகும்போது வீரர்கள் இடது காலை எடுத்து வைத்துப் புறப்பட வேண்டும். அப்படிச் செய்தால் எதிரிகளுக்கு ஆபத்து. நமக்கு வெற்றி ஏற்படுமாம்.

ராமன் நீட்சிதர் சொல்லக்கேட்டு
எழுதினவர்: பிருந்தா சுந்தரம்



தங்கிட்டு வா. அப்பாவுக்கு ரொம்பச் சந்தோஷமா இருக்கும். அவருக்கு ஒரு வாரிசு நின்னு தெரிஞ்சா உனக்கு உபயோகமான காண்டாக்ட்ஸ்சும் கிடைக்கும்...''

''தாரா....!''

சட்டென்று அவள் முகத்தில் ஒரு குழைவு தெரிந்தது.

''கார்த்திக்! நான் தப்பா நினைக்கக்க மாட்டேன். உன் இஷ்டத்துக்குக் குறுக்கே நான் நிச்சயமா நினைக்கமாட்டேன். தயாராகு! டின்னர் ட்ரஸ் போட்டுக்கோ எங்கம்மா இதிலெல்லாம் ரொம்ப பர்டிகுலர்!''

இவளுடன் கோபப்படுவதோ சண்டை போடுவதோ வியர்த்தம் என்று பட்டது.

அவர்கள் பரிசுப் பொருளை வாங்கிக் கொண்டு தாராவின் வீட்டுக்குச் சென்ற போது பெரிய பார்ட்டிக்கான ஆயத்தங்களில் வீடு இருந்தது. வாசலில் விரித்திருந்த புல் தரையில் நாற்காலிகள் போடப்பட்டிருந்தன. பச்சையும் சிவப்பும் மஞ்சளுமாக விளக்குகள் மாடிக் கைப்பிடிச் சுவரிலிருந்து இறங்கின. தாராவின் அம்மா அமர்க்களமாக அலங்காரம் செய்து கொண்டிருந்தாள், தாராவைப் பார்த்து,

''இன்னிக்குமா இந்த அழுக்கு ஜீன்ஸ் தானா?'' என்றாள்.

தாரா அவள் கையில் பரிசுப் பொருளைக் கொடுத்தபடியே அவள் கழுத்தை அணைத்துச் சிரித்தாள்.

''எங்களுக்கு இருபத்தி அஞ்சாவது வெட்டிங்டேம் போது புடவை கட்டிக்கிறேன். ப்ராமிஸ்!''

''ஹௌ டூ யூ மானேஜ் ஹர்?'' என்று கிருஷ்ணமூர்த்தி பெருமையுடன் கார்த்திக்கைக் கேட்டார். என்ன பதில் சொல்வது என்று புரியாமல் கார்த்திக் புன்னகைக்க, தாரா குறுக்கிட்டாள்.


''அவனை அனாவசியமாகக் கேள்வி கேட்டு நீங்க குழப்பக் கூடாது டாட். அவனுடைய வேலை, கம்பெனி, ப்ரைவேட் செக்டார்னு ஆரம்பிச்சீங்கன்னா அவனை மிஞ்சக் கூடிய ஆள் நீங்களாகத்தான் இருக்க முடியும்?''

கிருஷ்ணமூர்த்தி பலமாகச் சிரித்தார். ''மாட்டிண்டியா? என்னுடைய லைஃப் ஸ்டைலே உனக்குப் பிடிக்காதே?''

தாராவின் முகம் திடீரென்று தீவிரமாயிற்று.

''என் லைஃப்ஸ்டைலை நான் மாத்திக்கலே டாட்'' என்றாள். ''ஐ கேன் நாட்! ஆனா எங்களுக்குள்ளே ஒரு ப்ராப்ளமும் இல்லே. அவனோட வேலையில நான் தலையிடறதில்லே. என்னுடைய வேலையிலே அவன் தலையிடறதில்லே. இப்பவும் சாயந்திர பார்ட்டிக்கு அவன் இருப்பான். நான் கிளம்பறேன்.''

''நானே சொல்லணும்னு நினைச்சேன் கார்த்திக்'' என்றார் கிருஷ்ணமூர்த்தி, பைப்பைப் பற்றவைத்துக் கொண்டு. ''நீங்க அவசியம் தங்கணும். சில முக்கிய புள்ளிகள் இன்னிக்கு வருவார்கள். உங்களை இன்ட்ரொட்யூஸ் செய்யணும். அவர்களுடைய தொடர்பு உங்களுக்கு நல்லது. நீயும் இரேம்மா தாரா!''



'ஓ. பம்பாய்!' — இது திரைப் படமல்ல: மிகவும் அபூர்வமான ஒரு ரத்த குரூப்.

ஸ்பெயின் நாட்டு டாக்டர்கள் இதனைக் கண்டுபிடித்து இவ்வாறு பெயரிட்டுள்ளார்கள்.

இந்த ஓ. பம்பாய் ரத்த குரூப் உள்ளவர்களை உலகம் முழுவதும் தேடினாலும் 30 பேர்கள் கூடக் கிடைக்க மாட்டார்கள் என்று ஸ்பெயின் நாட்டு டாக்டர்கள் கருத்துத் தெரிவித்து இருக்கிறார்கள்.

ஸ்பெயின் நாட்டு செய்தி ஸ்தாபனம் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

—ஏ. நிர்ச்சலா தேவி

''நோப்!''

''என்ன பிடிவாதம் உனக்கு?'' என்று அவளுடைய அம்மா சிடுசிடுத்தாள். ''என்னுடைய புடவை எதையாவது கட்டிண்டு வா!''

''இதைப் பார் என்னை நீ வற்புறுத்தாதே. வெட்டிங் டேங்கறது ஒரு பர்ஸனல் விஷயம். உன்னையும் உன்னைச் சேர்ந்த நெருங்கிய பந்துக்களும் கொண்டாட வேண்டிய சமாசாரம். நாமெல்லாம் சேர்ந்து வீட்டிலே சாப்பிடுவோம் வான்னு சொல்லி யிருந்தியானா வந்திருப்பேன். கோயிலுக்குக் கூட வந்திருப்பேன். ஏன்னா அங்க நிக்கிற சில நிமிஷ நேரங்கள் நீங்கள் உங்களையும் உங்க உலகத்தையும் மறந்து ஒரு உச்ச நிலையில் இருந்திருப்பேள். இப்ப ஊரை யெல்லாம் கூட்டி ட்ரிங்ஸ் கொடுத்து விருந்து கொடுக்கறேள். உங்க பர்ஸனல் சந்தோஷத்தைக் கூட வியாபாரமாக்கறேள்...''

கார்த்திக் சங்கடத்துடன் நெளிந்தான். தாரா தன் பெற்றோர்களுடன் வாதாடுவது அதிகமாகப் பட்டது. எப்படி பட் பட்டென்று வெடிக்கிறாள்! இவர்கள் வாயை மூடிக்கொண்டு ஒரு கையாலாகாத்தனப் புன்னகையுடன் அமர்ந்திருக்கிறார்கள்! மிகப் பெரிய மனக் கொந்தளிப்பில் இருக்கும் நேரத்தில் கூட அவன் அப்பாவுடன் நேருக்கு நேர் வாதாடியதில்லை!

''வாங்கோ மாப்பிள்ளை!'' என்று காஞ்சீபுரம் புடவையை இழுத்துப் போர்த்தியபடி பாட்டி வந்தாள். பின்னாலேயே சின்ன ட்ராலியைத் தள்ளிக் கொண்டு பேரர் வந்தான். அழகிய லேசான மெலமைன் கிண்ணங்களில் சர்க்கரைப் பொங்கல்.

''முருகன் கோவில்லே இன்னிக்கு அபிஷேகத்துக்குக் கொடுத்திருந்தேன். அந்தப்

பிரசாதம்தான் இது!'' வார்த்தைகள் உணர்வலைகளை லேசாகத் தட்டி விட்டன.

''உங்கப்பா அனுபவிச்க முருகனுக்குப் பண்ற அபிஷேகத்தை இன்னிக்கு முழுக்க பார்த்திண்டிருக்கலாம் மாப்பிள்ளை!''

தொண்டையை ஏதோ அடைத்தது. பொங்கல் கீழே இறங்கச் சிரமப்பட்டது. அவசரமாகக் கண்ணாடி டம்ளரிலிருந்த நீரைப் பருகும்போது நீருக்குள் அப்பா முருகனுக்குச் சந்தனக் காப்பைப்போட்டுக் கண் மலரை லாகவமாக நீவி விட்டார். ஒரு விநாடி மனசு மிக உயரத்துக்குச் சென்றது.

ஜன்னல் கட்டையில் உட்கார்ந்திருந்த தாராவைப்பார்த்து லேசாகப்புன்னகை செய்தான். அவனுடைய அந்த நிமிஷத்து உணர்வலைகளின் மட்டத்தை உணர்ந்தவள் போல் அவள் சிரித்தாள் — பழைய தாராவாக.

''அப்ப, யூ ஆர் ஸ்டேயிங் பேக் கார்த்திக். ரைட்?'' என்று கிருஷ்ணமூர்த்தி எழுந்தார்.

அவன் சட்டென்று யதார்த்தத்துக்குஇறங்கினான்.

''தாராவும் இருந்தால்....'' என்று அவன் இழுக்கையில் தாரா ஜன்னலிலிருந்து திடும் மென்று கீழே குதித்து அவனிடம் வந்து தோளை அணைத்து.

''நீ இரு கார்த்திக்!'' என்றாள் கொஞ்சலாக. ''ஹேவ் எ நைஸ் டைம்! நீ சாப்பிடறதுக்குமுன்னாடி நான் ரகசியமா உன்னை சாப்பிட்டுட்டுக் கிளம்பிடுவேன். கவலைப் படாதே.நான்பார்ட்டியை அட்டண்ட் பண்ணினா எல்லோருக்கும் சங்கடம்!''

அவள் பிடிவாதமாகக் கிளம்பிச் சென்றதும் கிருஷ்ணமூர்த்தி சொன்னார்:

''அவ சொல்றது சரிதான். நட்ட நடுவிலே மார்க்ஸிஸம் பேச ஆரம்பிச்சுடுவா. அரசியலை விவாதிப்பா. இங்கு வரவன் ஒவ்வொருத்தனும் மலை முழுங்கி. எப்படி ரசிப்பான்? நமக்கு எசகு பிசகாயிடும். இதெல்லாம் ஒரு வயசுன்னு நினைக்கிறேன். கோபப்பட்ற வயசு. நேச்சுரல் ரியாக்ஷன்! நீங்க இதையெல்லாம் மைண்ட் பண்ணக் கூடாது.''

''ஓ. நோ! எனக்கு அவளை இதனாலேயே ரொம்பப் பிடிக்கிறது!''

அவனை நம்பாதவர் போல் ஒரு விநாடி யோசனையுடன் பார்த்தார். பிறகு தோளைக் குலுக்கிச் சிரித்து ஆங்கிலத்தில் சொன்னார்:

''ஆபீசில் சீட்டில் இருந்ததற்காக உன்னை வேலையை விட்டு நீக்கிட்டாங்களா? ஆச்சரியமா இருக்கே.''

''நான் இருந்தது என் நண்பர்களுடன் ரம்மி சீட்டில்.''

ச. சம்பத்குமார்



''என்னவோ லட்சியங்கள் அவளுக்கு. என்னால் நிச்சயமாகப் புரிந்து கொள்ள முடிவதில்லை. அவள் பேச்சு சில சமயம் என்னை ரொம்பச் சங்கடப்படுத்துகிறது. நட்ட நடுவில் என்னை அவள் நிர்வாணமாக்கி விட்ட மாதிரி! என் வேர்களைக் கிண்டிக் கொண்டே இருக்கிறாள். நான் பூவையும் பழத்தையும் ஆராயும்போது....!''

அவனுள் லேசாக ஒரு சிலிர்ப்போடியது. இத்தனை நெருக்கமாக அவர் அவனுடன் பேசியதே இல்லை என்று ஞாபகம் வந்தது.

''அவளுக்கும் என் மனைவிக்கும் ரொம்ப வித்தியாசம்!''

உலக வித்தியாசம் என்று அன்று பார்ட்டியில் புரிந்தது. பெரிய பெரிய பிளினெஸ் மாக்னெட்டுகளுடன் மிஸஸ் கிருஷ்ண மூர்த்தி கூச்சமில்லாத சரளத்துடன் பழகினாள். அவர்கள் அவளது தோளையும் இடையையும் பற்றியபடி பேசினார்கள்.

''கல்யாணமாகி இருபத்தி ஐந்து வருஷமா? நம்ப முடியவில்லையே? கல்யாணப் பெண் போல் இருக்கிறாய்!''

''நான் கல்யாணப் பிள்ளையாய் இருக்கத் தயார்!''

-போன்ற பேச்சுக்களைப் பெரிய குரலில் சிரித்து ரசித்தாள்.

''இது ஒரு வகை வேசித்தனம்!''

தாராவின் குரல் காதருகில் ஒலிக்கிறாற் போல் அவனுள் பிரமை ஏற்பட்டுத் திடுக்கிட்டான்.

அந்த வார்த்தைகளுக்குப் பின்னால் இருந்த பல யுகத்துக் கசப்புகள் இப்போது புரிகிற மாதிரி இருந்தது. இப்பொழுது அவனுடைய பார்வையைத் தாக்கும் செய்கைகள் அவளுள் ஒரு ஜ்வாலையைக் கிளப்பி இருக்க வேண்டும்...

தோளில் யாரோ கை வைத்தார்கள்.

''எங்கே உன் அழகிய மனைவி?'' என்று சிரித்தார் லோபோ. ''அவர்கள் வீட்டுப் பார்ட்டியில் கூடவா கலந்து கொள்ளவில்லை?''

அவன் கூச்சத்துடன் சிரித்தான்.

''அவளுக்கு ரொம்பப் பிடிவாதம்!''

''நாளைக்கு ஆனால் என் வீட்டுக்கு வருகிறீர்கள் இரண்டு பேரும்! ஆ. மறந்து போனேன். கார்த்திக் நாளைக்கு இரவு ப்ளேனில் டிமெரென்று டி. ஜி. வருகிறார். நீ விமான நிலையத்துக்குப் போக வேண்டியிருக்கும்.''

''அப்பொழுது உங்கள் வீட்டுக்கு எப்படி வருவது?''

''உன் மனைவியைக் கொண்டு விட்டு விட்டு நீயும் கொஞ்ச நேரம் பாட்டைக் கேட்டு விட்டுப் போ. தாராவை நான் கச்சேரி முடிந்து கொண்டு விடுகிறேன். அட. என்ன யோசனை கார்த்திக்! கவலைப்படாதே உன் மனைவியை யாரும் சாப்பிட்டு விட மாட்டார்கள்!''

அவனுக்கு லேசாக முகம் சிவந்தது.

''அவள் ஒத்துக்கொண்டால் சரி!''

''அது என் பொறுப்பு'' என்று லோபோ சிரித்தார்.

(தொடரும்)



பெரியவாளுக்குப் பிடித்த காரியம்

சமீபத்தில் தமது எழுபத்தைந்தாவது பிறந்த நாளன்று, திடீரென்று காஞ்சிப் பெரியவர்களிடமிருந்து பொன்னாடை ஒன்று வந்தது ஒரு முதியவருக்கு. முதியவர் பெயர் திரு அண்ணாதுரை ஐயங்கார்.

''பிரபல வழக்கறிஞராக இருந்தவர், தமது தொழிலையெல்லாம் ஒதுக்கி வைத்து விட்டு, காஞ்சிப் பெரியவரின் அருளாணையை ஏற்று, இருபத்து நாலு மணி நேரமும் சிரமம் பாராமல், வேதங்களை முறையாகக் கற்பிக்க ஏற்பாடுகளைச் செய்வதில் ஆர்வமும் சிரத்தையும் எடுத்துக் கொண்டு, இந்த வயதிலும் பிரயாணங்கள் செய்து, தொண்டாற்றி வருகிறார்!'' என்று குறிப்பாகத் தெரிவித்தார் காஞ்சி சங்கர பக்த ஜன சபா செயலர் திரு வைத்தியநாதன்.

காஞ்சிப் பெரியவர் தம் அன்பின் அடையாளமாகப் பொன்னாடை போர்த்தச் செய்ததில் வியப்பு என்ன!

காஞ்சிப் பெரியவர் தமது பீடாரோகண பொன் விழாவின்போது சென்னையில் ஒரு முறை சொன்னார்: ''வேதங்கள் இல்லையென்றால் மடத்திற்கோ, என்னைப் போன்ற மடாதிபதிக்கோ என்ன வேலை? அதனால் உங்களை நான் கேட்டுக்கொள்வதெல்லாம் இந்த விழா எடுக்க நீங்கள் காண்பித்த ஈடுபாட்டையும் எடுத்துக்கொண்ட முயற்சியையும் வேதங்களைக் காப்பதிலும் பராமரிப்பதிலும் செலவிடுங்கள். குழுக்கள் அமையுங்கள்: சட்ட திட்டங்களை உருவாக்குங்கள்: நிதி திரட்டுங்கள். இவ்வுலகிலேயே நான் மிகவும் உயர்வாக நினைப்பது, வேதங்களை எப்படியாவது காப்பாற்றி அடுத்த தலைமுறைக்கு வழங்க வேண்டும் என்பதுதான்!''

பெரியவர்களே 1963ல் துவக்கி வைத்தார் வேத ரட்சண நிதி டிரஸ்ட். யஜுர் வேதம் ரிக் வேதம் இரண்டையும் காஞ்சியை அடுத்த தேனம்பாக்கம் சிவாஸ்தானத்தில், சங்கர பக்த ஜன சபையும், காஞ்சி காமகோடி மகாஸ்வாமி வித்யா பீட டிரஸ்ட்டும் இணைந்து, வேத பாடசாலையில் கற்றுத் தருகின்றன. தற்போது நாற்பது மாணவர்கள் இங்கு வேதம் பயிலுகிறார்கள்.

× திரு. அண்ணாதுரை ஐயங்காருக்குப் பொன்னாடையைப் போர்த்துகிறார் எஸ். வி. நரசிம்மன்



வேத ரட்சண நிதி டிரஸ்ட்டின் நிர்வாகக் காப்பாளராகத் தொண்டாற்றும் திரு அண்ணாதுரை ஐயங்கார் பெரியவரின் ஆசியுடன் இரண்டு வகை ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்கள். ஒன்று: பரம்பரையாக வேதம் கற்று வரும் குடும்பங்களிலிருந்து வரும் மாணவர்கள் பராமரிப்பு. இரண்டு: பண்டைக் கால குருகுல பாடசாலை முறையில், குருவின் வீட்டிலேயே அவர் குடும்ப அங்கத்தினராக இருந்து கற்றுக் கொள்ளுதல்.

வேத ரட்சண நிதிக்குப் பெரும்பாலும் நிதி கிடைப்பது வருடாந்தர மலர் (ஸுவனீர்) விளம்பரங்களிலிருந்துதான். மற்றவை நன்கொடைகள், சந்தாக்கள்.

வேதம் கற்க எவ்வளவு வருஷங்கள் ஆகும்?

ஆறு முதல் எட்டு வருஷங்கள் ஆகுமாம்.

வேதம் பயிலும் மாணவர்களுக்கு மான்யமும், கற்றுத் தேறியவருக்கு ரொக்க சன்மானமும் வழங்குவதோடு, பயிற்றுவிக்கும் பண்டிதர்களான ஆசிரியர்களுக்கும் மாதாந்தர ஊதியம் வழங்குகிறது இந்த டிரஸ்ட்.

குளித்தலை, ஈரோடு, திருக்குமணி, கங்காதரபுரம், தோகூர், தார்வார் ஆகிய இடங்களிலும் ரிக், யஜுர் வேத பாடசாலைகள் இயங்கி வருகின்றன. இந்த டிரஸ்டின் ஆதரவில் சென்னை பூந்தமல்லியை அடுத்துள்ள நசரத் பேட்டையிலும் ஆதி சங்கர அத்வைத டிரஸ்ட் சார்பில் மிகச் சிறப்பாக ஒரு வேதபாடசாலை நடைபெற்று வருகிறது.

வேதம் கடவுளின் மூச்சுக் காற்று என்றும், உலகின் சட்ட நூல் என்றும் சொல்லுவார்கள். இதை முறைப்படி கற்பிக்கவும், சிரத்தையோடு பயிலவும் தேர்ந்த ஆசிரியர்களும், ஆர்வமுள்ள மாணவர்களும் இருந்தால்தானே வருங்காலத்திலும் வருகிற தலைமுறைக்கும் இதன் பயன்களும் கிடைக்கும்?

வேத ரட்சண நிதி டிரஸ்ட்டுக்குப் பொருளுதவி செய்கிறவர்கள், காஞ்சிப் பெரியவர்களின் விருப்பத்தை ஒரு விதத்தில் பூர்த்தி செய்யும் பாக்கியசாலிகள்.

—சாருகேசி


இதையெல்லாம்
உங்களையார்

கவனித்த பிறகு, கவனிப்பது?

காலை ஆகாரம் முடிந்தது. குழந்தைகள் பள்ளிக்குச் சென்ற பிறகு. அப்பொழுது முதல் உங்கள் தினம் துவங்கி, ஓய்வதே இல்லை.

வீட்டைச் சுத்தப்படுத்தி, தோய்ப்பது, இஸ்திரி, சமையல் மற்றும் தையல் வேலைகள்.

ஒரு கோப்பை ஹார்லிக்ஸ் உட்கார்ந்து ஓய்வெடுக்க உதவுகிறது.


ஏனெனில் ஹார்லிக்ஸ் ஒவ்வொரு நாளும் நல்ல உடல் ஆரோக்கியத்தை அளிக்கிறது.

அதனால்தான் லட்சக்கணக்கான மக்கள் 100 ஆண்டுகளுக்கு மேலாக ஹார்லிக்ஸின் நற்பயனில் நம்பிக்கை வைத்து வருகிறார்கள்.

உலகெங்கிலுமுள்ள டாக்டர்கள் உடல் ஆரோக்கியத்துக்கு உகந்த உத்தரவாதமென்று சிபாரிசு செய்கிறார்கள்.

அதனால் ஆச்சரியமில்லை, ஹார்லிக்ஸின் சத்துள்ள சுத்தமான பொருள்கள் சிறப்பானதொரு முறையில் ஒன்றிணைந்து அவற்றின் நற்பயனும் எளிதாக சீரணிக்கும் இயல்பும் நீடிக்கின்றன.

ஹார்லிக்ஸை உங்கள் குடும்ப வாழ்க்கையின் ஓர் இன்றியமையாத அம்சமாக்கிக் கொள்ளுங்கள் அதன் நற்பயனில் நீங்கள் நம்பிக்கை வைக்கலாம்.





HTD-HMM-7537

முழுமையான ஊட்டம் பெற

7

மேஜை மீது ராம்குமார் வைத்துவிட்டுப் போன பருமனான புத்தகத்தைத் திகைப்பும் இனிய பரபரப்பும் கலந்த பார்வையால் பத்மா பார்த்தாள். தலையைத் திருப்பி ராம்குமாரைத் தேடினாள். அவனும் கப்பையாவும் புத்தகங்களை அள்ளிக் கொண்டு அந்த ஹாலைவிட்டு வெளியேறிக் கொண்டிருந்தனர்.

இவ்வளவு விலை உயர்ந்த புத்தகத்தை எதற்காக எனக்கு வாங்கித் தந்துவிட்டுப் போகிறான்?

நான் ஏழை. அனாதை. ஒரு வாரப் பத்திரிகையின் தயவில் மருத்துவம் படிப்பவள் போன்ற தகவல்கள் தெரிந்து கொண்டு எனக்கு இவ்வளவு விலை உயர்ந்த புத்தகத்தை வாங்கும் சக்தி கிடையாது என்று எனக்கு உதவும் நோக்கத்துடன் வாங்கித் தந்திருக்கிறானோ? அல்லது அவனுடைய பணத்தின் பலத்தையும் மனத்தின் தாராளத்தையும் என்னிடம் பிரசாரம் செய்யவா?

என்னால் அவனுக்கு என்ன லாபம்?

செல்வத்திலும், வாட்ட சாட்டமான கம்பீரத் தோற்றத்திலும் அவன் கோபுர உச்சி என்றால் நான் குடிசை மட்டம்தானே? கல்லூரியிலும், மகளிர் விடுதியிலும் என்னை விட சிவந்த அழகான, காரில் மலர் மணங்களுடன் வந்திறங்கும் தேவதை போன்ற மாணவிகள் எத்தனையோ பேர் இருக்கின்றனரே. பட்டும் ஜரிகையுமாக அணியும் சாரதாவையும் உயரமான குங்கும நிற ஷீலாவையும் விட நான் எந்த வகையில் சிறந்தவள்?

முக்கியமானதை முக்கியமானவர்களுக்குப் பரிசளிப்பதில் என் மனம் மகிழ்கிறது என்றானே!

நான் என்ன அவனுக்கு அப்படி முக்கியமானவள்? அவனுக்கு எந்த உதவியையும் நான் செய்ததில்லை. அவனோடு சரியாகப் பேசியது கூட இல்லை. அவனுடைய மனத்தின் வி. ஐ. பி. பட்டியலில் இடம் பெற எனக்கு என்ன தகுதி இருக்கிறது?

மந்திரி: எனக்கு எடைக்கு எடை நாணயம் வழங்கும் விழாவில் எனக்குப்பதிலா என்னோட மனைவி வருவாள் சம்மதமா?

—ராஜா



இதை ஏற்றுக் கொள்ளவே கூடாது. எதை யார் கொடுத்தாலும் ஒப்புக்காக முதலில் மறுத்துவிட்டு அப்புறம் தட்டிக் கொண்டு போகும் சாதாரண ரகப் பெண்ணாக அவன் என்னை எடை போட்டுவிடக் கூடாது. இப்படியே விட்டு விட்டுப் போய் விடலாமா? ஊஹூம். அதுவும் கூடாது. அவனுடைய பணம் அவனுக்குப் பயன்படாமல் எனக்கும் பயன்படாமல் இந்தப் புத்தக வியாபாரிக்கு ஏன் போய்ச் சேர வேண்டும்?

காஷ் கவுண்டரில் கொண்டு போய்க் கொடுத்து விடலாம். இந்தப் புத்தகம் என் வீட்டில் இருக்கிறது. தெரியாமல் வாங்கி விட்டேன் என்று பொய் ஏதாவது சொல்லிப் பணத்தைத் திருப்பிப் பெற வேண்டும். ராமைத் தனியாகக் கல்லூரியில் சந்தித்து உங்களுடைய பரிசுக்கு நான் அருகதை இல்லாதவள் என்று அவனிடம் பணத்தைக் கொடுத்துவிட வேண்டும். அப்படிக் கொடுத்தால் வாங்குவானா?

ஒரு மேசையைச் சுற்றி மொய்த்துக் கொண்டிருந்த கும்பலுக்குள்ளிருந்து டெய்சி தன்னைப் பிடுங்கிக் கொண்டு வெளியே வந்தாள். வியர்வையில் குளித்திருந்தாள். பத்மாவிடம் வந்தாள். ''போகலாம்மா. இதைத்தான் வாங்க முடிஞ்சது'' என்றபடி 'ஹியூமன் பாடி' என்ற சின்னப் புத்தகத்தைக் காண்பித்தாள். ''டிஸ்கவுண்ட் போக பதினேழு ஐம்பது. எல்லாம் ரொம்பக் காஸ்ட்லியா இருக்கு. வா, போகலாம்.''

ராம் வைத்துவிட்டுப்போன புத்தகத்தைப் பத்மா கையில் எடுத்தாள். டெய்சி, ''அதை ஏன் கையில் எடுக்கிறாய்? விலையைப் பார்த்தாலே ஷாக் அடிக்குது. வெச்சுட்டு வா. 'நான் ஷோ'வுக்குப் போகலாம். தேவி பாலாவில் ஷர்மிலீ நடக்குது'' என்றாள்.

''இது என் புக்'' என்றாள் பத்மா.

''என்னது?'' டெய்சிக்குத் தூக்கி வாரிப் போட்டது.

''வாங்கிட்டேன்.''

''வாங்கிட்டயா?''

''ஆமா. பணம் குடுத்து வாங்கிட்டேன். இந்தா பாரு ரசீது.''

சிவப்பு ரசீதில் எழுதப்பட்டிருந்த விலையையும் பத்மாவின் முகத்தையும் மாறி மாறிப் பார்த்தாள் டெய்சி. ''சரி வா. வெளியிலே போயி பேசிக்கலாம்.''

மாடிப் படியில் இருவரும் இறங்கினர்.

''பத்மா நீ இதை வாங்கினதைப் பத்தி எனக்குச் சந்தோஷம்தான். பெய்லி அண்ட் லவ்தான் ஸர்ஜர் புக்ஸ்லயே பெஸ்ட்னு எல்லாரும் சொல்றாங்க. பணமே இல்லேன்னு என்கிட்ட ஏன் சொன்னே? அதான் எனக்குப் புரியல்லே.'' என்று வருத்தத்துடன் பேசினாள் டெய்சி.

பிளாட்பாரத்தில் பத்மாவின் விழிகள் ராம்குமாரின் பைக்கைத் திருட்டுத்தனமாகத் தேடின. பார்வைக்கெட்டிய திசைகளில் அது காணப்படவில்லை.

''பைத்தியம். வாங்கிட்டேன்னதும் நம்பிட்டயா? பணத்தை வெச்சுக்கிட்டு உன்

நேசமுள்ள வான்சுடரே

சவீதா



கிட்ட நான் இல்லேன்னு சொல்லுவேனு? இவ்வளவு நாள் பழகியும் என்னே நீ புரிஞ்சுக்கிட்டது இவ்வளவுதானு?''

''வாங்கலியா? அப்புறம்?''

உடனே உண்மையைச்சொல்லிவிடலாமா? அல்லது இன்னும் கொஞ்சம் டெய்சியின் உணர்வுகளுடன் விளையாடலாமா?

''நான் வாங்கலேடி.''

''அப்புறம் யார் வாங்கினது?''

''ராம்.''

''யாரு?''

''ராம்குமார்.''

''ராம்குமார் மாடில இருக்காரா?''

''போயிட்டார். அவரையும் கப்பையாவையும் பார்க்கலியா?''

''நான் எங்கேடி பார்த்தேன். ஒரு கும்பலுக்குள் போயி மாட்டிக்கிட்டு வெளியே வர்றதுக்குள்ள பட்ட பாடு... அது சரி. ராம் வாங்கினதை நீ ஏன் சுமந்துக்கிட்டு வர்றே?''

டெய்சி இப்படிக் கேட்டபோது ஒருவித சிலிர்ப்பு பத்மாவின் முதுகுப்புறத்தில் வழிந்தது.

''எனக்கு ப்ரசன்ட் பண்ணியிருக்கார்.''

''அப்படிச் சொல்லு விஷயத்தை. நீ திருட்டு முழி முழிச்சுக்கிட்டு நின்னதைப் பார்த்ததுமே என்னமோ கோளாறுன்னு நினைச்சேன். எனிவே ஆல் தி பெஸ்ட்'' என்று பத்மாவின் கரத்தைப் பற்றிக் குலுக்கினுள்.

''எதுக்கு?''

''நீடூழி வாழ்க!''

''என்ன உளர்றே?''

''இனிமே ராம்குமாரைத் தவிர யார் பேசினுலும் உனக்கு உளறல் மாதிரித்தான் கேட்கும். சரி வா. இதை ட்ரைவ் இன்ல போயி கொண்டாடுவோம்.''

பாஸந்தி மேஜைக்கு வந்தது.

''கொஞ்ச நேரத்துக்கு எனக்கு ஒண்ணுமே புரியலே டெய்சி. புஸ்தகத்தை வெச்சுட்டு அவர் திரும்பிப் பார்க்காமல் போயிட்டார். அதைத் தொடறதா வேண்டாமா என்று குழம்பிக்கிட்டு நின்னேன். நீ வந்ததும் எப்படித் திமிர்னு இது என் புக்னு சொந்தம் கொண்டாடினேன்னு எனக்கே தெரியல்லே. உண்மையிலே நானு அந்த வார்த்தைகளைச் சொல்லலே டெய்சி.''

''நீ சொல்லல்லே. உன் நாக்குச் சொல்லிச்சு. ஏன்டீ. உன்னே ஒண்ணு கேக்கறேன். நீ ராம்குமாரோட பார்வைக்காக ஏங்கலேன்னு சொல்லு. மனசில அவனே நினைக்கவே இல்லேன்னு நெஞ்சிலே கை வெக்கச் சொல்லு....''

பத்மா டெய்சியைப் பார்த்தாள். விவரிக்க முடியாத புதிய மன உணர்வுகளின் தாக்குதலால் அவள் ஊமையானுள்.

''அப்புறம் என்ன? அவன் கொடுக்கிறதை ஏத்துக்கறதிலே ஏன் இவ்வளவு யோசனே? நீ மனசுக்குள்ள ஏங்கி எதிர்பார்த்தது கைக்கு எட்டற நேரத்திலே சந்தோஷமா இருக்கிறதை விட்டுட்டு ஏன் கப்பல் கவுந்து போன மாதிரி முகத்தைத் தொங்கப் போட்டுக்கிட்டு நாடகமாடறே?''

''நான் ஒண்ணும் நாடகமாடலே. ராம்குமாரை நான் விரும்பறது உண்மைதான். விரிஞ்ச பூக்களோட பரிசுத்தத்தை நாம விரும்பறதில்லே அதை மாதிரி. ராமோட தோற்றத்தை ரசிக்கிறேன். அற்புதமான சூரியோதயத்தை ரசிக்கிற மாதிரி. ஆனு...''

''ஆனு என்ன?''

''பூக்கள் எனக்காக மட்டுமே மலருது. சூரியன் எனக்காக மட்டுமே உதிக்குதுன்னு நினைக்கிறது மடத்தனம் இல்லேயா டெய்சி''

''பூ பூக்கிறதும், சூரியன் உதிக்கிறதும் எனக்காக இல்லேன்னு நினைக்கிறது மடத்தனம் இல்லேயா? பத்மா உனக்கு காம்ப்ளெக்ஸ் நிறைய இருக்கு.''

''ஆமா டெய்சி ஒத்துக்கறேன். காம்ப்ளெக்ஸ் இருக்கு. நீயே சொல்லு. அவனேட பர்ஸனுலிடிக்கும் என்னேட பர்ஸனுலிடிக்கும் ஏணி வெச்சாலும் எட்டுமா?''

''பர்சனுலிடியாவது மண்ணுவது. காதலுக்குக் கண் கிடையாதுடி....''

காதல் என்ற சொல் பத்மாவின் மனத்தில் இனிய பூகம்பத்தை ஏற்படுத்தியது.

''...யாரு யாரை எதுக்காகக் காதலிக்கிறாங்கன்னு நம்மைப் படைச்சவனுல கூட கண்டுபிடிக்க முடியாது. சீஸரோட அழகைப் பார்த்தா கிளியோபாட்ரா அடிமையானு?''

''பெண்கள் ஆண்கள்கிட்ட அழகை எதிர்பார்க்கிறதில்லே. ஆனு ஆண் அப்படி இல்லே. இவளே விட அழகானவ நமக்குக் கிடைக்க மாட்டாளான்னு உறுதிப்படுத்திக்கிட்டுத்தான் ஒருத்தியைக் காதலிக்க ஆரம்பிப்பான்.''

''நீ நினைக்கிறதெல்லாமே தப்பு. நீ யாரையும் விட அழகில குறைஞ்சவ இல்லே. இலேசா கூன் போடறே. அதை அவாய்ட் பண்ணனும். நல்லாச் சாப்பிட்டுக் கொஞ்சம் குண்டாகனும். ஆண்கள் பெண்கள்கிட்ட அழகை மட்டும் எதிர்பார்க்கறாங்கன்னு நீ நினைக்கிறது ரொம்பத் தப்பு. ராம் உம்மேலே அக்கறை காட்டறது எனக்கு ஒண்ணும் ஆச்சரியமான விஷயமாப் படலே. உன்கிட்டே யிருக்கிற ஏதோ ஒண்ணு அவனேக் கவர்ந்திருக்கு. மத்தவங்களுக்குத் தெரியாத அல்லது உனக்கே தெரியாத உன்னேட ஏதோ ஒரு அழகு அவன் கண்ணுக்குத் தெரிஞ்சிருக்கு. ஹி லவ்ஸ் யூ.''

''சீ போடி'' என்றுசொல்லி விட்டுப்பத்மா தலே கவிழ்ந்து மேஜையின் விளிம்பில் படிந்திருந்த கரத்தின் மீது நெற்றியைப் பதித்தாள்.

''என்னடி தலேயைக் குனிஞ்சுக்கிட்டே. வெட்கமா?'' என்று டெய்சி தோளேக் குலுக்கினுள். தூரத்து மேஜையில் இருந்த ஒருவன் அவர்களேயே முறைத்தான். பத்மா மெல்லத் தலேயைத் தூக்கினுள்.

''என்னடீ அழுவா செய்யறே?''

உணர்வுக் கொந்தளிப்பால் பத்மாவின் நீல விழிகளில் உருகிய கண்ணுடியைப் போல் கண்ணீர் ஊறித் தேங்கியிருந்தது.


(தொடரும்)

ஸ்டாண்டர்ட் ஹைறலோ கூலர் (5 லிட்டர்கள்)

ஸூப்பர் ஹைறலோ கூலர் (5 லிட்டர்கள்)

டிலக்ஸ் ஹைறலோ கூலர் (7 லிட்டர்கள்)


கேம்பர் கூலர் (8 லிட்டர்கள்)



வேனிற் காலத்தில் குளிர்ந்த பானங்கள் பெற ஈகிள் கூலர் அணிவகுப்பு.



ஈகிள் தெர்மோவேர் கூலர்களின் விசாலமான அணிவகுப்பு. வேனிற் காலத்தில் தாகத்தைத் தணிக்கும் குளிர்ந்த பானங்களைப் பெற இவை வழிகாட்டுகின்றன. இவற்றிலிருந்து வேண்டியதைத் தேர்ந்தெடுப்பீர். உடன் எடுத்துச் செல்லக்கூடிய ஃப்ரிஜ் போன்றவையாகும் ஈகிள் தெர்மோவேர் கூலர்கள்.



ஜய ஜய சங்கர ஹர ஹர சங்கர











புகைப்படங்கள்
கண்ணன்





உடலும் பொருளும்

- மகரிஷி -

பிரிமியர் பத்மினியின் வேகம் முள் நாற்பதுக்கும் ஐம்பதுக்கும் நடுவில் ஆடிக்கொண்டிருந்தது.

ஹேமந்தருது!

மார்கழியின் குளிருக்குள் சேலம் சிக்கிக் கொண்டிருந்தாலும் கூட சீதோஷ்ண நிலையில் உண்டான ஓர் அபூர்வமான சம நிலையில் அந்தக் குளிர்கூட உடம்புக்கு இதமாக இருந்தது.

சிவப்பிரகாசத்தின் ஒரு கரம் பிரிமியர் பத்மினியின் ஸ்டியரிங்கில் இருந்தாலும் மற்றொரு கரம் மஞ்சரியின் செழுமையான தோளில் விழுந்து கிடந்தது.

சாரதா கல்லூரிச் சாலையைக் கடந்து, ஹஸ்தம்பட்டியில் திரும்பிப் பயணிகள் விடுதி, மாவட்ட நீதிமன்றம், மத்திய சிறைக்கூடம், கலெக்டர் பங்களா என்று ஒவ்வொன்றாகத் தாண்டிக் கொண்டிருந்தது.

கோரிமேடு தாண்டிச் சில நிமிடங்களிலேயே தமிழகத்தின் பழம்பெருமைவாய்ந்த மாடர்ன் தியேட்டர்... அதன் பின் சிறிது நேர ஓட்டத்துக்குப் பின் ஏர்க்காடு அடிவாரம்....

மஞ்சரியின் தோளில் படிந்திருந்த சிவப்பிரகாசத்தின் கரம் இப்பொழுது மஞ்சரியை மேலும் அதிகமாக நெருக்கியபோது அவள் சிணுங்கிக் கொண்டே அவர் கரத்தைப் பிடித்துக் கொண்டாள்.

கார் ஏர்க்காடு மலையில் இரண்டு வளைவுகளைக் கடந்து விட்டது.

''வாரத்திற்கு ஒரு முறை என்பது இப்பொழுதெல்லாம் மாதத்திற்கு ஒரு முறை என்றாகி விட்டது.... வரவர உங்களுக்குக் கஞ்சத்தனம் அதிகம் வந்து விட்டது. உங்களுடன் பேசவே கூடாது என்று இருந்தேன். நான் ஒரு மானங் கெட்ட பெண். எனக்கு வெட்கம் மானம் ஒன்றுமே கிடையாது.....''

மலைப்பாதையில் காரை மிக லாகவமாகத் திருப்பி ஓட்டிக் கொண்டிருந்த சிவப்பிரகாசம் தலையைச் சற்றே மேலே உயர்த்திச் சப்தமிட்டுச் சிரித்தார்.

''நான் உங்களுடன்வந்திருக்கவே கூடாது. ஆனால் உங்களைப் பார்க்கும் முன் இருந்த கோபம் உங்களைப் பார்த்தவுடன் மாயமாகி விடுகிறது... ஐம்பது வயதை நெருங்கும் இந்த விருத்தாப்பிய வாலிபரிடம் அப்படி என்ன மாயமோ தெரியவில்லை.!''

தன் அருகில் உட்கார்ந்து பேசிக்கொண்டு வரும் மஞ்சரியைத் தற்பெருமையுடன் திரும்பிப் பார்த்தார் அவர்.

''இந்த மனசு இருக்கிறதே இது மிகவும் விசித்திரமானது சார்...''

''நோ ஸார்... என்னை ஸார் என்று அழைக்காதே என்று எத்தனை தடவை கூறியிருக்கிறேன். அப்படி அழைப்பதே வயதை அதிகமாக்குவது போல் இருக்கிறது.''

''சிவப்பிரகாசம்... சிவப்பிரகாசம் எங்கே சொல்லு'' என்று அவள் தாடையைப் பிடித்துக் கிள்ளினார்.

''இல்லையா மிஸ்டர் சிவப்பிரகாசம்.''

''நிச்சயமாக...மனம், வயது, வெளித்தோற்றம், உள்ளுணர்வு எல்லாம் வெவ்வேறு தத்துவங்களின் அடிப்படை. ஒன்றுக் கொன்று தொடர்பில்லாதவை. ஆனால் இதைச் சரியான முறையில் நம்மை விட்டுத்தூர விலக்கி வைத்துக் கொள்ளவில்லை என்றால், ஒரு சமயத்தில் இவை யெல்லாம் ஒன்று சேர்ந்து நம்மையே இமைக்கும் நேரத்தில் சாய்த்துக் கீழே தள்ளி விடும்.

''மனம் இளமையுடன் இருந்தால் வயதின் வளர்ச்சி என்பது ஒரு பிரமையே.

வெளித் தோற்றம் உள்ளுணர்வைப் பாதிக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.


''இதற்கு உதாரணமாக என்னையே எடுத்துக் கொள். நீயே அடிக்கடி கூறுவது போல் என்னை விருத்தாப்பிய வாலிபன் என்கிறாய். என் வயதுக்கும் தோற்றத்திற்கும் உள்ள மாறுபாடுகளைப் பார்த்தாயா? அப்படியே வெளித் தோற்றம் சற்று வயதைச் சற்றுக் கூட்டிக் காட்டினாலும் கூட இந்த உணர்வு மயமான எண்ணங்கள்என்னிடம் வற்றி விடவில்லை. இன்னும் நான் நினைவினால் இளைஞன்தான். என்னால் இருபத்தைந்து, முப்பது வயது வாலிபனை விட வேகமாகச் செயல்பட முடியும். அவனை விட வேகமாக நடக்க முடி




யும்.... ஓட முடியும்.... என் அவளை விட வேகமாக....

அவளோ அவர் கரம் மேலும் அழுத்தமாக இறுக்கியது.

''இத்தனை ஆபத்தான மலைப்பாதையில் காரோட்டிக் கொண்டு வந்து கொண்டிருக்கிறபோது கூட காதல் குறும்புகள் உங்களை விட்டுப் போகவில்லையே!''





''ஆபத்தில் காதல் புரிவது ஒரு த்ரில்... திருட்டுத்தனமாகக் காதலிப்பது... காத்திருந்து காதலிப்பது... சில அசாதாரணமான நிலையில் காதலிப்பது....''

''நீங்கள் ஒரு நெருப்புப் பெட்டித் தொழிற்சாலை வைத்துக் கொண்டு இருப்பது. இருபத்தைந்து தொழிலாளர்களுடன் கஷ்டப் படுவதை விடக் காதல் செய்வது எப்படி என்று ஒரு புத்தகம் போட்டுக் காதலைப் பற்றி ஒன்றுமே தெரியாத இக்கால வாலிபர்களுக்கு வழி காட்டலாம்.''

''இக்காலத்துவாலிபர்களுக்குக்காதல் செய்வது எப்படி என்று புத்தகமா? நம்மை விற்று விட்டுப் போய் விடுவார்கள்.''

கார் அறுபதடி பாலத்தைக் கடந்து போய்க் கொண்டிருந்தது.

• • •

ஏர்க்காடு சேர்வராயன் ஹோட்டல். ஜன்னல் அருகில் தெரிந்த மலையைப் பார்த்துக்

கொண்டு நின்றான் மஞ்சரி. இருளில் மலையின் கருமை பூதாகாரமாகத் தெரிந்தது.

அகலமான இரட்டை அறையில் மங்கிய விளக்கு எரிந்து கொண்டிருந்தது.

இரவு மணி ஒன்றுக்கு மேல் இருக்கும். படுக்கையில் சிவப்பிரகாசம் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தார்.

மஞ்சரி ஜன்னல் வழியே வெளியே பார்ப்பதும், அங்கே நின்ற வண்ணம் படுக்கையில் கிடக்கும் சிவப்பிரகாசத்தைப் பார்ப்பதுமாக இருந்தான்.

சுவரோடு சுவராக உள்ள அலமாரிகளில் ஒன்று திறந்தே கிடந்தது. அதன் மேல் தட்டில்....

அவர் கொண்டு வந்திருந்த சிறிய கரிய நிற சூட்கேஸ்.

ரஜாய் எத்தனை கதகதப்பாக இருக்கிறது பார்... கமான் மை டார்லிங் ப்ளீஸ்...

''நீங்கள் தூங்குங்கள். எனக்குத் தூக்கம் வரும்போது நானே வந்து படுத்துக்கொள்கிறேன்.''

''நான் தூங்கிக் கொண்டிருக்கும்போது என்னைச் சுட்டுத் தள்ளி விடாதே. அநாவசியமாக என் தூக்கம் கெட்டுவிடும்.''

அவர் ஒரு ஜோக் அடித்த திருப்தியுடன் திரும்பிப் படுத்தார்.

''உங்களை அப்படி யெல்லாம் சுடமாட்டேன். திருட்டுத்தனமாகவோ, உங்களுக்குத் தெரியாமலோ அதைச் செய்ய இஷ்டமே இல்லை.''

''அப்படியானால்...?'' — சிவப்பிரகாசம் திரும்பிப் படுத்திருந்தபடியே கேட்டார்.



தடிமனான டர்க்கி டவல். அதன் அருகில் தற்காப்புக்காகக் கொண்டு வந்திருக்கும் கைத்துப்பாக்கி.

அவர் படுத்திருக்கும் கட்டிலைக் கடந்து அலமாரிக்கு வந்தான். துப்பாக்கியைக் கையில் எடுத்தான்.

இரண்டு முறை அதைத் திருப்பிப் பார்த்தான்.

''இருட்டில் இன்னும் என்ன செய்கிறாய்? உனக்குத் தூக்கம் வரவில்லையா?''

''தூக்கம் வரவில்லை.''

''இரவு பூராவும் அந்தத் துப்பாக்கியை ஆராய்ந்து கொண்டே நிற்கப்போகிறாயா?''

இருட்டில் அவன் சிரித்தான்.

''வா, வந்து படுத்துக்கொள். குளிரைப் பார்த்தாயா...அதென்ன உனக்குக் குளிரவே இல்லையா? அந்த மெல்லிய கவுனுடன் அப்படி நிற்கிறாயே! சீக்கிரம் வா! இந்த

''நேருக்கு நேர் நீங்கள் பார்த்துக்கொண்டிருக்கும்போதேதான் சுடுவேன்.''

''வெரி குட்... அப்படியென்றால் இப்பொழுது நான் என் தூக்கத்தைத் தொடரலாம்தானே?''

''தாராளமாக.''

''என் மேல் உனக்கு அவ்வளவு சினம் வரக் காரணம்?.. என்னை அறியாமல் உனக்கேதும் தீங்கு விளைவித்து விட்டேனா? அல்லது உன் விருப்பத்துக்கு மாறாக நான் ஏதேனும் செய்து விட்டேனா? என் நினைவுக்கு எட்டியவரை அப்படி ஏதும்செய்யவில்லையே!''

அவன் அருகில் வந்து ரஜாயில் புகுந்து கொண்டான்.

அவனுடைய இரண்டு கைகளையும் போர்வைக்குள் ஆராய்ந்தார்.

அவனுக்குச் சிரிப்புத் தாங்கவில்லை.

அவருக்கும்தான்.

''உயிரின் மேல் அவ்வளவு பயமா?'' என்றான்.

''யார்தான் உயிருக்குப் பயப்பட மாட்டார்கள்?

''இந்தத் தனிமையான வாழ்க்கையும், என்னைச் சுற்றி நானே சுயமாகச் சிருஷ்டித்துக்கொண்டிருக்கிற நிம்மதியான வாழ்க்கைச் சௌகரியங்களையும் அவ்வளவு எளிதில் இழக்க யாருக்குத்தான் மனம் வரும்? உனக்குத் தூக்கம் வரவில்லை என்பதால் நீ என் தூக்கத்தையும் இப்படிப் பேசியே கெடுத்துவிட்டாய். என்னிடம் மிகப்பெரிய வாழ்க்கை லட்சியம் என்பது ஒன்றுமில்லை மஞ்சரி... இருக்கும் காலம் சிறிதேயாம். இதனுள் ஏற்படுகிற நிகழ்கின்ற எல்லா இன்பங்களையும் என்னுடைய சொந்தச் செல்வத்தில் அனுபவித்துவிட வேண்டும்.''

''நீங்களாகக் கஷ்டப்பட்டுச் சேர்த்த சொந்தச் செல்வங்களா... அதில் ஏதோ அச்சுப்பிழை போல வார்த்தைப் பிழை இருக்கும் போலிருக்கிறதே!''

''அந்த ஆராய்ச்சியெல்லாம் இந்த நடு இரவில் குளிருக்கு இதமான இந்தப் போர்வைக்குள் அவசியம்தானா?'' அவளை அவர் இழுத்து அணைத்துக் கொண்டார்.

● ● ●

நியூ பேர்லாண்டில் உள்ள அவளுடைய வீட்டின் முன் அவளை இறக்கி விட்டுவிட்டுச் சிவப்பிரகாசம் போன பின்பு உற்சாகத்துடன் உள்ளே நுழைந்தாள் மஞ்சரி.

''இரவு ஏதோ டின்னர் இருக்கிறது.எத்தனை மணியானாலும் திரும்பி வருவேன் என்று கூறிவிட்டு இரவு பூராவும் வரவேயில்லை... நீ மனத்தில் என்னதான் நினைத்துக் கொண்டிருக்கிறாய்?....''

''ஒரு பாடலுக்கும் இன்னொரு பாடலுக்கும் இடைவெளி இல்லாமல் அச்சிட்டிருக்கிறீர்களே?''

''பிற்காலத்தில் இடைச் செருகல் வந்துவிடக் கூடாதே என்பதற்காகத்தான்!''

—சி. சகாப்தீன்



தாயாரின் வார்த்தைகளைக் காதில் வாங்கிக் கொண்டே தன் அறைக்கு வந்தாள்.

தாயார் அவளைப் பின்தொடர்ந்து உள்ளே வந்தாள்.

''மஞ்சரி... நீ படித்த பெண். மனம் வைத்தால் இப்போது நீயாகத் தேடிக் கொண்டிருக்கும் இந்த உத்தியோகத்தை விட வேறு நல்ல உத்தியோகத்தைத் தேடிக் கொள்ள முடியும்.''

''ஏன்! நெருப்புப் பெட்டி தொழிற்சாலை வைத்திருக்கும் சிவப்பிரகாசத்துக்கு உதவியாளராக வேலை செய்வது, மாதமானால் ஆயிரத்துக்குக் குறையாமல் சம்பளம் வாங்குவது... அதைவிட அதிகமாக அவர் அன்பையும், நம்பிக்கையையும் வேறு விதங்களில் வீடு கொள்ளாமல் பொருட்களாகவும், பீரோ கொள்ளாமல் புடவைகளாகவும், நகைகளாகவும் சேர்ந்து வைத்திருப்பதெல்லாம் சம்பாத்தியமாகப் படவில்லை.?''

''இப்படி நீ சம்பாதிப்பதை விட ஒரு முழம் கயிற்றில் உயிரை விடலாம்மா..எல்லா வாழ்க்கையும் வாழ்க்கையாகிவிடுமா?மானத்துடன் வாழவேண்டும். உனக்கென்ன இப்படியெல்லாம் வாழ வேண்டும் என்று தலையெழுத்தா? நீ மனம் வைத்தால் படித்த, கண்ணியமான ஒரு வாலிபனுக்கு மனைவியாக முடியாதா? அப்படிப்பட்ட விருப்பமே உனக்கு இல்லையா?''

கண்ணியமான ஒரு வாலிபனுக்கு மனைவியாகவா?....

அவள் கண்ணாடி முன் உட்கார்ந்து கொண்டு அடர்த்தியான தலைக் கேசத்தை அவிழ்த்து விட்டுக் கொண்டு அதைப் பிரஷ் செய்து கொண்டிருந்தாள்.

''இதற்காகத்தான்சேலம் போகவேண்டும் சேலம் போக வேண்டும் என்று துடித்தாயா? இந்த மானங்கெட்ட வாழ்க்கையைத் தேர்ந்தெடுத்துக்கொள்ளத்தானா?''

தாயார் நிலைவாயிற் படியைப் பிடித்துக் கொண்டு கண்ணீர் விட்டாள்.

''மைசூரில் இருந்தபோது எத்தனை நிம்மதியுடன் இருந்தேன். உன் அப்பா இறந்தார்.... உன்னை வளர்த்துப் படிக்கவைத்து, ஆளாக்கி ஒரு நல்ல பையன் கையில் ஒப்படைக்க வேண்டும் என்றுதான் துடித்துக் கொண்டிருக்கிறேன்....

''திடீரென்று உன் நடவடிக்கைகளில் மாறுதல் ஏற்பட்டது. பள்ளிக்கூடம் போக மாட்டேன் என்றும். ஒரு வழியாகப் பள்ளிப் படிப்பை முடிப்பதற்குள் போதும் போதுமென்றாகி விட்டது. பின்பு கல்லூரிப் படிப்பிற்கும் இதே வல்லடிதான்.

''யாரோடும் பேசுவதில்லை. யாரோடும் விளையாடுவதில்லை. உன் அறையை விட்டு வெளியே கூட வரமாட்டாய். எப்பொழுது பார்த்தாலும் தாழ்ப்பாளைப் போட்டுக் கொண்டு உள்ளேயே உட்கார்ந்திருப்பாய். இல்லையென்றால் குக்கரஹல்லி ஏரிக்கரையில் போய் உட்கார்ந்து விடுவாய்...

''உனக்காக நான் டாக்டருக்கு எவ்வளவு கொடுத்திருப்பேன் தெரியுமா?

''திடீர்னு நீ சேலம் போக வேண்டும் என்று அடம் பிடிக்க ஆரம்பித்தாய்...

''நமக்குச் சேலத்தில் யார் இருக்கிறார்கள் யாருமே இல்லையே! அங்கே எதற்குப் போக வேண்டும் என்று கேட்டேன். அதற்கு நீ சரியாகப் பதிலே சொல்லவில்லை.

''இங்கே வந்து அவசரம் அவசரமாக ஒரு இடத்தைப் பார்த்துக் குடியேறி....''

''நிறுத்து... முழுமையான ஒரு ஃப்ளாஷ் பேக் முடிந்து விட்டது... இதையே திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருக்காதே! ஆமாம். நான்தான் இங்கே வரச் சொன்னேன். வந்து விட்டோம். இப்ப என்னவாகி விட்டது! வந்த ஒரே வாரத்துக்குள் சிவப் பிரகாசத்தின் தீப்பெட்டித் தொழிற்சாலையில் வேலையும் கிடைத்து விட்டதா இல்லையா?''

''அந்த வேலையை வாங்கின லட்சணத்தைத்தான் சொன்னாயே! மானங் கெட்டவளே! அதை நினைத்தால் குமட்டிக்கொண்டு வருகிறது.''

மஞ்சரி சிரித்தாள்.

''ஆமாம். அப்படித்தான் வாங்கினேன். அந்த மனிதரின் எதிரே உட்கார்ந்து அவரை மயக்கித்தான் வாங்கினேன்....

''நான் எல்லாவற்றுக்கும் தயார் என்பது போலக் காட்டிக் கொண்டுதான் வாங்கினேன்....

''திடீரென்று அவர் கையைப் பிடித்துக் கொண்டு கெஞ்சிச் சரஸமாடித்தான் வாங்கினேன்.


''நீங்கள் எனக்கு வேலை தரவில்லையென்றால் உங்கள் அறையிலேயே உட்கார்ந்து தர்ணா செய்வேன்... வெறும் தர்ணா அல்ல.. வெறும் உடம்புடன் தர்ணா உட்காருவேன் என்றேன். என்னையும் என் நோக்கங்களையும் புரிந்து கொண்ட அந்த செக்ஸ் மேனியாக் உடனே வேலை கொடுத்து விட்டது... இப்ப அதற்கு என்ன?''

''மஞ்சரி... அடிப்பிசாசே! உன் உடம்பிலே ஏதாவது மானம் வெட்கம் இருக்கா? எதுக்குடி இந்தத் தலையெழுத்தெல்லாம் உனக்கு? இப்படி ஒரு வாழ்க்கை அவசியம் தானா? ஏதோ கடவுள் புண்ணியத்திலே உன் அப்பா சம்பாதித்தது. அவர் ஓய்வு பெற்ற பின் வந்த பிராவிடெண்ட் பண்ட், அவர் இறந்த பின் வந்த இன்ஷ்யூரன்ஸ் பணம்... இது போதாதா?''

''இதெல்லாம் உனக்குத்தான் தேவை. எனக்கு அதற்கு மேல் ஒன்று வேண்டும். அந்தத் தேவையை நானாகத்தான் அடைய முடியும்.''

''அதுக்காக வயதானவருடன் இப்படிச் சுற்ற வேண்டுமா? நாளைக்கு உனக்குக் கல்யாணம் என்று வந்தால் அதற்கு இதெல்லாம் ஒரு குந்தகமாகக் குறுக்கே வருமடி முண்டமே!''

''வரட்டுமே... நானே சொல்வேன். என்னை யாரும் கல்யாணம் பண்ணிக்க வேண்டாம். நான் ஒரு விதவை...'' ஏதோ சொல்லக் கூடாத ஒன்றைச் சொல்லி விட்டது போல வார்த்தை வெளிப்பட்ட சூட்டுடன் நிறுத்திக் கொண்டு உதட்டைக் கடித்துக் கொண்டாள்.



''கர்மம்டி உன்னோட... கல்யாணமாகாத ஒரு கன்னிப் பெண்ணின் வாயிலிருந்து வரும் வார்த்தையா இது? உன் நாக்கிலே சமித்தை வைத்துக் கொளுத்த.''

அவள் குரூரமாகச் சிரித்தாள்.

''நீ உடனடியாகச் சிவப்பிரகாசம் கம்பெனி வேலையை விட்டு விட வேண்டும். அந்த வயதானவருடன் சுற்றுவதையும் நிறுத்த வேண்டும். நாம் நாளைக்கே மைசூர் புறப்பட்டேயாகவேண்டும்.''

''முடியாது. நான் இனி மைசூருக்கு வரவே மாட்டேன். நீ வேண்டுமானால் போய்க்கொள். சேலம்தான் என் வீடு.''



இவர்: ஏங்க...! உங்ககிட்டே ரொம்ப வருஷமா டிரைவராக வேலை பார்த்த அந்தப் பெரியவரை ஏன் நீக்கிட்டீங்க?

அவர்: கார் ரேடியேட்டரிலிருந்து தண்ணீர் திருடி விற்றிருக்கிறார் அதனால் தான்!

—கரந்தை து. சுவாமிநாதன்

''உன் அம்மா சொல்கிறேன். என் வார்த்தைகளை நீ கேட்கவில்லை என்றால் உன் கண் முன்னாலேயே தூக்குப் போட்டுக் கொண்டு தொங்குவேன்.''

''மிரட்டுகிறாயா!... என்ன சொன்னே? நீ என் அம்மாவா? யார் சொன்னது நீ என் அம்மாவென்று? உன்னை என்றுமே என் மனம் அம்மாவாக ஏற்றுக்கொண்டதேகிடையாது. வாயை மூடிக் கொண்டு என் செய்கைகளுக்குக் குறுக்கே வராமல் இருப்பதானால் இரு. இல்லையென்றால் இப்பொழுது ஒன்று

சொன்னாயே! அதைச் செய்து கொள்... அதுவும் இங்கே வேண்டாம். மைசூருக்குப் போய்ச் செய்து கொள். எனக்கு அநாவசியமாகப் புத்திமதிகள் கூறிக் கொண்டிருக்க வேண்டாம்....'' படபடப்புடனும், சினத்துடனும் கூறிவிட்டு வேகமாக வெளியேறி விட்டாள்.

அவள் வீட்டை விட்டு வெளியேறும்போது பின்னால் தாயாரின் விசும்பல் ஒலி கேட்டது.

ராஜாஜி எக்ஸ்டன்ஷன் பகுதியில் உள்ள அந்தப் பிரும்மாண்டமான பங்களாவுக்கு எதிரே வந்து நின்று கொண்டிருந்தாள்.

அந்தப் பங்களாவுக்கு எதிரே உயரமான நுணா மரம் ஒன்று இருந்தது. அதனுடைய அடர்த்தியான நிழலில் நின்றாள்.

மஞ்சளும், வெளிர்ப் பச்சையுமாக வர்ணம் பூசப்பட்ட பெரிய கட்டிடம் அது. அதன் முகப்பில் பெரிய இரும்பு கேட். அது மூடப்பட்டிருந்தது.

நுழை வாயிலில் உள்ள கறுப்பு நிறக் கல்லில் லெக்ஷ்மி என்ற பெயரும் இருந்தது. வெகு நேரம் வரை கண்களில் கண்ணீர் வழியப் பார்த்தாள்.

மிகப் பெரிய மாடியும், கண்ணாடி ஜன்னல்களும், கம்பிக் கிராதிகளும்....

காம்பவுண்ட் சுவருக்கு உள்ளே இரண்டு இரும்பு ஆங்கிள்கள் நடப்பட்டு அதில் ஆனந்த விலாஸ் பட்டு நூல் வியாபாரம் என்று இருந்தது.

மனத் துயருடன் வீட்டுக்கு வந்தாள். தாயார் அவள் வெளியேறும்போது எந்த நிலையில் சுவரோடு சுவராகச் சரிந்து கீழே உட்கார்ந்திருந்தாளோ, அதே நிலையில் அப்படியே சுருண்டு படுத்துக்கொண்டிருந்தாள். மூர்ச்சை அடக்கிப் பின் விசும்புவதால் உடம்பு மட்டும் அடிக்கொரு தடவை ஆடிக் கொண்டிருந்தது.

''அம்மா....''

''அம்மா... என்னை மன்னிச்சுடு. ஏதோ எனக்கு இருந்த ஆத்திரத்திலே உன்னிடம் ஏதேதோ பேசி உன் மனசைப் புண்படுத்திட்டேன்... எழுந்திரு. சாப்பிட வா. எதையும் மனசில் போட்டுக் கொள்ளாதே.''

தாயாரை எழுப்பி உட்கார வைத்துக் கட்டி அணைத்துக் கொண்டாள் மஞ்சரி. அவள் கண்களில் கண்ணீர் கொட்டிக்கொண்டிருந்தது.

''சில சமயங்களில் நான் அப்படி என்னை மறந்து ஏதேதோ பேசிவிடுகிறேன். உன் மனம் நோகப் பேச வேண்டும் என்று நான் திட்டமிட்டுப் பேசவில்லை... ஏதோ உள் நெஞ்சத்து வேகம்.... எழுந்து சாப்பிட வா''

''அம்மா இப்பொழுதெல்லாம் என்னால் தூங்கவே முடியவில்லை. தெரியுமா? நான் தூங்கி எத்தனையோ ஆண்டுகள் ஆகிவிட்டன. ஏன்டா இரவு வருகிறது என்று இருக்கிறது. ஒவ்வொரு நாளும் இன்று பூராவும் பகல் பொழுதாகவே போய் விடக் கூடாதா என்று நான் ஏங்குகிறேன்.... அது ஏன் என்று எனக்கே தெரியவில்லை.''

தாயார் மகள் மஞ்சரியைப் பீதியுடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

இதே மாதிரிப் பேசிப் பேசித்தான் மைசூரிலிருந்தவரை டாக்டர்களுக்குச் செலவு வைத்தாள்.

மீண்டும் அம்மாதிரிச் செலவு வைத்து விடப் போகிறாளோ என்கிற அச்சம் அவளைச் சூழ்ந்து கொண்டது.

''நான் ஒன்றும் உன்னைச் சொல்ல மாட்டேன். தயவு செய்து என் வழியில் குறுக்கிடாதே. நான் ஒரு திட்டத்துடன்தான் இங்கே வந்திருக்கிறேன். நான் செய்து முடிக்க வேண்டிய வேலைகள் சில இருக்கின்றன. அது முடியும்போது நானே உன்னை அழைத்துக் கொண்டு மைசூர் திரும்பி விடுவேன்...''

தாயாருக்கு மஞ்சரி பேசுவது எதுவுமே புரியவில்லை. அவள் ஏதேதோ ஒன்றுக்கொன்று தொடர்பு இல்லாமல் பேசுவதாகப் பட்டது.

இவள் மனசில் என்ன இருக்கிறது? திடீர் திடீர் என்று இவள் ஏன் இப்படிப் பேசுகிறாள்? இங்கே ஏதோ வேலையாமே, திட்டமாமே!

கண்களைத் துடைத்துக் கொண்டே எழுந்தாள்.

மாலை மங்கிவிட்டது. தொழிற்கூடம் ஓமலூர் சாலையில் ரொம்பவும் தள்ளி, கோனை பெருமாள் கோயில் சரடு (மலை) அடிவாரத்தில் இருந்தது. ஆறு மணியுடன் தொழிற்கூடம் முடிந்து விடும். அந்தப்

குமார்: என்னடா ரமேஷ் உன் சாப்பாட்டுக் கேரியரில் 'எல்' போர்டு கட்டித் தொங்க விட்டிருக்கு?

ரமேஷ்: அதுவா? என் மனைவி கல்யாணத்துக்கு முன்னால் சமைச்சதே இல்லையாம். இப்பத்தான் சமைக்கக் கத்துக்கொள்றாளாம். அதுதான் எச்சரிக்கையா 'எல்' போர்ட்.

- எஸ். சீனிவாசன்



பிராந்தியத்து ஜன நடமாட்டமும் அந்த நேரத்துடன் நின்று அமைதிக்குள் மூழ்கிப் போகும்.

எல்லாரும் போன பின்பு மாலைச் சூரியன் முழுமையாக மறைந்து இருள் கவிழ்ந்த பின்புதான் மஞ்சரியை அழைத்துக்கொண்டு சிவப்பிரகாசம் வெளியே புறப்படுவார்.

கார் ஓமலூர்ச் சாலையில் ஓடி ரத்னு தியேட்டர் சதுக்கத்தைக் கடந்து சாரதா கல்லூரிச் சாலைக்கு வந்தபோது காரை ராமகிருஷ்ணு சாலைப் பக்கம் செலுத்தச் சொன்னுள்.

அவள் என்றுமே அப்படிக் கேட்டதில்லை. ராஜாஜி எக்ஸ்டன்ஷன் வரும்போது ஆனந்த விலாஸ் பட்டு – பங்களாவின் முன் காரை நிறுத்தச் சொன்னுள்.

''இந்தப் பங்களா இந்தப் பகுதியிலேயே ரொம்ப அழகான பங்களா! கொஞ்சம் பழைய காலத்துப் பாணியில் இருந்தாலும் இதனுடைய கம்பீரத்தைப் பார்த்தீர்களா?''

சிவப்பிரகாசம் வியப்புடன் மஞ்சரியைப் பார்த்தார். ''உனக்கெப்படிக் குறிப்பாக இந்தப் பங்களாவின் மேல் ஓர் அபிமானம்? ஒரு விஷயத்தைச் சொன்னுல் நீ ஆச்சரியப் படுவாய்.

''இது என்னுடைய பங்களாதான். இதில் இப்பொழுது பட்டு நூல் மற்றும் புடவை வியாபாரம் செய்யும் ஆனந்தரங்க முதலியாருக்கு ஆறு லட்சத்துக்கு இதை விற்று விட்டேன்.''

அவள் உற்சாகமாகக் கேட்டாள்.

''உங்கள் பூர்வீகப் பங்களாவா?''

''இல்லை. என் மனைவி மூலமாக எனக்குக் கிடைத்தது. அவள் இறந்த பின் இதில் இருக்க எனக்குப் பிடிக்கவில்லை. விற்று விட்டேன்!''

''உண்மையில் மனைவியா?''

''உன் குறும்பு உன்னை விட்டுப்போகாது. மனைவிதான்.''


''அவள் ஏன், எப்படி இறந்தாள்?''

அவர் அவளைப் பார்த்துக் கொண்டே காரை ஸ்டார்ட் செய்தார்.

''அவளுக்குக் கல்யாணத்துக்கு முன் பிருந்தே ஒரு வயிற்று வலி உண்டு. என்னைக் கல்யாணம் செய்து கொண்ட பின் பல வைத்தியர்களை வைத்துப் பார்த்தேன். வெளி நாட்டிலிருந்தெல்லாம் டாக்டர்களை வர வழைத்துப் பணத்தைத் தண்ணீர் மாதிரி செலவு செய்தேன். ஒன்றும் பயன் அளிக்க வில்லை.''

''அதற்காக....''

''அதை ஏன் கேட்கிறாய் மஞ்சரி... அவள் அந்த முடிவை ஏன் எடுத்தாள் என்று எனக்குப் புரியவில்லை.... நாம் கூட அடிக்கடி பேப்பர்களில் படிக்கிறோமே, வயிற்று வலி தாங்காமல் தற்கொலை... என்று. அவளும் அந்த முடிவைத்தான் தேர்ந்தெடுத்துக் கொண்டு விட்டாள். அதிலும் எப்படிப்பட்ட முடிவு தெரியுமா? சொத்துக்களின் பேரில் தெளிவான உயில் ஒன்று எழுதி வைத்து விட்டுச் சுட்டுக் கொண்டு விட்டாள். மூன்று துப்பாக்கி ரவைகள்.



''அவள் மரணமடைந்து மூன்று மணி நேரத்துக்குப் பின்தான் எனக்கு விஷயம் தெரியும்.''

மஞ்சரியின் கண்கள் கண்ணீரைக் கொட் டிக் கொண்டிருந்தன.

மஞ்சரி தன் கழுத்தைப் பிடித்து நெரித்துக் கொண்டாள்.

தலையை அப்படியும் இப்படியும் திருப்பிக் கொண்டாள். பற்களைக் கடித்தாள்.



''லாட்டரிச் சீட்டிலே லட்ச ரூபாய் விழுந்ததும் இன்னொரு வீடு வாங்கப் போறேன்னியே, என்னுச்சு?''

''லாட்டரிச்சீட்டு வாங்கியே இருந்த வீடும் ஏலத்துல போச்சு!''

—அ. சிங்காரவேலு

காரை மிக மெதுவாக ஓட்டிக் கொண்டு வந்த சிவப்பிரகாசம் அருகில் உட்கார்ந் திருக்கும் மஞ்சரியின் இந்தச் செய்கையால் அதிர்ச்சி அடைந்தார்.

''ஏன் இப்படிக் கழுத்தை நெரித்துக் கொள்கிறாய்...எடு கையை...'' காரோட்டிக் கொண்டே அவள் கழுத்திலுள்ள கரத்தைத் தன் பலத்தை உபயோகித்து எடுத்து விட் டார்.

''ஏன் இப்படியென்று ஒரு மாதிரியாகி விட் டாய்?''

''லட்சுமியின் நிலையைக் கேட்டவுடன் எனக்கு என்னமோ போலாகி விட்டது. அவள் தன்னைத் தானே சுட்டுக்கொண்டாள்

என்றபோது உடம்பில் திடீரென்று ஒரு சூடு உண்டாகி விட்டது....

''அதோ உன் கழுத்தில் இருக்கிறதே வடு... அங்கேதான் அவளும் கட்டுக்கொண்டாள்....''

''வயிற்று வலி தாளாமல்?''

''ஆமாம்.''

கார் காந்தி ரோட் திருப்பத்தில் நின்றது.

''இதோ இந்தக்காம்பவுண்டுக்குள் உன்னை தள்ளி இருக்கிறதே அதுதான் அவள் பிறந்தகம்... இப்பொழுது அவர்கள் யாரும் இல்லை. எனக்கும் அவளுக்கும் நட்பு உண்டாகும்போதே அவளுடைய பெற்றோர்கள் இல்லை. இரண்டு சகோதரர்கள் மட்டும் தான்.''

''லக்ஷ்மியின் சகோதரர்கள் இப்பொழுது எங்கே?''

''டெல்லியில் ஒருவனும் லக்னௌவில் ஒருவனும் செட்டில் ஆகி விட்டார்கள்.''

''விதவையாக்கப்பட்ட கணவனால் அவளுக்கு இப்போது நான் காண்பித்தேனே அந்தப் பங்களா, கார், ஏத்தாப்பூர் வசிஷ்ட நதியோரத்தில் இரண்டு ஏக்கர் நிலத்தில் ஏராளமான பாக்கு மரங்கள்... இப்படி நிறைய உண்டு.''

செகந்தராபாத்திலிருந்து புகைவண்டியில் வந்து கொண்டிருந்தேன். அப்போது இருவர் பேசிக் கொண்டு வந்தார்கள்:

ஒருவர்: என்ன பையனை ஸ்கூலில் சேர்க்கப் போனாயே என்ன கேட்டார்கள்? பில்டிங் ஃபண்ட் எவ்வளவு கொடுத்தே?

மற்றவர்: பில்டிங் ஃபண்ட் எல்லாம் கேட்கவில்லை. பையனுடை அம்மாவும் வேலைக்குப் போறாங்களா, உங்களால் பையன் படிப்புக்கு எவ்வளவு நேரம் ஒதுக்க முடியும் என்றெல்லாம் கேட்டார்கள்.

பணம், பணம் என்று அலையாமல், பையனின் படிப்புக்காக அக்கறை காட்டும் பள்ளிக்கூடம் கூட இருக்கத்தான் இருக்கிறது.

—எஸ். சந்திரசேகர்



''உங்களுக்கு எப்படி லக்ஷ்மி அறிமுகமானாள்? அவளுடைய கணவரின் எஸ்டேட்டில் மானேஜராக இருந்தீர்களா?''

கார் மீண்டும் புறப்பட்டது.

''அட எப்படி இவ்வளவு சரியாக உன்னால் கூற முடிந்தது? அருகில் இருந்து பார்த்த மாதிரிக் கூறிவிட்டாயே?''

தான் ஏதேனும் அதிகமாகத் தன்னைக் காட்டிக் கொண்டு விட்டோமோ என அவளுக்குள் ஓர் எச்சரிக்கை எழுத்து எழுதப்பட்டது.

''எல்லாம் ஒரு ஊகம்தான்.''

''தனியே ஏர்க்காடு சென்று விட்டுத் திரும்பும்போது ஒரு திருப்பத்தில் பிரேக் சரியாகப் பிடிக்காததால் கார் இடதுபுறம் மலையில் மோதி வலப்புறம் தள்ளப்பட்டுச் சரிவில் விழுந்து உருண்டு விட்டது.

''எங்களுக்கு உடல் முழு உருவமாகக் கிடைக்கவில்லை.''

''வேண்டாம், நிறுத்துங்கள். கேட்கவே என்னவோ போல் இருக்கிறது.''

''ரொம்ப நாள் வரை அவள் தனிமையில் வாடினாள். அவளைத் தனியே விட்டு விட்டு வர எனக்கு இஷ்டமில்லை. அவளுடன் இருக்கவும் தர்ம சங்கடமாக இருந்தது. எனக்கு அன்றெல்லாம் இருந்தால் இருபத்தைந்து வயது இருக்கும். அவளுக்கு இருபது அல்லது இருபத்திரண்டு வயது இருக்கும்.''

''உங்களுக்கு நான் இருப்பது தர்ம சங்கடமான நிலையை உருவாக்கும் போல இருந்தால் நான் வேண்டுமானால் வெளியேறி விடுகிறேன்'' என்றேன்.

''அவள் என்ன சொன்னாள், தெரியுமா?''

''வேண்டாம், பிரகாஷ், நீங்களும் என்னை விட்டுப் போய் விடாதீர்கள். நீங்களும் போய்விட்டால் நான் தற்கொலை செய்து கொண்டு விடுவேன்'' என்று கெஞ்சினாள்.

''உண்மையாகவா?''

''ஏன் அப்படிக் கேட்கிறாய்?''

''கணவன் மேல் உண்மையான அன்பு உள்ள பெண்ணாக இருந்திருந்தால் அவள் அப்படிக் கேட்டிருக்கவே மாட்டாள். நீங்கள் சொல்வதைக்கேட்கும்போது அவள் இரட்டை வாழ்க்கை வாழ்ந்தாள் என்றும் கூற இயலவில்லை.''

சிவப்பிரகாசம் சில நிமிஷங்கள் தடுமாறிப் போனார். ''அவள் ரொம்ப நல்ல பெண். இளமையும் துடிப்பும் மிக்கவள். புற நிலையில்தான் வேறு மாதிரியாகத்தான் வாழ வேண்டும் என்று நிர்ப்பந்தம் இருக்கும்போது வெளிப்படையாக அவளால் ஏதும் துணிந்து செய்ய முடியவில்லை.''

''பயந்த சுபாவியாக இருந்திருப்பாள்.''

''நீ சொல்வது நூற்றுக்கு நூறு உண்மை. எனக்கென்னமோ இன்று உன்மேல் ஏதோ சாமி வந்திருக்கிறது என்று நினைக்கிறேன்.''

''லக்ஷ்மியைப் பற்றி நீ கூறும் விஷயங்கள் எல்லாமே ஏதோ இட்சிணி கூறுவது போல் தோன்றுகிறது.''

''அம்மாடிரி அவன் நினைப்பதைக் கூட அவள் குடும்பத்தில் இருப்பவர்கள் எதிர்த்திருப்பார்கள்.''

''உண்மை.''

''ஆனால் அவளை உங்களுடைய காதல் சாகசத்தால் அப்படியே மயக்கி விட்டிருப்பீர்கள்.''

''வெரி கரெக்ட்.''

''அந்த வயசில் உங்களுடைய கம்பீரம், சிரித்துச்சிரித்து நயமாகப் பேசுகிற பேச்சு... அவளை அப்படியே உங்கள் மடிக்குக் கொண்டு வந்திருக்கும்.''

''பிறகு?''

''அவள் உடல் பொருள் எல்லாவற்றையும் உங்கள் முன் சரணாகதிப்படுத்தி உங்களை அப்படியே நம்பியுமிருப்பாள்.''

''ஆகா...''

''இப்பொழுது நீங்கள் கதை சொல்கிறீர்களா நான் சொல்கிறேனு?''

தன் அருகில் உட்கார்ந்திருக்கும் மஞ்சரியை அப்படியே ஒரு கையால் கட்டி அணைத்து அருகில் நெருக்கிக் கொண்டார்.

''இந்த வயதிலேயே இத்தனை துடிப்பும் சாகஸமும் வைத்திருக்கும் நீங்கள் அந்த வயதில் எப்படி இருந்திருப்பீர்கள்! அது தான்அவளைஉங்கள்வலையில் சிக்கவைத்தது.''

''சிக்க வைத்து.... சொல்லேன். என் பாதியில் நிறுத்தி விட்டாய்?''

அதற்கு மேல் அவள் ஒன்றும் பேசவில்லை.

''நீங்கள்தான் சொல்ல வேண்டும். நான் சொல்ல என்ன இருக்கிறது?''

''சிநேக பூர்வமான அன்பில் எல்லாவற்றையும் பகிர்ந்து கொண்டோம்... இன்ப துன்பம் எல்லாவற்றையும்....''

''அதில் ஒரு சிறு மாற்றம்.''

''என்ன மாற்றம்?''

''இன்பத்தை நீங்களும், துன்பத்தை அவளுமாக....''

இப்பொழுதும் சிவப்பிரகாசம் தடுமாறித்தான் போனுர். பிறகு சமாளித்துக்கொண்டு, ''ஆமாம்...நான் வேறென்ன செய்யமுடியும்? அந்த வயிற்று வலியிலிருந்து அவளை மீட்க நான் எவ்வளவோ பாடுபட்டேன். காட்டாத டாக்டர் இல்லை'' என்ருர்.

''தனக்கு வயிற்று வலியே இல்லை என்று கூட அவள் அலறியிருப்பாளே!''

''மஞ்சரி'' — அவர் அதிர்ந்து போய் இப்படி அழைத்தபோது அவள் சிரித்துக் கொண்டாள்.


''அதாவது இந்த டாக்டர்கள் மருந்து, இன்ஜெக்ஷன் இவைகளுக்குப் பயந்து தனக்கு வயிற்று வலி இல்லை என்று கூறியிருப்பாளே!''

''ஆமாம்... ஆமாம்...'' என்று அவர் கூறும்போது அவர் நெற்றியில் வியர்வை அரும்பி விட்டது. நெஞ்சில் தேங்கிவிட்ட உமிழ் நீரை விழுங்கிக் கொண்டே காரைத் தம் பங்களாவுக்குள் செலுத்தினுர்.

பங்களாவில் யாரும் இல்லை.

சிவப்பிரகாசம் முதலில் கீழே இறங்கினுர்.

அவள் காரிலேயே உட்கார்ந்திருந்தாள்.



காரின் முன்னுல் அவர் நின்ருர். அவரையே பார்த்தபடி காரில் உட்கார்ந்திருந்தாள் மஞ்சரி.

அதிகப் பருமனும், அதிக ஒல்லியுமில்லாத நிதானித்த வளர்த்தி. வயது இவரிடம் எங்கோ போய் ஒளிந்து கொண்டு விட்டது.

இந்த வயதிலும் ஒரு முப்பது முப்பத்தைந்து வயதுக்காரனின் இளமைத் துடிப்பு இவருக்கொரு வரப்பிரசாதமே!



நோயாளி: ரெண்டு பழம்தான் சாப்பிட்டேன். அதிலிருந்து பயங்கரமான வயிற்று வலி டாக்டர்.

டாக்டர்: எந்தப் பழம் சாப்பிட்டீர்கள்?

நோயாளி: பலாப் பழம்தான்!

—போத்தனூர் ஜே. ஷாஜஹான்

இதை வைத்துக் கொண்டு இவர் என்ன வெல்லாம் செய்கிருர்!

இரண்டு பையன்கள் வெளியூர்களில் வாழ்கிருர்கள். நான்கு வருஷங்களுக்கு முன் மனைவி புற்றுநோயால் காலமாகி விட்டாள்.

இந்த உல்லாசிக்கு அன்றும் சங்கிலிகள் கிடையாது. இன்றும் கிடையாது.

—அவள் சிரித்துக் கொண்டாள்.

சிவப்பிரகாசம் அருகில் வந்து கதவைத் திறந்தார்.

''வா....'' அவள் அவர் பின்னுல் சென்ருள்.

மாடிக்கு அவர்கள் சென்றனர்.

அவர் உடைகளைக் களைந்து விட்டு டாய்லெட்டுக்குப் போனபோது...

மஞ்சரி நிதானமாக டெலிபோன் டயலைச் சுழற்றினன். டாக்டரை அழைத்து உடனே சிவப்பிரகாசம் பங்களாவுக்கு வரும்படி கூறினன். பின்பு மௌனமாக உட்கார்ந்து விட்டான்.

உயரமான சிவந்த உடம்புடன் மேலே தடிமனன டவலைப் போர்த்திக் கொண்டு மெத்தைக் கட்டிலில் வந்து சாய்ந்து உட்கார்ந்தார்..

மஞ்சரி ஒன்றுமே பேசவில்லை.

''ஏன் இடீரென்று மௌனமாகி விட்டாய். உன்னை ஏதோ குழப்பி யிருக்கிறது.''

''என்னை எதுவுமே குழப்பவில்லை. அவ்வளவு சுலபமாக என்னைக் குழப்பவும் முடியாது. என்னைப் பொறுத்த வரையில் என் சிந்தனை, செயல் எல்லாமே அசாதாரணமான திட்டத்துடன்தான் இருக்கும்.


''அந்தத் திட சிந்தனையும், செயல் திட்டமும் இல்லையென்றல், நான் மைசூரிலிருந்து இங்கே வந்திருக்கவே மாட்டேன்.''

''நான் ஏதோ கேட்டால் நீ ஏதோ பதில் சொல்கிறய்.... சரி... போகட்டும். ஃப்ரிட்ஜில் என்ன ட்ரிங்க் இருக்கிறது.

விநாயகருக்குக் கடிதம்

இராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள ரன்தம்பர் கோட்டையில் உள்ள பிள்ளையாருக்கு அவருடைய பக்தர்களிடமிருந்து ஒவ்வொரு நாளும் நூற்றுக்கணக்கான கடிதங்கள் வருகின்றன. திருமணத்திற்கு அழைப்பிதழ்களும், ஆரம்ப விழாவுக்கான அழைப்பிதழ்களும் ஏராளமாக வந்து சேர்கின்றன. இப்பகுதியில் உள்ள மக்கள் எந்த மங்கலச் செயலை ஆரம்பித்தாலும் முதன் முதலாக இந்த விநாயகருக்குக் கடிதம் மூலம் தகவல் அனுப்பி விடுகின்றனர். பிரத்தியேகமாக இதற்கெனத் தபால் நிலையமே ஏற்படுத்தப் பட்டுள்ளது.

''செய்தி மடல்'' இதழிலிருந்து
வி. ரங்கநாதன்



அவர் பேசிக் கொண்டிருக்கும்போதே டாக்டர் வேகமாக உள்ளே நுழைந்தார்.

''வாங்க டாக்டர், ஒரு வாரமா தீராத வயிற்று வலி... அவர் தூங்கியே ஒரு வாரமாகிவிட்டது. டாக்டர்களிடம் உடம்பைக் காட்டவே பயப்படுகிறர். டாக்டர்கள் ஏதேனும் புதிய வியாதிகளைச் சொல்லி விட்டுப் போய்விடுவார்கள் என்கிறர்.''

டாக்டர் புன்னகையுடன் படுக்கையில் சாய்ந்த நிலையில் படுத்திருந்த சிவப்பிரகாசத்தின் அருகில் வந்தபோது அவர் திடுக்கிட்டார். அவருக்கு ஒன்றுமே புரியவில்லை.

தம் முன் நடப்பதை நம்பவே அவருக்குச் சில நிமிஷங்கள் பிடித்தன.

''மஞ்சரி... என்ன இதெல்லாம்?''

''நீங்கள் பேசாமல் இருங்கள். உங்களைக் கேட்டால் இப்படித்தான் கூறுவீர்கள்... டாக்டர் உங்கள் பரிசோதனையை ஆரம்பிக்கலாம்... நான் உங்களுக்கு உதவுகிறேன்.''

''டாக்டர், இவன் பொய் சொல்கிறன். எனக்கு வயிற்று வலியும் இல்லை, ஒன்றுமில்லை.''

''பொய் டாக்டர்... இவர் இப்படிச் சொல்லிச் சொல்லியே இந்த வியாதியை வளர்த்துக் கொண்டு விட்டார்.''

''மஞ்சரி....''

சிவப்பிரகாசம் கத்தினர்.

''டாக்டர் இவர் நன்றகத் தூங்குவதற்கு ஏதேனும் மருந்து கொடுங்கள். இவர் தூங்கியே ஒரு வாரம் ஆகியிருக்கும்.''

டாக்டர் தாம் கொண்டு வந்திருந்த பிரிஸ்கிரிப்ஷன் பேடில் வேகமாக ஏதோ எழுதினர்.

''நான் . முதலுதவிச் சிகிச்சை மட்டும் செய்து விட்டுப் போகிறேன். நீங்கள் கூறுவதைப் பார்த்தால் இது வேறு ஏதேனும் சிக்கலான வ்யாதியாகக் கூட இருக்கலாம். எதற்கும் நீங்கள் இவரை உடனே ஜி.எச். ஸில் சேர்த்து விடுங்கள். நான் அதற்கான என் சிபாரிசைத் தருகிறேன்'' என்று கூறி விட்டு, தாம் எழுதிய சிபாரிசுக் குறிப்பை மஞ்சரியிடம் கொடுத்தார்.

சிவப்பிரகாசமோ, டாக்டர் தம்மைப் பரிசோதிக்கவே அனுமதிக்கவில்லை.

''நீங்கள் குழந்தை போல இப்படி அடம் பிடித்தால் நான் என்ன செய்ய முடியும்?''

''நீங்கள் ஒன்றும் செய்ய வேண்டாம். தயவு செய்து இங்கிருந்து வெளியேறினல் போதும்....''

''இதை விட உதாசீனமாகப் பேசிய நோயாளிகளை யெல்லாம் நான் பார்த்திருக்கிறேன். என்னைப் பொறுத்தவரையில் நோயாளிகளை இரண்டு விதமாகத்தான் பிரிப்பது வழக்கம்...ஒரு பிரிவு குழந்தைகளைப் போன்றவர்கள். ரொம்பப் பயந்த சுபாவிகள். எதைச் சொன்னலும் செய்வார்கள். எந்த மருந்து கொடுத்தாலும் அடம் பிடிக்காமல் வாங்கிக் கொண்டு விடுவார்கள். அவர்களுக்குத் தன் உடம்பின் மேல் அவ்வளவு அக்கறை.

''மற்றொரு ரகம் கிட்டத்தட்ட பைத்தியம் போல. எதற்கும் அவ்வளவு சுலப


தாவண்கெரே
எடுப்பான கலப்பழகுடன் மிடுக்கான பாணி அமைக்கிறது.
மென்மையான இழை யுடன் கூடிய ப்ரியா டெரீன்* புடவைகள் — எழில்மிகு பூக்களின் டிசைன் — ஒவ்வொரு வரின் மனதையும் கொள்ளை கொள்ளும் வண்ணம்.
தாவண்கெரே
ஃபாஷன் துணிரகங்கள்
ஸ்ரீ தாவண்கெரே காட்டன் மில்ஸ் லிட்.
ஹனுமந்தப்பா கட்டிடம்,
சித்ரதுர்கா ரோடு,
தாவண்கெரே-577 002.
ஷோ ரூம்கள்:
காவேரி பவன், பெங்களூர்-560 009.
தாஜிபன்பேட், ஹூப்ளி-580 020.
சித்ரதுர்கா ரோடு, தாவண்கெரே-577 00

மாகச் சம்மதிக்கவே மாட்டார்கள். அடம் பிடிப்பார்கள்.''

''நீங்க வாங்க டாக்டர்...'' என்ற மஞ்சரி சிவப்பிரகாசத்தின் அருகில் போய் நின்று அவர் இரண்டு கைகளையும் பிடித்துக்கொண்டாள்.

அவர் எதற்கும் உடன்படாமல் போகவே மஞ்சரியின் உதவியுடன் எப்படியோ ஓர் ஊசியை மட்டும் கையில் போட்டுவிட்டுப் புறப்பட்டார்.

''தூங்குவதற்கு ஒரு இன்ஜெக்ஷன் மட்டும் போட்டிருக்கிறேன். இன்னும் ஒரு மணி நேரத்தில் தூங்க ஆரம்பித்து விடுவார். பிறகு கூப்பிடுங்கள். வயிற்று வலி ரொம்ப அதிகமாக இருந்தால் இந்த மாத்திரைகளில் இரண்டு கொடுங்கள். இல்லையென்றால் ஜி. எச். சுக்கு எடுத்துக் கொண்டு போக ஏற்பாடு செய்யுங்கள்'' – டாக்டர் வெளியேறிவிட்டார்.

டாக்டர் வெளியேறியவுடன் சிவப்பிரகாசம் ஆத்திரத்துடன் திரும்பினார். அவருக்குப் பின்னால் மஞ்சரி சுவரில் சாய்ந்து கொண்டு நின்றாள். கைகள் இரண்டும் புடவைத் தலைப்புக்குள் இருந்தன.

''மஞ்சரி, என்ன இதெல்லாம்?''

''நாடகம்... மியர் டிராமா... இப்பொழுது நான் நடத்திய நாடகம் உனக்கு வேறு ஒரு கால கட்டத்தை நினைவுபடுத்தியிருக்க வேண்டும்.''

''மஞ்சரி...''

''நான் மஞ்சரி இல்லை... லக்ஷ்மிடா... அயோக்கிய நாயே!

''எந்த பங்களாவை ஆறு லட்சத்திற்கு விற்றுவிட்டேன் என்று கொஞ்சம் கூடக் கூச்சமில்லாமல், இரக்கமில்லாமல் கூறினாயோ, அந்தப் பங்களாவின் மாடி அறையில் நடந்ததை நினைவு படுத்திக்கொண்டு பார்.. நான் யார் என்பது தெரியும்.


''அது என்னுடைய பங்களா. என் கணவன் ஏர்க்காடு கார் விபத்தில் மரணமடைந்த பின் என்னுடைய தனிமையைப் பயன்படுத்திக் கொண்டு மாடியறையிலேயே நீ என்னைச் சிறை வைத்து விட்டாய்.

''என்னைத் தீர்த்துக்கட்ட நீயாகக் கற்பனை செய்து உருவாக்கிய ஒரு சதிதான் லக்ஷ்மிக்குத் தீராத வயிற்று வலி எனப் புரளி. பொய்.

''இதை உலகம் நம்ப வேண்டும் என்பதற்காக டாக்டர்களை வரவழைக்க வேண்டியது. அவர்கள் முன்னால் ஒரு நாடகமாட வேண்டியது.

''இவள் இப்படித்தான் டாக்டர், யாரிடமும் உடம்பைக் காட்டவே மாட்டேன் என்கிறாள்... என்று கூறி நான் வேண்டாம் என்று கூறும்போதே ஊசி, மருந்துகளை நிர்ப்பந்தமாக உள்ளே செலுத்துவாய்?.. இப்பொழுது நினைவுக்கு வருகிறதா?....''

சிவப்பிரகாசம் மிகுந்த பதற்றத்துடன் படுக்கையை விட்டு எழுந்து வர முற்பட்ட போது ''மரியாதையாக இருந்த இடத்திலேயே இரு. அதோ அந்த ட்ரேயில் என்ன டைப் அடித்து வைத்திருக்கிறேன் பார். அதில் உன் கையெழுத்தைப் போட்டுவிட்டு



உன் இஷ்ட தெய்வத்தைக் கடைசி முறையாகப் பிரார்த்தனை செய்துகொண்டு விடு.''

''லக்ஷ்மி'' – என்று அவர் கத்தினார்.

''ஆமாம். உன்னால் வஞ்சனையாகக் கழுத்தில் சுடப்பட்டுக் கொல்லப்பட்ட லக்ஷ்மி.

''என் உடல் பொருள் எல்லாவற்றையும் நான் உன்னிடமே சரணாகதிப்படுத்தத் தயா



உள்ளூர்வாசி: இயணைப்புப் படையினர் வந்ததே கடைசிக் கட்டத்தில்... நெருப்பை அணைக்காமலே வேடிக்கைப் பார்க்கிறாங்களே?

தீ. ப. சிப்பந்தி: எரிய வேண்டியது கொஞ்சம்தானே பாக்கி யிருக்கிறது.. தண்ணீரை வீணாக்க வேண்டாமேன்னுதான்...

—ப. பழனி

ராக இருந்தும் கூட ஒரு விதவை என்ற காரணத்தால் வாழ்க்கைத் துணைவியாக ஏற்க மனமில்லாத பேடி நீ. என் பொருள் எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு, என் உடலையும் தேவையான அளவு அனுபவித்து விட்டு...இதோ இப்பொழுது நடந்ததே அதே போல ஒரு நாடகமாடிச் சுட்டுக்கொன்ற மிருகம். நீ.''

அவர் எழுந்து வர முற்பட்ட போது புடவைத் தலைப்பை விட்டு வெளிப்பட்ட அவள் கரத்தில் துப்பாக்கி இருந்தது.

''மரியாதையாக அதைப் படித்துவிட்டு அதில் கையெழுத்துப் போட்டுவிடு.''

அதைப் படித்தார்.





'எனக்கு நீண்ட நாட்களாக வயிற்று வலி உண்டு. அதை வைத்தியத்தில் குணப்படுத்த முடியாமல் தோல்வி கண்டு இன்று தற்கொலை செய்து கொள்கிறேன். என் தற்கொலைக்கு யாரும் பொறுப்பல்ல.' என்று ஆங்கிலத்தில் டைப் அடிக்கப் பட்டிருந்தது.

''மஞ்சரி!'' – சிவப்பிரகாசம் கத்தினார்.

''அன்று என் பொருளை அபகரிக்க அனாதை விதவையான என்னை வஞ்சித்து இப்படி எழுதி வாங்கித்தானே இதோ இந்த இடத்தில் துப்பாக்கி முனையை வைத்து அழுத்தி என்னை விட்டே ட்ரிகரை அழுத்தும்படி நிர்ப்பந்தப்படுத்தி என்னை நானே சுட்டுக் கொள்ளும்படி செய்து அதில் வெற்றியும் அடைந்தாய்.... துரோகி... கதையா அளக்கிறாய்?

''வயிற்றுவலி தாளாமல் அவளாக சுட்டுக் கொண்டாள் என்று ஒரு பொய்யைத் திரும்பத் திரும்பக் கூறி அதை நம்பவும் வைத்தாய்.

''இடத்தை விட்டு எழுந்திருக்காதே. இப்பொழுது என் உயிரின் மேல் எனக்கு ஆசையில்லை. உன்னைப் பழி தீர்க்கவே நான் மறுபிறவி எடுத்திருக்கிறேன். சட்டத்தின் முன் நீ பெறாத தண்டனையை இப்பொழுது நான் கொடுக்கப் போகிறேன்....

''அன்று உனக்கு என் பொருள் தேவைப் பட்டது. ஆனால் எனக்கு உன் பொருள் என் கால் தூசிக்குச் சமம். இன்று எனக்கு வேண்டியதெல்லாம் என் குண்டுகளால் துளைக்கப்பட்டு, மாளப் போகிற உன் உடல் தான்.''

சிவப்பிரகாசத்தின் கண்கள் கலங்கிக் கொண்டிருந்தன...

''மஞ்சரி.... லக்ஷ்மி.... என்னை மன்னித்து விடு.... அன்று இருந்த இளமைத் துடிப்பும் உன் பொருள்மேல் இருந்த ஆசையிலும் அப்படிச் செய்து விட்டேன்'' என்றார் தழுதழுத்த குரலில்.

''உன் குற்றத்தை உனக்குப் புரிய வைக்க நான் மறு ஜென்மம் எடுக்க வேண்டியிருக்கிறது பார்த்தாயா! உயிரின் சாபம் உன்னைத் துரத்திக் கொண்டே இருக்கும் சிவப்பிரகாசம்... உம்... அதில் கையெழுத்துப் போடு.''

அவள் ஒன்று, இரண்டு, என்று எண்ண ஆரம்பித்தவுடன் பயந்துபோன சிவப்பிரகாசம் அதில் கையெழுத்துப் போடக் குனிந்தார்.

கையெழுத்தும் போட்டு விட்டார்.


அந்நேரம் பார்த்து ரொம்பத் திட்டமிட்டு அவர் அருகில் வந்த மஞ்சரி போன ஜன்மத்தில் சிவப்பிரகாசம் தன் கழுத்தில் எங்கே துப்பாக்கியை வைத்து அழுத்தினாரோ... அதே இடத்தில் வைத்து அழுத்தினாள்.

● ● ●

வயிற்று வலி தாங்காமல் நெருப்புப் பெட்டி தொழிற்சாலை நடத்தும் சிவப்பிரகாசம் தற்கொலை.

டாக்டர் பிரிஸ்கிருப்ஷன்... மற்றும், தன் தற்கொலைக்கான காரணம் இவைகளை எழுதி வைத்துவிட்டுக் கழுத்தில் சுட்டுக் கொண்டு ரத்த வெள்ளத்தில் விழுந்து கிடந்தார்.

அவருடைய உதவியாளரும், அவர் கம்பெனியில் வேலை செய்யும் மஞ்சரி என்ற பெண் கொடுத்த தகவலின் பேரிலும் போலீசார் ஸ்தலத்திற்குச் சென்று பிரேத விசாரணை தொடங்கினர்.



வட்டமேஜை



"நெஞ்சமெல்லாம் நீயே" வித்தியாசமான முறையில் இருந்தது விமர்சனம்.

மரக்காணம் — நீலா

கோவி. மணிசேகரனின் 'துரோகம்' ஆழமான மனத்தைத் தொடும் வகையில் அழுத்தமாய் அமைந்த அருமையான சிறுகதை.

அயன்புரம் — த. சத்தியநாராயணன்

டாக்டர் ஜி. ஜெயராஜ் அவர்களின் ஒன்றரை நிமிட நேரத்தில் ஆபரேஷன் மிகவும் பயனுள்ள கட்டுரை. படிக்க மிகவும் விறுவிறுப்பாக இருந்தது.

லெட்சுமாங்குடி — எம். ராகவன்

கல்கி விடுமுறை மலரில் வெளியான 'இந்தியாவில் சுற்றுலா' கட்டுரையின் மூலம் நம்மிடையே காணப்படும் குறைகளை ஆசிரியர் நன்கு வெளிப்படுத்தி உள்ளார். 10 வருடங்களுக்கு முன்பாகவே சிங்கப்பூர் வருடத்துக்குப் பத்து லட்சம் சுற்றுலாப் பயணிகளைப் பெற்றுள்ளது குறிப்பிடத் தக்கது. நான்கு வண்ண ஓவியங்களும், சிக்கியர் கோவில் படமும் பிரமாதம்.

பட்டுக்கோட்டை பிரபாகரின் 'சந்திரனே சாட்சி' சுவையான நாவல்.

கோவை-1 — இளஞ்சேரன்

பெரியவர்கள் முதல் சிறியவர் வரை எல்லோரும் படித்து மகிழும் விஷயங்கள் நிறைந்த மலர். இருபது கல்கி இதழ்களில் வரக்கூடிய விஷயங்களை ஐந்து கல்கி இதழ் விலைக்குக் கொடுத்திருக்கிறீர்கள். நன்றி!

விழுப்புரம் — கே. எஸ். குமார்

இன்று காலை 7 மணிக்குத்தான் கல்கியின் விடுமுறை மலர் 1983 கைக்குக் கிடைத்தது. மாலை 4 மணிக்குள் எல்லாவற்றையும் படித்து முடித்து விட்டேன். முத்தான கதைகள், சத்தான கட்டுரைகள் மலிவான விலை! பாராட்டும் தரமுள்ள இதழைத் தயாரித்தளித்த உங்களுக்கு எனது மனமார்ந்த பாராட்டுதல்கள்.

சேலம்-7 — ரா. வேங்கடசாமி

'நீங்கள் கேட்டவை' பகுதியில் செல்வகுமார் என்பவரின் கேள்விக்கு அளிக்கப்பட்டுள்ள பதில் என்னைத் திகைப்படைய வைத்தது. அன்று முதல் இன்றுவரை காழ்ப்புணர்ச்சி என்றால் என்னவென்றே அறியா வகையில் கவிஞர் வைரமுத்து போன்ற பலரை வளர்த்து வருவதில்தான் மகிழ்ச்சி கண்டு வருகிறேன்.

சென்னை-26 — பொன்னடியான்
சிறப்பாசிரியர் 'முல்லைச்சரம்'

12—5—83 அன்று காலை தூக்கம் கலைவதற்குச் சில நொடிகளுக்கு முன்பு பற்கள் முழுவதும் மழுங்கிப்போன சின்ன ரம்பம் ஒன்று கனவில் வந்தது. விழித்து எழுந்தால் பேப்பர் பாய் போட்டுவிட்டுப் போன 'கல்கி' ஃபேன் காற்றில் படபடக்க '628' எழுதிய கட்டுரை கண்ணில் பட்டது!

600 035 — சி. பூபால் சிங்

கனவைப் பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரையில் உதாரணங்களைப் படித்ததும் என்னால் சிரிப்பை அடக்கவே முடியவில்லை. கனவைத் தவிர்க்கக் கூறியிருந்த யோசனை மிகப் பிரமாதம்.

கோவை — புனல்வேந்தன்

தமிழக உருக்காலைகளில் உற்பத்தியாகும் பொருட்களுக்கு விற்பனைவரி விதிவிலக்கு 19-1-76 மீதல் தந்திருப்பது குறித்துத் தங்கள் 1-5-83 பத்திரிகைக் குறிப்பு பார்த்து அதிர்ச்சியடைந்தோம்.

நாங்கள் ரீ-ரோலிங் பொருட்களுக்கு எந்தக் காலத்திலும் விற்பனை வரி வசூலித்ததில்லை. உச்ச நீதி மன்ற முடிவால் வியாக்கியானத்தினால் வந்த வரியே இது. நாங்கள் மூலப் பொருட்களாகிய பில்லட், ஸ்கிராப், வகையறாவிற்கு ஒரு முறை தமிழகத்தில் 4 சத விகிதம் விற்பனை வரி செலுத்துகிறோம். உற்பத்திச் செலவு செய்து மறு உருட்டுச் செய்து மீண்டும் 4 சதவீதம் வரி வாங்க இயலாது.

தமிழ்நாடு உருக்கு உருட்டாலை கவுன்சில்
தலைவர் ச. நாராயணன்.

கல்கியில் வெளியான தகவல்கள் அனைத்தும் பொதுக் கணக்கு தணிக்கைக் குழு வெளியிட்டுள்ள கருத்துக்களின் அடிப்படையில் எழுதப்பட்டன

-ஆசிரியர்

அத்தியாயம் 20

வசந்தா அவளைப் பெரியக்கா என்று அழைத்தாள். அங்கிருக்கின்ற எல்லா ஜனங்களும் அவளைப் பெரியக்கா என்றுதான் அழைத்தார்கள். பெரியக்காவின் புருஷன் மாதிரி இருக்கிறவன் கூட அவளைச் சில சமயம் அவ்விதமே கூப்பிட்டான்.

வசந்தாவுக்கு அக்கா மாதிரி அங்கே நிறையப் பேர் இருந்தார்கள். முப்பது முப்பத்திரண்டு நாற்பது வயதுப் பெண்கள் கூட அந்தச் சேரியில் வசந்தா மாதிரியே தொழில் செய்தார்கள்.

வசந்தாவும் பெரியக்காவும் இரண்டு நாள் ஆஸ்பத்திரி வாசலிலேயே காத்திருந்து சடலத்தை வாங்கிக் கொண்டார்கள்.

கண்ணன்: இன்று சமையல் செய்தது போலவே நம் வீட்டுக்கு விருந்தாளிகள் வரும் சமயம் சமையல் செய்.

சரோஜா: ஏங்க? அவ்வளவு நன்றாக இருக்கா?

கண்ணன்: இல்லே. வாயில் வைக்க முடியவில்லை. இப்படிச் சமைத்தால் விருந்தாளிகள் ஒரு வேளைக்கு மேல் நம் வீட்டில் சாப்பிட மாட்டார்கள். உடனே போய்விடுவார்கள். செலவு மிச்சம்.

—லலிதா செல்லப்பா



ஆஸ்பத்திரி போலீஸ்காரர் பெரியக்காவை அடையாளம் தெரிந்து உன் கூட்டத்து ஆளா என்று கேட்டபோது பெரியக்கா பயந்து விட்டாள். மனு, சடலம் பெற்றுக் கொண்ட கையெழுத்து எல்லாம் வசந்தாவையே போடச் சொன்னாள். வசந்தாவின் தங்கை மல்லிகா என்று விவரம் கொடுத்தாள். வசந்தாவின் அப்பா பெயரே மல்லிகாவின் அப்பா பெயராயிற்று.

சடலம் நசித்துப் போயிருந்தது. உதடும் மூக்கும் தவிர புறங்கையும் கணுக்காலும் தவிர வேறெங்கும் பார்க்க முடியாமல் கட்டுப் போட்டிருந்தது.

சடலத்தை அருகில் உள்ள காட்டிலேயே கொளுத்திவிட்டுச் சேரிக்கு வந்தார்கள். பெரியக்கா நிறையப் பணம் இறைத்திருந்தாள். சேரிக்கு வந்ததும் பேயாட்டம் ஆடினாள்.

''எல்லே தாண்டா நீங்கடின்னு கேக்கிறீங்களா? எவடி நுட்டு அழுவுறது. எங்காளு உங்காளுன்னு அடிச்சிக்கினு லாரி ஏறிப் பூட்டீங்க. எவடி லோல்படுறது? இனிமேல் டோல் கேட்டு நாண்டுங்க சொல்றேன். வெட்டிப் போட்டுர்றன் பாரு'' என்று கூச்சலிட்டாள்.

ஆனால் பதினோரு மணிக்குப் படையல் வைத்து, கல் நட்டு அதற்குத் தண்ணீர் ஊற்றியபோது பெரியக்கா உண்மையிலேயே அழுதாள். யார் பெத்த பொண்ணோ என் தோள்ல போட்டு வளத்தனே... தலை சீவி முடிச்சேனே... என்று அழுதாள். வசந்தாவுக்குள் துக்கம் பீறிட்டது. தலையை விரித்துக் கருங்கல்லைக் கட்டிக்கொண்டு கேவினாள். 'எம் மல்லிகா, எம் மல்லிகா என்னையும் கூட்டிக்கடி. என்னை வுட்டுட்டுப் போவாதடி' என்று அழுதாள்.

எல்லோருக்குமே அழுகை வந்தது.

அன்று இரவு யாரும் தொழிலுக்குப் போக வேண்டாம் என்று சொல்லி விட்டார்கள். கூட்டி வருகிற பையன்கள் விஷயம் தெரியாமல் ஆட்களோடு சேரிக்குள் நுழைந்தபோது 'ச்சீ போங்கடா நாங்களே நொந்து போய்க் கெடக்கோம்' என்று சீறினார்கள்.

பிற்பகலில் மல்லிகாவின் பெட்டியை உடைத்துத் திறந்தாள். அதில் மொத்தம் எட்டுப் புடவைகள், ஒன்பது ஜாக்கெட்டுகள் நாலு பாவாடைகள், உள் பாடிகள் நிறைய பிளாஸ்டிக் மணி மாலைகள் இருந்தன. பெட்டி உள் பக்கம் மூடியில் யேசு, புத்தா வெங்கடாசலபதி, காளி படங்கள் இருந்தன.

அங்கிருந்த பெண்கள் ஆளுக்கொரு புடவை எடுத்துக் கொண்டார்கள். இருப்பதில் நல்ல புடவையை அவர்களே வசந்தாவுக்குக் கொடுத்தார்கள். அலுமினிய டப்பாவிலிருந்த காசைப் பெரியக்கா எடுத்துக்கொண்டாள். எண்ணி முடிந்து கொண்டாள். ''பொடவையைத் தோச்சுக்கட்டுங்கடி நாறித்திரங்களா'' என்று கத்தினாள். சேரியின் திறந்த வெளியில் கலர் கலராய் இறந்தவளின் புடவைகள் தொங்கின. கண்ணில் படுகிறபோதெல்லாம் துக்கத்தைக் கொடுத்தன.

''இன்னிக்கு ராத்திரி மட்டுமில்லே. இன்னும் ரெண்டு நாளைக்கு நீ போவாணும்'' என்று வசந்தாவைப் பெரியக்கா விட்டு விட்டாள்.

''நாங்க விடிஞ்சதும் போலாமா'' என்று ஒரு பெண் கேட்க ''எக்கேடாவது கெட்டு ஒழி'' என்று முணு முணுத்தாள்.

வசந்தா இல்லாமல் மறுநாள் இரவு சேரியில் எப்போதும் போல் வியாபாரம் களைகட்ட ஆரம்பித்தது. காடா விளக்கு வெளிச்சத்தில் வெளியூர் ஆட்கள் நடமாட்டம் துவங்கியது.

தெற்கு வடக்காக நீண்டு கிடக்கும் ரயில்வே ஸ்டேஷன் மேற்குப் பக்கம் நல்லூர் நெடுஞ்சாலை. ஸ்டேஷன் தாண்டி


இரும்பு
குதிரைகள்
பாலகுமாரன்

கிழக்குப் பக்கம் முழங்கால் உயரம் உளர்ந்திருக்கும் தும்பைச் செடிகளைத் தாண்டிப் புல்மேடு கடந்து அமுக்கமாய் இருக்கும் சேரி. சேரியைச் சுற்றி வேலிக்காத்தான் செடிகள். அடர்த்தியாய் இரண்டாள் உயரம் வளர்ந்திருந்தது. ஸ்டேஷன் வெளிச்சத்தை உள்ளே வராமல் தடுத்தது. உற்றுக் கவனித்தால் திட்டமிட்டே வேலிக்காத்தான் செடிகளைப் படுதா மறைப்பாக இந்தச் சேரி வளர்த்திருப்பது தென்படும். அடுப்பெரிக்க என்று யாரும் வேலிக்காத்தான் செடிகள் மீது கத்தி வைத்துவிட முடியாது. சேரி கூட்டமாய் எதிர்க்கும். ஏண்டா பொழைப்புல மண்ணைப் போடறீங்க என்று கூச்சலிடும்.

இரவு வேளைகளில் ஸ்டேஷன் வெளிச்சம் சேரியிலிருந்து தெரியும். சேரி நடமாட்டம்

கண்ணன்: இந்த நோயாளியிடம் வயிறு குலுங்கும்படி ஜோக்குகளைச் சொல்லிச் சிரிக்க வைக்கிறாரே டாக்டர். ஏன்?

முரளி: மருந்தைக் குலுக்காமல் கொடுத்து விட்டாராம். வயிற்றில் மருந்து குலுங்கத்தான்!

—லலிதா செல்லப்பா



ஸ்டேஷனிலிருந்து தெரியாது. காடா விளக்கு வெளிச்சமும் அடுப்படி வெளிச்சமும் சேரியைத் தாண்டிப் போகாது.

சேரியிலிருந்து எல்லாத் திக்கு நோக்கியும் ஒற்றையடிப் பாதை பிரியும். வெளியாட்கள் வருகையும் அந்த ஒற்றையடிப் பாதையின் மூலம்தான். பழக்கப்பட்ட ஆள் துணையோடுதான் உள்ளே சுலபமாய் தடம் கண்டு வரமுடியும்.

அந்த இடத்திலிருந்து இரண்டு மணி நேர ஓட்டத்தில் சென்னையைத் தொட முடியும். நீண்ட பயணத்தில் வரும் லாரிகள் சென்னையின் எல்லையைத் தொடும் முன்பு இளைப்பாறிப் போகும் இடம் இது. அநேகமாய் இரவு பன்னிரண்டு மணிக்கு மேல் லாரி மந்தை மந்தையாய் நிற்க ஆரம்பித்து விடும்.

இரவில் பாதை ஓரம் நிற்கிற பெண்களைப் பார்த்து லாரிகள் மெதுவாக நகரும். க்ளீனரைக் காவல் வைத்துவிட்டு டிரைவர் மெல்ல இறங்கித் தனக்குப் பிடித்த பெண்ணோடு புல் மேடு தாண்டிக் குடிசைப் பக்கு நடப்பான். புல் மேட்டில் சிரித்துக் கொஞ்சுகிற பெண் சேரி வந்ததும் சிடுசிடுப்பாள். அவசரம் காட்டுவாள். வந்த நபர் அதிகம் ராங்கித் தனம் செய்தால் சேரியிலிருந்து சாக்கடைக்கு முடியும் பாதையில் கூட்டிப் போய் ''நேரே போ. ரோடு வரும்'' என்று சொல்லி விடுவாள். கணுக்கால் சேறோடு போனவன் மறுபடி சேரிக்குத்தான் வரவேண்டும்.

''லெப்ட்லயா திரும்பின ரைட்ல இல்ல போகச் சொன்னேன்...''

''ஏய் நீ பீச்சகைன்னு சொல்லலே.''

''பெரிக்கா பீச்சைக்கைன்னு ரைட்டுத் தானே. ஐய்யய்ய காலெல்லாம் சாக்கடை நாத்தமா நாறுது. ரெண்டு ரூபாய்க்குப் பால்மாறினியே அதான் கடவுளா பாத்து உன்னைச் சேறுல தள்ளிட்டாம் போ.''

விடிந்த பிறகுதான் தெரியும் அந்தப் பாதை இடது பக்கம் திரும்பினாலும் வலது பக்கம் திரும்பினாலும் சாக்கடையில்தான் முடியும் என்பது.

ஆனால் விடியல் வரை காத்திருந்து அந்தப் பாதை எங்கே போகிறது என்று எவரும் ஆராய்ச்சி செய்ததில்லை.

வசந்தா கூட நாலைந்து ஆளை சாக்கடைக்கு அனுப்பி யிருக்கிறாள்.

அப்படிப் போனவன் வெகு நேரம்வரை திரும்பி வராதது கண்டு பயந்திருக்கிறாள். காடா விளக்குடன் ஆள் அனுப்பிப் பார்த்ததில் அந்த ஆள் சாக்கடைக்கருகே குத்துக் காலிட்டு உட்கார்ந்திருந்தான். காரணம் கேட்டபோது விடிந்த பிறகு போகலாம் என்று உட்கார்ந்து விட்டானாம்.

மறுபடி அவனுக்கு நல்ல பாதை காட்டிய போது அவன் சற்றுத் தூரம் போய்விட்டு இதுவும் சாக்கடையில்தான் முடியும் என்று கூறிச் சேரியிலேயே குத்துக்காலிட்டு உட்கார்ந்து விட்டான். விடிந்த பிறகுதான் போவேன் என்று சொல்லி விட்டான்.

வசந்தா ரோடு வரை துணை வந்து பத்து ரூபாய் இனும் வாங்கினாள்.

ஒரு ஆணின் குணாதிசயம், அவன் வெப்பமான மூச்சுடன் அவள் மேலே படருகிற போது மட்டுமில்லை, இப்படிப் புல்மேட்டுப் பாதையில் நடந்து வருகிறபோதே கூட வசந்தாவுக்குத் தெரிந்து விடும். இவன் எவ்வளவு ரூபாய்க்குத் தேறுவான் என்று கணக்கு போட்டுவிட முடியும்.

புல்மேடு தாண்டுகிறதற்குள் தொட்டுவிட்டால் பத்து ரூபாய் இனும் நிச்சயம். சேரி வரை பேசாது வந்தால் இரண்டு ரூபாய் மேல் துட்டு வாங்குவதே சிரமம்.

பாட்டுப் பாடு என்று இருபது ரூபாய் கொடுத்தவன்தான் அதிசயம்.

பனி விழும் மலர் மனம் — பாடியவன் இப்போது எங்கிருக்கிறானோ. அவன் தோளில் சாய்ந்து எதற்காகவோ அழுது தீர்த்தோம்.

ஒருவேளை மல்லிகா செத்துப் போனது முன் கூட்டியே தெரிந்து போய் அழுகை வந்து விட்டதா. அன்று முழுக்க மனசு பாரமாய் இருந்த காரணம், தவிப்பாய் இருந்த காரணம் மல்லிகா மரணம்தானு?

அட... அவனிடம் இருபது ரூபாய் வாங்கிக்கொள்ளவில்லையே. பாவி ஏமாத்திவிட்டானே...

இல்லே, அவன் ஏமாற்றவில்லே. தபதப வென்று நான்தான் ஓடி வந்து விட்டேன். அது ஏமாற்றுகிற முகம் இல்லே. வேறெவனாவது எம்பேர் சொல்லித் தட்டிக்கினு போயிருந்தாலும் போயிருக்கும். போவட்டும் விடு.

துட்டே வாங்காது-போன முதல் இடம் இதுதான். எங்கே போனேம்? உட்கார்ந்து பேசினேம். பாடினேம். டான்ஸ் ஆடினேம். வுடு போவுது வுடு.

பனி விழும் மலர் வனம் — மனசுள் ட்யூன் ஓடியபோது இருபது ரூபாய் நோட்டு ஞாபகம் வந்தது.

மல்லிகாப் பொண்ணு உசிரோட இருந்தா அதனிடம் இவன் எதிரே ஆடினதையும் பாடினதையும் சொல்லி யிருப்பேனே.

''இருபது ரூபா கொடுத்தானு...ஆடினதுக்கா...ஏய் எனக்குக் காட்டுறி அவனே...'' என்று நச்சரித்திருப்பாள்.

சட்டென்று இமைக்கும் நேரத்தில் காணுது போய் விட்டாள். நானும் இப்படித்தான் முடியப் போகிறேனு? அடிபட்டுத் தெரு நாயாய்ச் சாகப் போகிறேனு? மல்லிகா என்னேக் காப்பாத்துடி உனக்குக் கல்லு வச்சுக் கோயில் கட்றேண்டி. என்னே நல்லபடியாக் காப்பாத்துடி.

விடியல் நேரத்தில் ஒரு போலீஸ்காரர் வசந்தாவைக் காலே எட்டு மணிக்கு ஸ்டேஷனுக்கு வரச் சொன்னுர்.

பெரிக்கா சின்னப் பையனேத் துணைக்கனுப்பினுள்.

வசந்தாவுக்கு அங்கே உள்ள எல்லாப் போலீஸையும் தெரியும். வழக்கம் போல் தயங்கி ஸ்டேஷன் பின் பக்கம் போனுள். உள்ளே வரச் சொன்னுர்கள். 'உன் தங்கச்சி தானே மல்லிகா' என்று கேட்டார்கள். புரியாமல் ஆமா என்றபோது ஆங்கிலத்தில் பேசிக் கொண்டார்கள். வெள்ளேச் சட்டையும் வெள்ளேப் பேண்டுமாய் இன்ஸ்பெக்டர் முன்னுல் உட்கார்ந்திருந்த ஒருவன்,

''தங்கச்சின்னு எப்படி சொந்தமா, தொலேவா?'' என்று கேட்டான்.

''சொந்தத் தங்கச்சிங்க.'' என்று வசந்தா பதில் சொல்ல எழுதிக் கொண்டார்கள்.

''வசந்தா அடிச்ச வண்டி கண்டு பிடிச்சிட்டாங்க. அந்த டிரைவர் பேர்ல கேஸ் நடக்கும். அது முடிஞ்ச பிறகு உன் தங்கச்சி செத்ததுக்குத் தனியா ஒரு கேஸ் போடலாம்.''

''கேஸா வாணுங்க. பெரிக்கா கோச்சுக்கும்.''

''துட்டு வேணுமா?''

''துட்டா?''

''உன் தங்கச்சி செத்துப் போனதுக்கு நஷ்டஈடு இன்ஷூரன்ஸ் இருக்கும். உன் தங்கச்சி செத்துப் போனது உனக்கு நஷ்டம் தானே?''

''ஆமாங்க.''

''துட்டு வேணுமா?''

''வேணும்.''

''எத்தினி துட்டு தெரியுமா? நாப்பதாயிரம் கேட்டு கேஸ் போடப் போறேம்.''

''யாருங்க?''

''நான் போடப் போறேன். நான் வக்கீல்''

''நாப்பதாயிரமா?''

''இன்னும் ஜாஸ்தி கேப்பமா?''

''இன்னும் ஜாஸ்தியா?''

''அவ்ளோ வராது. பத்தாயிரம், பன்னிரெண்டாயிரம் தருவான். நீ என்ன சொல்றே?''

''புடுங்குவாங்களே.''

''யாரு?''

கண்ணன்: ஆபீசில் தேள் பாம்புகள் நடமாடுகின்றனவே ஏன்?

முரளி: குமாஸ்தாக்கள் பாம்பு தேள் எப்போது கடிக்குமோ என்ற பயத்தில் தூங்க மாட்டார்களே. குமாஸ்தாக்கள் தூங்காமல் இருக்க மானேஜர் பண்ணிய ஏற்பாடுதான் இது.

—லலிதா செல்லப்பா



''பெரிக்கா, சுத்தியுள்ள ஜனம்.''

மறுபடியும் ஆங்கிலத்தில் பேசிக் கொண்டார்கள்.

''நீ ஒண்ணு செய். இதுல கையெழுத்துப் போடு. துட்டு கேட்டு மனு கொடுக்கிறேம். இதுல எப்படிக் கையெழுத்துப் போட்டீனு பின்னுடி கோர்ட்ல ஒரு தபா வந்து உன் தங்கச்சின்னு சொல்லிடு. நான் ஆள் அனுப்பறேன். பார்ட்டி கூட வராங்கன்னு சொல்லிட்டு வந்துட்டுப் போ. எம் பேரு ஜனார்த்தனம். இந்தா என் அட்ரஸ். வச்சிக்க. தமிழில் எழுதித் தரட்டுமா படிப்பியா?'' அட்டைக்குப் பின் தமிழில் விலாசம் எழுதிக் கொடுத்தார்.

வசந்தா நிறைய இடங்களில் கையெழுத்துப் போட்டாள்.

(தொடரும்)

சிம்புள் பறவைகள் சிறகசைக்கட்டும்



ஆகவே தமிழ்க் கவிஞர்களே! மரபுக் கவிதை இப்போது தன் நீளமான உறக்கத்தைக் கலைத்துக் கொண்டு மெல்லக் கண் கசக்கு கிறது.

தமிழகமெங்கும் பேனாக்களுக்குச் சாணை பிடிக்கும் ஓசை எனக்குக் கேட்கிறது.

என் கருத்துக்களுக்கு ஆதரவான வரவேற்பும், வாழ்த்தும், அதனினும் நல்ல அறிகுறியான எதிர்ப்பும் மரபுக்கவிதை சத்தியமாய்த் தழைக்கும் என்பதற்குச் சாட்சி சொல்கின்றன.

இனிமேல் துளிர்க்கவிருக்கும் மரபுக் கவிதைகளை மொழிபெயர்த்தால் சமகால இந்திய மொழிகளின் எந்தக் கவிதைக்கும் சற்றும் தாழாததாய் இருக்கும்.

இப்போது இளைஞர்களின் நெஞ்சில் ஊறியிருக்கும் உற்சாக ரத்தம் இதைச் சாதித்தே தீரும்.

இந்தப் பணிக்கு நானே காரணம் என்ற மூட நம்பிக்கை எனக்கு எப்போதுமே இல்லை. வெற்றிடத்தைக் காற்று நிரப்பும் என்பது விதி!

நான் பக்கத்துக் காற்றாக இருந்து அந்தப் பணியைச் செய்கிறேன். நான் செய்யாவிடினும் ஒரு தூரத்துக் காற்று அந்தத் தொழிலைச் செய்யும்.

மௌனத்தைக்கேட்க மட்டுமேபழக்கப்பட்ட செவிகளுக்கு எனது கவலை மிகுந்த கண்ணீர்ச் சங்கீதம் இரைச்சலாய்க் கேட்டிருப்பது இயல்புதான்.

யார்மீதும் எனக்குக் கோபமில்லை.

என் பாதையில் முள்மாரி பொழிபவர்களுக்கும் சேர்த்தே நான் நடக்கிறேன்.

மரபைப் புதுப்பிப்பது என்பது புதிய யாப்புக் கலைப் படைப்பதோ எனில் — இல்லை.

உள்ளடக்கம் புதியதாய் இருக்கும் பட்சத்தில் அது எந்த வடிவிலும் இருக்கலாம்.

கடைசியில்... அது கவிதையாய் இருக்க வேண்டும்!

நாம் நல்ல கவிஞர்களாகவும், நல்ல விமர்சகர்களாகவும் இருப்பது நமது படைப்பைப் பதப்படுத்தும்.

அண்மைக்காலமாக, தமிழ் மரபுக் கவிதை கருத்துலகத்தைப் பட்டினி போட்டுவிட்டது என்பது நினைத்தாலே கசக்கும் நிஜம்.

வாழ்க்கையிலிருந்து சில நூற்றாண்டுகள் வெளியே இருக்கும் விஷயங்களால் கவிதையோ, வாழ்க்கையோ கௌரவம் பெறாது.

நிகழ்காலத்தின் உறுத்தும் நிமிஷங்கள், அகிலத்தின் அழியாத பேருண்மைகள், நேற்று வரையில் கவிதைகளால் பார்க்கப்படாத பிரதேசங்கள், கவிதையின் சாம்ராஜ்யத்திலிருந்து நாடு கடத்தப்பட்டிருந்த எதார்த்தங்கள், அர்த்தம் சுமந்த கோபங்கள், இந்தச் சமூக அமைப்பைப் புரட்டிப் போடுவதற்கான போராட்டங்கள் — இவைகளெல்லாம் பாடுபொருளானால் மரபுக் கவிதை சிகரத்தில்லவா சிம்மாசனம் போடும்!

சமீபகால மரபுக்கவிதைகள், ஈராயிரமாண்டுகள் முதிர்ச்சி கொண்ட நம் மரபுக் கவிதைக்குச் சரியான மரியாதை தரவில்லை என்பதுதான் அடக்கமுடியாத ஆதங்கம்.

ஒரு தனி மனிதத்துவத்தால் அந்தவரம் வராது.

அது ஒரு கூட்டுத் தவம்.

ஆகவே தமிழ்க் கவிஞர்களே! ஒன்றுபட்டு நாமெல்லாம் ஊர்கூடித் தேரிழுப்போம்.

மரபுக் கவிதைகள் இனி சூடாய்ச் சூல் கொள்ளட்டும்.

மரபும் புதுமையும் மாலை மாற்றட்டும்.

உங்கள் கவிதைகளுக்கு ஒரு பக்கம் ஒதுக்க கல்கி சந்தோஷமாய்ச் சம்மதித்திருக்கிறது.

தேர்ந்தெடுத்துக் கொடுக்க நான் சித்தமாயிருக்கிறேன்.

உங்கள் தபால் அன்னங்களை எதிர்பார்த்துக் கல்கி காத்திருக்கிறது.

உலகத்தமிழ் மரபுக் கவிஞர்களின் கவிதைகளெல்லாம் வரவேற்கப்படுகின்றன.

எல்லாத் திசைகளிலிருந்தும் சிம்புள் பறவைகள் சிறகடிக்கட்டும்.

காலத்துக்குரிய ஈழத்துக் கவிதைகள் சிலவும் இப்போது கைவசமிருக்கின்றன.

அவையும் வெளியிடப்படும்.

தமிழ்நாட்டு முன்னணிப் புதுக் கவிஞர்களின் மரபுக் கவிதைகளும் தொடர்ந்து வெளிவரும்.

கல்கியில் நான் கொஞ்சம் கட்டுரையில் இளைப்பாற ஆசை. அவ்வப்போது மரபிலும் வருவேன்.

மகாகவிபாரதியின் சிலையை நாம் மாலைகளாலேயே மூடிவிடக் கூடாது.

பொதுவாக விழாக்கள் எல்லாம் ஒருவனை நீளமாக மறந்துவிடுவதற்கான ஒத்திகையாகவே போய்விடுகின்றன.

மரபில் புது உள்ளடக்கம் பாடிய அந்தப் புலவனை இன்று மரபைப் புதுப்பிக்கும் தூய பணியிலும் துணைக்கழைத்துக்கொள்ள வேண்டும். அதுவே நாம் அவனுக்குச் செய்யும் அழியாத அஞ்சலியாகும்.

சரி, சாணை பிடித்தது போதும், வாளை எடுங்கள்.

புகைப்படம்: உத்ரா

வைரமுத்து பக்கம்

மாம்பழம்

○ எம். இராஜேந்திரன் லால்குடி

? புதிய தமிழ்நாடு இ. காங்கிரஸ் தலைவராகப் பழனியாண்டி நியமிக்கப்பட்டிருப்பதன் மூலம் தமிழ்நாட்டில் அக்கட்சியின் நிலைமை முன்னேறுமா?

! தி. மு. க. அ. தி. மு. க. என்ற மிகப் பெரிய சக்திகள் இருக்கும்வரை இ. காங்கிரஸ் இங்கு மூன்றாவது சக்தியாகத்தான் விளங்க முடியும். ஆனால் இப்போதுள்ளதையும் விட செல்வாக்குப் பெற வழியுண்டு. அதற்கு அஸ்திவாரத்தைப் பலப்படுத்த வேண்டும். இல்லையேல் மாடி ஆடிக் கடி இடிந்து விழத்தான் செய்யும். கட்சிக்குள் ஒற்றுமையை மேலிருந்து திணிக்க முடியாது. இ. காங்கிரஸ் செடிக்கு வேரிலே நோய்.

○ ஏ. எம். அரியமணி, அரியநாச்சிபாளையம்

? திரைப் படத் துறைக்கு மக்கள் ஆதரவு தருவது போல் பத்திரிகைகளுக்கு மக்கள் ஆதரவு தராதது ஏன்?

! கவனிக்க வேண்டிய விஷயம் இரண்டு: (1) பத்திரிகைகளைப் பகிர்ந்து கொள்ள முடியும். சினிமாவை அவரவர் பார்த்தாக வேண்டும். (2) சினிமாக்களிலும் பல டப்பா ஆவதுண்டு.

○ இரா. கு. குமார், திருவி

? இரண்டு வாரங்களுக்கு முன் துர்வாசருக்கும் பரிந்துகொண்டு வந்தீர்; இப்போது துர்வாசரைத் திட்டுகிறீர். என்னதான் நினைத்துக் கொண்டிருக்கிறீர் உன் மனத்தில்?

! நான் தெளிவாக இருக்கிறேன். துர்வாசரின் அடிப்படை நோக்கம் சரி. ஆனால் அவர் (1) தும்பை விட்டு விட்டு வாலைப் பிடிக்கிறார் என்றேன். (2) எழுத்தைச் சாடுவதோடுநில்லாமல் எழுத்தாளரையும்

எந்த ரகம்?

மட்டமான நடையில் சாடுவது எனக்குப் பிடிக்கவில்லை. அதுசரி, துர்வாசரை நான் திட்டினேனா? எப்போது?

○ இராஜ இராஜ சோழன், பழவந்தாங்கல்

? எழுத்தாளரைக் கேட்டால் 'ஆசிரியர் இப்படித்தான் எழுதச் சொல்கிறார்' என்பார்கள். ஆசிரியரைக் கேட்டால் 'என்ன செய்ய அவர்கள் அப்படித்தான் எழுதுகிறார்கள்' என்பார்கள். தவறு இருவர் மீதும் சமமாக இருக்கிறது என்கிறேன். எதுவுமே வியாபாரம் என்றிருக்கும்வரை இப்படித்தானே இருக்கும்?

! நீங்கள் குறிப்பிட்டது போல் எழுத்தாளர் சொல்லலாம். ஆனால் ஒரு ஆசிரியர் அப்படிப் பேச முடியாது. எழுத்தாளர் எழுதுவதைத் திருத்தவோ, நிராகரிக்கவோ ஆசிரியருக்குப் பூரண உரிமை உண்டு. வியாபார நோக்கு என்கிறீர்களே அது சரி. வியாபார நோக்கையும் கவனித்துக் கொண்டு பத்திரிகையின் தரத்தையும் காப்பாற்றிக் கொள்வதில் தான் திறமையைக் காட்ட வேண்டும்.

○ த. சத்தியநாராயணன், அயன்புரம்

? மாம்பழம் பிடிக்குமா? பிடித்த ரகம்?

! முதல் கேள்விக்காக உங்கள் மீது கோபம் வருகிறது. இரண்டாவது கேள்வி நல்ல வேளை, கோபத்தைப் போக்கடித்து விட்டது. ம்...ம்...ம்...ம் மல்கோவாவை விடச் சிறந்தது பாதிரி, நீலம். தாடி பணைத்த ஜுலைக்கு ஜோர். ஸ்ரீரங்கம் ஸ்பெஷல் இமாம் பசந்து.... அடடா! நாக்கில் ஜலம் ஊறுகிறது. பங்கனப்பள்ளி சீஸனில் சென்னையில் வண்டி வண்டியாக அடுக்கி இருக்கும். ஒரு வண்டியை அப்படியே தள்ளிக்கொண்டு போய்விடலாமா என்று தோன்றும். லாட்டரியில் சில லட்சம் விழுந்தால் இவை எதையும் தொட மாட்டேன். ஆல்ஃபோன்ஸ்தான் தருவிப்பேன், பம்பாயிலிருந்து.

பிடிக்குமா?

○ வெ. அனந்தகுமார், கோவை.

? கம்ப்யூட்டரால் வேலை வாய்ப்புக்கள் குறையாதா?

! குறையாது என்றும் புதியரக வேலை வாய்ப்புக்கள் உருவாகும் என்றும் கம்ப்யூட்டர் தயாரிப்பாளர்கள் கூறுகின்றனர். ஆனால் கல்வி அறிவு பெருக்கிக் கொள்ள வசதி மிக்க மேல் நாடுகளில் இந்த வாதம் சரி. இங்கே அத்தனை வசதியும் இல்லை; வசதி இருந்தாலும் அதைப் பயன்படுத்திக் கொள்ளப் போதிய பணமும் இல்லை. எனவே கம்ப்யூட்டரால் இங்கு ஆபத்து அதிகம் என்று கூறுவதை விட, கம்ப்யூட்டர் யுகத்துக்கு ஏற்பத் துரிதமான பொருளாதார, கல்வி வளர்ச்சிக்கு ஏற்ற கொள்கைகளைக் கடைப்பிடிக்காத அரசினால் ஆபத்து அதிகம் எனலாம்.

○ தேரோட்டி, மன்னார்குடி.

? பாதயாத்திரை புகழைச் சேர்க்கிறது சந்திரசேகருக்கு. ஆனால் கலைஞர் பாத யாத்திரையால் புகழ் பெற முடியவில்லையே.

! இதற்காகத்தான் காந்தி சொன்னார், லட்சியம் மட்டும் முக்கியமில்லை; லட்சியத்தை அடையும் மார்க்கமும் முக்கியம் என்று. சந்திர சேகர்பாதயாத்திரை ஓர் ஆன்மீக அனுபவமாய் இருந்தது. கலைஞர் பாத யாத்திரையோ தமாஷாவாகி விட்டது.

○ கே. ராஜகோபாலன், சென்னை-92

? ஹிட்லரின் டைரி புரட்டுக்கள் எப்படி?

! ஏமாந்து போன மேற்கு ஜெர்மானிய ஸ்டெர்ன் பத்திரிகைக்கு நமது ஆழ்ந்த அனுதாபங்கள். அத்தகைய ஒரு சிறந்த

நீங்கள் கேட்டவை

திராக



● ''இந்த நாடகம் தமிழ் மசாலா சினிமாக்களுக்குச் சமர்ப்பணம்'' என்ற அறிவிப்புடன் துவங்கும் ''காட்டுல மழை'' மசாலா சினிமாப் பாணிகளை மட்டுமல்ல, சகாப்தத்தைத் தாண்டிய ஒரு மிகப்பிரபலநடிகரையும் விட்டு வைக்கவில்லை. ஏகக் கிண்டல்.

(சுந்தா செய்யும் இமிடேஷன் பலத்த கைதட்டல்களைப் பெறுகிறது!)

நாடகம் முழுக்க எஸ். வி. சேகருக்குத்தான். அநாயாசமாகப் பேசி, நடித்து, சிரிக்க வைக்கிறார். (வழக்கமாக நாடகங்களில் தன் அப்பா காரெக்டரைக் கிண்டலும் கேலியும் பண்ணுவாரே, இதிலும் டிட்டோ)

கதை மட்டும் என்ன என்று கேட்கக் கூடாது. மசாலா சினிமாக்களைக் கிண்டல் செய்வதே நோக்கம் எனில் வலுவான கதை அமைப்பை எதிர்பார்க்கக் கூடாதுதானே! ஜீபூம்பா பூதம், ஜாடிக்குள் ஜீபூம்பாவின் அப்பா பூதம் பாழடைந்த பங்களா, கடத்தல், ஹெலிகாப்டர் என்று எப்படி எப்படியோ கதை போனால் என்ன? இரண்டு மணி நேரம் ரசிகர்களைச் சிரிக்க வைத்தால் போதும் என்று நினைக்கும் எஸ். வி. சேகரின் காட்டுல மழைதான்! நாடகாசிரியர்கள் பாபு — கோபு சினிமா மசாலாவை மட்டுமல்ல, நாடக மசாலாவையும் நன்றாகவே தெரிந்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

-சாருகேசி

பத்திரிகை கூட ஏமாந்து போகுமாறு சாட்சியங்களை ஜோடித்தவர் குற்றவாளி என்றாலும் அந்த ஆற்றல் நம்மை மலைக்கச் செய்கிறது. 'கங்கிராட்ஸ்' என்று கூடச் சொல்லலாம் போலத் தோன்றுகிறது.

○ வாசுகி, கெங்கவல்லி

? எழுத்தாளர் ஆபாசமாக எழுதுவதையும் சில பத்திரிகைகள் அதை வெளியிடுவதையும் தடை செய்யக் கோரி கோர்ட்டில் வழக்குத் தொடரத் தனி நபருக்கு உரிமை உண்டா?

! தாராளமாக உண்டு. ஆனால் சொல் நயம் எங்கே முடிகிறது: ஆபாசம் எங்கே ஆரம்பிக்கிறது என்பதில் கருத்து வேற்றுமை நிறைய. ஆதலால் ஆபாசம் என்று நீங்கள் கருதுவதை ஆபாசம் என்று நிரூபிப்பது ரொம்பக் கஷ்டம்.

○ பா. நாராயணன், சென்னை-5

? தாழ்த்தப்பட்ட மக்களுக்காக ஏற்படுத்தப்பட்ட பூனா ஒப்பந்தத்தை மகாத்மா காந்தி எதிர்த்ததாக அம்பேத்காரின் மனைவி சாடுகிறாரே?

! ஜாதி மத பேதமற்ற சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்று காந்திஜி விரும்பியதை அம்பேத்கார் எதிர்த்ததாக நாம் திருப்பிச் சொல்லலாமே! மேதைகளின் நோக்கங்களைப் புரிந்து கொள்ளாமல் செயல்களைச் சாடுவது சரியல்ல. அம்பேத்காரின் நோக்கமும் காந்திஜியின் நோக்கமும் முரண்பட்டவை அல்ல. அணுகு முறையில் வித்தியாசம் இருந்தது.

○ டி. ஆர். சந்திரசேகரன், சென்னை

? சாண்டில்யன் கதைகள், கோவி மணிசேகரன் கதைகள் - ஒப்பிடவும்.

! சாண்டில்யன் — ஜிலுஜிலு: மணிசேகரன்— ஜிகுஜிகு.

○ ஏ. ஹரிதாஸ், அச்சம்பாளையம்

? நுழைவு வரியை எதிர்த்து வர்த்தகர்கள் மூன்று நாள் பந்த் படுதோல்வி அடைந்துவிட்டதே?

! யார் சொன்னது? நுழைவு வரியால் பாதிக்கப்படுகிற மொத்த வியாபாரிகள் ஹர்த்தால் பூரணமாக இருந்தது.

○ என். கே. பரமசிவம், சென்னை-7

? 'மக்கள் குடித்தால் நமக்கு ரூ. 150 கோடி லாபம்' என்று பேசிய அமைச்சர் மக்கள் நலனை எப்படிக் காப்பார்?

! மக்கள் நலனைக் காக்கத்தான் அமைச்சர் இருப்பதாக உமக்கு யார் சொன்னது? அந்தக் காலம் என்றோ மலையேறிவிட்டது. இது 1983 சுவாமி!

○ ரூ. 10 பரிசு பெறுபவர்:

பா. நாராயணன்,
67, ஆலங்காத்தா பிள்ளை தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை-5.

செல்லியப்பாவுக்குத் திகீரென்றது. கப்போர்டைத் திறந்ததும் அதன் கலைந்த தன்மை உள்ளுக்குள் கத்தி பாய்ச்சின உணர்வை ஏற்படுத்திற்று. மனக கட்டளை இடக் கண்கள் தேட ஆரம்பித்தன. தோல்வி!

எங்கே போயிருக்கும்? போன வாரம் கூட சோதனைக்கு எடுத்துவிட்டு இங்கே தானே வைத்தோம். யார் எடுத்திருப்பார்கள்? அந்தப் பிளாட்டினக் கிண்ணங்களை? மைகாட்! அப்படி நடப்பது சாத்தியமா? என்ன இது இப்படியெல்லாம் நினைக்கத் தோன்றுகிறது. இத்தனை பெரிய சுற்றுச் சுவர், கடினமான செக்யூரிட்டி பாதுகாப்பு இதனையெல்லாம் மீறித் திருட்டுப் போவது அத்தனை சுலபமா? என்ன?

இருக்காது.

திருட்டுப் போக வாய்ப்பே இல்லை!

பின் எங்கேதான் போயிருக்கும்?

சோதனைக்காக யாரேனும்எடுத்துச்சென்று சொல்ல மறந்திருப்பார்கள்.

அடுத்த நிமிடம் அந்தப் பரிசோதனை கூடத்தின் வெவ்வேறு பிரிவு அதிகாரிகள் அனைவரும் வரவழைக்கப்பட்டனர். விசாரித்தார். ம்ஹூம். என்ன செய்வது? இந்த மாதிரி குழப்பமான சமயங்களில் துணையாய் இருந்து பெரிய பெரிய சிக்கல்களையெல்லாம் விடுவிக்கும் அஸிஸ்டெண்ட் கிஷோருக்கு அன்று வார விடுமுறை! இதை நிர்வாகத்தின் உயர் அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தலாமா?

யோசித்தார்.

டி. ஜி. எம். பதவி உயர்வு வரலாம் என எதிர் பார்க்கும் இந்த நேரத்தில் சுமார் பத்து லட்சம் மதிப்புள்ள பொருளைக் கோட்டை விட்டிருப்பது.... எத்தனை பெரிய அவப் பெயர்? என்னவானாலும் சரி தாமதிப்பது தவறு. தள்ளிப் போடும் நிமிஷங்கள் தொலைந்த பொருள் கிடைக்க இருக்கும் சாத்தியங்களைப் பாதிக்கலாம். எனவே, மேலிடத்தில் தெரிவிப்பதுதான் சரி.

தீர்மானித்தார்.

ரிசிவரை எடுத்துக் கொண்டு எண்களை அமைத்து ''ஹலோ! செக்யூரிட்டி ஆபீசர் ப்ளீஸ்...'' என்றார்.

பொய்த் தேவதைகள்

சாருபிரபா சுந்தர்



மாலை. வெல்டிங் உபகரணங்கள் தயாரிக்கும் சுமார் பத்தாயிரம் பேரை உள்ளடக்கி இருக்கும் அந்தத் தொழிற்சாலையின் அன்றைய ஷிப்ட் முடிந்து விட்டதென்று சைரன் சப்தம் போட்டது.

பஞ்சிங் கருவிகள் கார்டுகளில் நேரத்தை முத்தமிட, பஸ், ரயில் பிடிக்க பிரதான வாசலுக்குப் போகத் திமுர் கும்பல் பிரயத்தனப்பட்டுக் கொண்டிருந்தது. அந்த வாயிலின் நான்கு உப வழிகளிலும் தொழிலாளர்கள் வரிசையாகி மெட்டல் டிடக்டர்களின் நிலைமேல் நச் நச்' என்று தட்டியபடி வெளியேறிக் கொண்டிருந்தார்கள்.

காளிமுத்து வெளிவந்தான்.

காலையிலிருந்து உழைத்த அசதியைப் பொருட்படுத்தாமல் வேகமாக நடக்க ஆரம்பித்தான். கையில் கித்தான் பை. நெஞ்சுக்குள் கிறலாய் ஒரு பயம். தான் செய்வது தவறு தவறு' என்று யாரோ முணு முணுக்கிற பிரமை. இயல்பாய் ஆனால் ஜாக்கிரதையாய் பையைத் தூக்கிக் கக்கத்தின் இடையில் வைத்து அமுக்கிப் பார்த்தான். அது மினி டிபன் பாக்ஸும், வேலை நேர அமுக்கு சிருடையும் ஆஜர் என்று உணர்த்தின.

அருள்வாக்கு

மனித வாழ்வு உள்ளவரையில் ஆசை உண்டு. துன்பம் உண்டு. பயம் உண்டு. துவேஷம் உண்டு. இவற்றிலிருந்து விடுபடுவதே மோக்ஷம்.



கொஞ்சம் ஆறுதலாயிருந்தது.

தொட்டுப் பார்த்தாலே அதைக் கண்டு பிடிப்பது கஷ்டம். வெளிப் பார்வையில் கண்டறிதல் பகீரத முயற்சியிலும் சாத்தியமில்லை. அவன் முன்பே கவனித்து வைத்திருக்கிறான். இரண்டாம் வரிசை மெட்டல் கண்டு பிடிப்பான்கள்' நான்கு பேருக்கு ஒரு முறைதான் சத்தம் போடும். அப்படி சத்தம் ஏற்படுத்துகிற நிமிடம்தான் சில விநாடிகள் சோதனைகள் நிகழும். அதில் சிக்கிக் கொள்ளாது கணக்குப் பார்த்து அந்த வரிசையில் நின்றால் போதும்.

வெளியேறி வீட்டுக்குப் போவது மிகச் சுலபம். காளிமுத்துவுக்கு வீட்டை நினைத்தால் மனசுக்குள் எரிச்சல், ஆத்திரம், ஆற்றாமை அத்தனையும் பொங்கி நிறைந்தது. இந்தியா ஏழை நாடு. இந்தியாவின் ஏழை நாடாய் அவன் வீடு. தினம் தினம் சின்னச் சின்னத் தேவைகளைக் கூடப் பூர்த்தி செய்ய முடியாமல்....

காளிமுத்து வாசலை நெருங்கி விட்டிருந்தான். கவனித்தான். உடம்பு பதறியது. இது என்ன விநோதம்? இன்றைக்கு எல்லோரும் சோதனை செய்யப்படுகிறார்களே... திரும்பி விடலாமா? அந்தப் பக்கம் நகர்ந்து பைக்குள் இருக்கிறதை எடுத்து எறிந்து விடலாமா? யோசித்தான். அது எத்தனை பெரிய தவறு? அப்படிச் செய்ய முயன்றால் அத்தனை பேர் கவனமும் தன்மீது பாயுமே?' யோசித்த கணங்களில் காளிமுத்து வரிசையாகி... அவன் பின்னே வரிசை நீண்டிருந்தது.

மனசுக்குள் அதிர்ச்சி அசைவுகள் வேகம் கூடின.

க்ரைம் இன்ஸ்பெக்டர் ராஜாராமன் அந்த அறையை மிகக் கவனமாக ஒருதரம் பார்வையிட்டார். டிபார்ட் மெண்ட் ஆசாமிகள் மெர்க்குரிப் பவுடர் தூவி, காமிராக்கள் கண் சிமிட்டத் தேவையான இடங்களில் கைரேகைகள் பதிவு செய்யப்பட்டுக் கொண்டிருந்தன.

"இந்த செக்ஷன்ல வேலை செய்யற அத்தனை பேர் கைரேகைகளையும் பதிவு செய்திட்டீங்களா?''

''ஆச்சு சார்!''

இன்ஸ்பெக்டருக்குக் கைரேகை ஆசாமி பதில் தந்தார்.

மதியமே ஜெனரல் மானேஜரும், டி.எஸ்.பி.யும் வந்து பார்த்துவிட்டுப் போயிருந்தார்கள். ட்ரெய்னர்களும், போலீஸ் நாய்களும் வரவழைக்கப்பட்டு மோப்பம் பிடித்துக்கொண்டு வெளியே ஓடி விருக்கின்றன.

இவ்வளவு கட்டுப்பாடான செக்யூரிட்டி பாதுகாப்பிலேயே இப்படி நடந்திருக்கிறதே! எவ்வளவு துணிச்சலான காரியம்? சீனியர் மானேஜர் பெல்லியப்பா முகத்தில் சனமான கவலை. இன்ஸ்பெக்டர் ராஜாராமன் கேட்டார்:

''இந்த பிளாட்டின அப்பாரட்டஸ்ஸின் மதிப்பு எவ்வளவு தெரியுமா?''

''சுமார் ஒன்பது லட்சம் இருக்கும் சார்.''

''இந்த கப்போர்ட் சாவி யாருகிட்டே இருக்கும்?''

''என்கிட்ட ஒண்ணும், டீ போர்டிலே செக்யூரிட்டி இன்சார்ஜ்"ல இன்னொண்ணும் இருக்கும்.''

''இந்தப் பொருளைக் கடைசியா எப்போ பார்த்தீங்க?''

''மூணு நாளைக்கு முன்னே...சனிக்கிழமை சாயங்காலம் பார்த்த ஞாபகம் நல்லா இருக்கு இன்ஸ்பெக்டர்!''

''குட்! உங்களுக்குத் தெரிஞ்சு இந்த செக்ஷன்ல யாருக்காவது சமீபத்தில பெரிய அளவு பணத் தேவை ஏற்பட்டிருக்கா?''

''எனக்குச் சரியாத் தெரியலியே!''

''விசாரிக்க முடியுமா?''

''மறைமுகமா விசாரிக்க ஏற்பாடு செய்யறேன்.''

''அந்த பிளாட்டின அப்பாரட்டஸின் அளவு எவ்வளவு இருக்கும்?''

''சின்னதுதான். கைக்குள்ள அடக்கற மாதிரிதான் இருக்கும். ஒரு ஜோடியா இருந்தது. ரெண்டும் இல்லே!''

''சரி...இங்க யார் யார் இருக்கா? லீவுல யார் போயிருக்கா பாருங்க. லீவுல போயிருக்கறவங்களை உடனே வர ஏற்பாடு செய்யுங்க. எல்லாரோட பர்சனல் ஃபைலையும் படிச்சுப் பார்க்க ஏற்பாடு செய்யுங்க!''

பெல்லியப்பா திரும்பினர்.

''இன்னும் சில. ஒண்ணு இந்தப் பரிசோதனைக் கட்டிடத்துக்கு நண்பர்களைத் தேடிக்கிட்டோ, டெஸ்ட் ஸ்பெஸிமன் எடுத்துக்கிட்டோ அடிக்கடி வர்றவங்க லிஸ்ட். இரண்டாவதா எல்லோர் 'பன்ச்சிங் கார்டும்!''

''இதோ ஏற்பாடு செய்யறேன்.''

அடுத்த நாள்.

பற்றவைப்பு இயந்திரத்துக்கருகில் குனிந்து எதையோ தேடிக் கொண்டிருந்த காளிமுத்துவின் தோளைத் தொட்டார் ஜெயராமன் — ஃபோர்மேன். நிமிர்ந்தான் காளிமுத்து.

''உங்களை இன்ஜினியர் கூப்பிடறார்.''

அலுவலக அறை போறான்.

''உக்காருங்க காளிமுத்து!'' — இன்ஜினியர்.

''பரவாயில்லேங்க சார்!''

''இதுல கையெழுத்து ஒண்ணு போட நீங்களா?''

போட்டான்.

''தாங்க்ஸ். இந்தாங்க.''

''இது....'' — காளிமுத்து தடுமாறினன்.

''ஐ'ம் சாரி காளிமுத்து. நேத்திக்கு செக்யூரிட்டியில உங்களைத் திருட்டு கேஸ்ல புடிச்சதா ரிப்போர்ட். முதல்லயே சொல்லாம லீவு எடுத்துக்கிட்டதுக்கு சூப்பர்வைசர் கிட்ட சண்டை போட்டுக்கிட்டதுக்கு 'சார்ஜ் ஷீட்' வாங்கி இருக்கீங்க. இது உபரி தப்பு. நீங்க வேலை நீக்கம் செய்யப்படறீங்க... ஸாரி! நான் ரொம்ப முயற்சி செய்தேன். தடுக்க முடியல்லே.''

''அய்யோ! ஆண்டவனே!''

ஆஃபிசர்ஸ் கிளப், மைதானத்தின் பச்சை முதுகில் சீனியர் அதிகாரிகள் கோல்ப் விளையாடிக்கொண்டிருந்தனர். பெல்லியப்பா கலவர முகத்தோடு அருகே வந்தார்.

ஜெனரல் மானேஜர் ராகவ் 'க்ளப் ஹெட்'டைப் பிடித்த பிடியைத் தளர்த்தாமல் கைகளைப் பின்னால் சுற்றி இடது தோளோடு அரை வட்டமாக திரும்புகையில்,

''...எக்ஸ்க்யூஸ் மீ!'' நிதானம் தவறாமல் கவனத்தைக் கலைக்காமல் பந்து அடிக்கப்பட்டு இலக்கை யடைந்தது.

வெல்டன் மிஸ்டர் ராகவ்! 'லாங் அயரனில்' எப்பவுமே நீங்கதான் எக்ஸ்பர்ட். ஜால்ராக்கள் தாளம் தட்ட... அதைக் கவனிக்காமல் சரேலென்று திரும்பினர். 'இடியட்! யார் ஸ்ட்ரோக்கின்போது குறுக்கிட்டது!' மனசுக்குள் முனகினர்.

''குட் ஈவ்னிங் சார்!'' — பெல்லியப்பா.

''குட் ஈவ்னிங் பெல்லியப்பா! நீங்களா? என்ன விஷயம்?''



கண்ணன்: சில வார்த்தைகளுக்குப் பல்லை உடைக்கும் சக்தி உண்டு.

முரளி: எப்படிச் சொல்றே?

கண்ணன்: தெருவில் சென்ற இளம் பெண்ணைப் பார்த்து 'உன்னைக் காதலிக்கிறேன்' என்றுதான் சொன்னேன். அவள் கொடுத்த அடியில் முன் பல் இரண்டும் உடைந்து விட்டனவே!

லலிதா செல்லப்பா

''ரொம்ப அவசரம். தனியே வர முடியுமா?''

க்ளப்ஹெட்டைப் பக்கத்தில் இருந்த உதவியாளரிடம் கொடுத்துவிட்டு கிளவ்ஸைக் கழற்றியபடி நடந்து ஓரமாய் அமர்ந்தார்கள்.

''சார்! பிளாட்டின கேஸில் குற்றவாளியைக் கண்டு பிடித்தாயிற்று!''

''இஸிட்! யார் அவன்?''

''ஸாரி சார்! அது மிஸ்டர் கிஷோர்!''

''மை காட்! இது.....''

''ஆரம்பத்தில என்னால் கூட நம்ப முடியவில்லே. அவனே ஒத்துக்கிட்டு... அதைத் திரும்ப ஒப்படைச்ச பிறகுதான் நம்ப முடிஞ்சது.''

''ப்ளடி! ஏன் இப்படிச் செஞ்சானும்!''

''இன்னும் சரியாப் பேசலே சார்,''

''இதை எப்படிக் கண்டு பிடிச்சாங்க?''

''க்ரேட் ஒர்க் சார்! பன்சிங் கார்டுல முதல் நாள் அரை மணி நேரம் தாமதமாச் செஞ்சிருந்த பஞ்சக்குக் காரணம் சொல்ல முடியல்லே. எடுத்துப் போறப்ப எல்லா இடத்துலயும் கை ரேகையை அழிச்சவன், கப்போர்ட் கைப்பிடி உள் பக்கத்துல அழிக்காம விட்டது இன்னொரு பெரிய தப்பு. இத வச்சு தொடர்ந்து... ப்ரூவ் செஞ்சு... க்ரேட் ஒர்க் சார்!''

''சரி! டெர்மிஷனுக்கு ஏற்பாடு செய்திட்டீங்களா?''

''இல்லே சார்... அதுல வந்து....''

''என்ன தயக்கம்?''

''அவனும் ஒரு ஆபீசர். திருடிட்டாங்கற செய்தி வெளியே வந்தா அவமானம் நமக்கும் தான்.''

கண்ணன்: நாட்டு வைத்தியர் மகளைக் கல்யாணம் பண்ணிக் கொண்டது தப்பாப் போச்சு.

முரளி: ஏன், என்ன ஆச்சு?

கண்ணன்: மாமனார் வீட்டுக்கு விருந்துக்குப் போனால், 'விருந்தும் மருந்தும் மூணு நாள்' என்று சொல்லி மூணாவது நாளே திருப்பி அனுப்பிடுறாரே!

—ஸ்.கே



''அதனால்...''

''அது மட்டுமில்லே! மைக்ரோ வால்வ் ப்ராஜக்ட் ஊழல்ல நிறைய ரகசிய தஸ்தாவேஜுகள்ளாம் அவன் கிட்ட மாட்டி இருக்கு. நாம உதவி செய்யலேன்னு... அவன் ஆத்திரப்பட்டு...., நாம கம்பி எண்ண...''

சரி, சரி! இப்போ என்ன செய்யறது?''

''முதல் காரியம். உங்க பர்சனல் இன்ஃப்ளுயன்ஸ்ல டி. எஸ். பி. கிட்டே பேசுங்க. உங்க நண்பர்தானே அவர்? அந்த பிளாட்டினப் பொருள் மறதியா வேற இடத்துல வைக்கப்பட்டுத் திரும்பக் கிடைச்சிடுச்சின்னு ஏதும் எழுதிக்கச் சொல்லி... ரிப்போர்ட்டை வித்ட்ரா பண்ணிடுவோம்.''

''குட் ஐடியா! அப்புறம்?''

''இன்னொரு பிரச்னே. நேத்து போலீஸ் நாய் சம்பந்தா சம்பந்தம் இல்லாம யூனியன் ஆசாமி வீட்டுக்குப் போய் சுத்திச்சாம். அந்த ஆளுங்க கடுப்பா இருக்காங்க. உண்மை அவன் காதுல விழுந்து, கலாட்டாப் பண்ணாம இருக்க அவன் வாயை அடைக்கணும்!''

''அவ்வளவுதானே? ஆள் யாரு?''

''ரங்க நாயகம்.''

''அடடே... நம்ப ஆளு! பயமில்லே. போன் செஞ்சு வரச் சொல்லுங்க. அவர் மச்சினிச்சிக்கு ஏதோ வேலே கேட்டுக்கிட்டு இருந்தார். முடிச்சிடுவோம்!''

''வணக்கங்க அண்ணே!''

''வா, காளிமுத்து. கேள்விப்பட்டேன். சோப் எடுத்துக்கிட்டுப் போனதைப் புடிச்சி டெர்மினேஷன் தந்துட்டாங்களமே? போன் செய்யக் கூடாதா? ....நி மவ்னுங்க! அவங்கதான் தந்தா நீ என் வாங்கினே! என்கிட்ட ஒரு வார்த்தை போன்ல கூப்பிட்டாவது கேட்டிருக்கலாமில்ல...?''

''விவரம் இல்லீங்க அண்ணே! அஞ்சு பொண்ணு. எப்படிக் காலம் தள்ளறது? ஆண்டவனே! அண்ணே! நீங்கதான் காப்பாத்தணும். உங்க செல்வாக்குல பேசி ஒரு நல்ல முடிவெடுக்கணும்!''

''புரியுது காளிமுத்து! ஆனதை செய்யறேன். பயப்படாதே. என்னென்னமோ திருடிட்டுப் போயிட்டு வந்துட்டிருக்கான். கண்டுக்க மாட்டேங்குது நிர்வாகம். உனக்குன்னு இந்த மாசத்துக்குத் தந்த சோப்பை எடுத்துட்டுப் போயிருக்கே? இது ஒரு தப்பு? காளி! நேத்திக்கு இப்படித்தான் அநாவசியமா வேணுமினே என் வீட்டுக்கு போலீஸ் நாயை ஓட்டிக்கிட்டு வந்திருக்காளுங்க. இவனுங்களை... நீ போ. இன்னிக்கு சாயங்காலம் கேட் மீட்டிங் இருக்கு அவசியம் வந்திடு. கிழிச்சிறுவோம்! அதுக்கு முன்னாலேயே சமாதானமாப் பேசிப் பார்க்கறேன்!''

''ரொம்ப நன்றிங்க அண்ணே!''

டெலிபோன் அழைத்தது. எடுத்தார்.

''நான்தான் ரங்கநாயகம் பேசறேன். நீங்க யாரு? பெல்லியப்பாவுங்களா? வர்றேனுங்க...! மச்சினி வேலே விஷயமா வந்து பார்க்கச் சொன்னாரா? ஹி... ஹி... வர்றேன்னு சொல்லுங்க. சாயங்காலம் மீட்டிங் பத்திக் கேக்கறீங்களா? அது சும்மா ஒரு கண் துடைப்புங்க. சும்மா போய் 'இனி இப்படி நடந்தால் விபரீத விளைவுகளைச் சந்திக்க நேரிடும்னு' ஒரு பேச்சுப் பேசி இறங்கிடுவேன். அவ்வளவுதான். ஒரு தொழிலாளிக்கு வேலே போனதுக்கு இது கூடச் செய்யலேன்னா எப்படிங்க?''

சிரித்தார்கள்.

தூரத்தில் காளிமுத்து சின்னதாகிக் கொண்டிருந்தான்.

சில்க் தேசியக்கொடி ஏற்றக் கூடாதா?


✕ ரமா


✕ மாலதி


✕ கிருஷ்ணன்


✕ மகாதேவன்

இந்த வார 'க்விஸ்' நிகழ்ச்சியில் பங்கு கொண்டவர்கள்:

மகாதேவன்
கிருஷ்ணன்
(காயிதே மில்லத் கலைக் கல்லூரி மேட வாக்கம் சென்னை)

மாலதி
ரமா
(பெண்கள் வைணவக் கல்லூரி, குரோம்பேட்டை சென்னை)

ஆரம்பத்திலேயே சஸ்பென்ஸை உடைத்து விடலாம் என்று தோன்றுகிறது. வெற்றிபெற்று, பரிசினைத் தட்டிச் சென்றவர்கள் மாலதியும், ரமாவும்.

இவர்கள் நான்கு பேர்களும் கேட்டுக்கொண்ட கேள்விகளும் அவற்றிற்குச் சரியான விடைகளும் வருமாறு:

(1) பெண்களுக்கு ஏன் தாடி வளருவதில்லை?
விடை: ஆண்கள் உடலில் உள்ள 'ஆன்ட்ரோஜன்' என்ற ஹார்மோன்கள்தான் தாடி மற்றும் மார்பு உரோமங்கள் வளரக் காரணமாகின்றன. இந்த ஹார்மோன்கள் பெண்களின் உடலில் இடையாது. எனவே பெண்களுக்குத் தாடி வளருவதில்லை. பெண்கள் உடலிலுள்ள 'எஸ்ட்ரோஜன்' 'ப்ரோஜஸ்ட்ரோன்' ஆகிய ஹார்மோன்கள் பெண்களின் உடலில் பல மாறுதல்களை ஏற்படுத்துகின்றன.

(2) இந்தியாவில் வெளியான முதல் செய்தித்தாள் எது?
விடை: 1780 ஜனவரி 20ந் தேதி வெளியான 'தி பெங்கால் கெஸட்'.

(3) 'காஸ்மெடிக் சர்ஜரி' என்றால் என்ன?
விடை: அழகுக்காகச் செய்யப்படும்பிளாஸ்டிக் சர்ஜரி 'காஸ்மெடிக் சர்ஜரி'எனப்படும். இம்முறையில் அம்மை வடுக்கள், முகச் சுருக்கங்கள் இவை நீக்கப்படுகின்றன. தாடை மற்றும் மூக்கு இவற்றை அழகாய் மாற்ற இம்முறை கையாளப்படுகிறது.

(4) நாம் எழுப்பும் ஒலி, சுவர் போன்றவற்றின் மீது பட்டு, திரும்பி ஒலிப்பதை 'எதிரொலி' என்கிறோம். இப்படி எதிரொலி உண்டாக, ஒலி எழுப்புபவருக்கும், ஒலியைத் திருப்பி அனுப்பும் இடத்துக்கும் இடையே குறைந்தபட்சம் எவ்வளவு தூரம் இருக்க வேண்டும்?
விடை: 17 மீட்டர்.

(5) நாய்க்கு வெறி பிடிப்பது ஏன்?
விடை: நாய்க்கு 'ரேபிஸ்' என்ற நோய் வந்தால், அதற்கு வெறி பிடிக்கும். நாயின் உடலில் ஏற்படும் வெட்டுக் காயம், புண்கள் வழியே வைரஸ் கிருமிகள் நாயின் உடலுள் செல்ல, நாய்க்கு 4 அல்லது 6 வாரங்களில் ஜுரம் வரும். மூளையைப் பாதிக்கும். வாயிலிருந்து நுரை வரும். வெறி பிடித்த நிலையில் எவரையும் கடித்து விடும். கடிக்கும்போது நச்சுக் கிருமிகள் மனித உடலில் சென்று விடும். உடனே சிகிச்சை பெறாவிடில் மனிதனுக்கு ரொம்ப ஆபத்து.

(6) ரோமன் இலக்கத்தில் X என்றால் பத்து L என்றால் 50 என்று தெரியும். C, D, M இவை எவற்றைக் குறிக்கும்?

விடை: C என்பது 100, D என்பது 500 M என்பது 1000.

(7) நமது தேசியக் கொடியைப் பறக்க விடும்போது சில விதிமுறைகளை நாம் கடைப்பிடிக்க வேண்டும். அவை என்னென்ன என்று சொல்ல முடியுமா?

விடை: நம் தேசியக் கொடிக்கு மேலேயோ வலது பக்கத்திலேயோ வேறெந்தக் கொடியையும் பறக்க விடக் கூடாது.



கடந்த ஏப்ரல் 15ந் தேதி வங்கப் புத்தாண்டு தினத்தை ஒரு நூதனமான முறையில் கொண்டாட எண்ணினார் திரு அருண் சட்டர்ஜி. தென் கல்கத்தாவில் 1970 ஆம் ஆண்டு முதல் திருமணங்கள் நடைபெற்று வரும் ஒரு திருமண மண்டபத்தின் அதிபரான அவர், அம்மண்டபத்தில் திருமணம் செய்து கொண்ட தம்பதிகள் அனைவரையும் வருமாறு அழைப்பு விடுத்திருந்தார். அவரது அழைப்புக்கு இணங்கி அன்று மாலையில் பல தம்பதிகள் அவர்கள் இணைந்த 'அந்த நாள் ஞாபகம்' மனத்தில் பளிச்சிடப் பகட்டான ஆடை அணிகளுடன் வந்திருந்தனர். சென்ற ஆண்டு மணம் செய்து கொண்ட ரத்னா — ஸ்வப்னா முகர்ஜி தம்பதியின் மெல்லிசையைத் தொடர்ந்து நாராயணன் — ராஜீ தம்பதி தங்களைப் 'பாத்ரூம் பாடகர்கள்' என அறிமுகப்படுத்திக் கொண்டு சில சினிமா மெட்டுக்களைப் பாடினர். பசப் — பாப்ரி தம்பதி சில மாஜிக் நிகழ்ச்சிகளைச் செய்து காட்டினர். பின்னர் இரவில் அனைவருக்கும் சிறந்ததொரு விருந்து அளிக்கப்பட்டது.

—பி.கே. சங்கர்

முக்கியமான அரசியல் தலைவர்கள் இறந்து போனால் கொடியை அரைக் கம்பத்தில் பறக்க விட வேண்டும்.

தேசியக் கொடியை உருச் சிதைக்கக் கூடாது.

கதர்த் துணியில்தான் தேசியக் கொடி அமைக்கப்பட வேண்டும். (ஆமாம்! சில்க் தேசியக் கொடி ஏற்றக் கூடாது என்று கமெண்ட் அடித்தார் மகாதேவன்.)

(8) எந்தக் கிரகத்துக்கு மிக அதிக எண்ணிக்கையில் சந்திரன்கள் (உப கிரகம்) உண்டு?

விடை: சனி கிரகத்துக்கு (17 உப கிரகங்கள்.)

(9) சாக்கடல் (Dead Sea எங்கே இருக்கிறது?

விடை: இது ஜோர்டன் நாட்டுக்கும் இஸ்ரேலுக்கும் இடையில் இருக்கிறது. மற்ற கடல்களுடன் ஒப்பிடும்போது இக்கடலில் உப்பு விகிதம் மிக அதிகம். தவிர இந்நீரில் மக்னீஷியம் குளோரைட் என்ற விஷப் பொருளும் கலந்திருப்பதால் இக்கடலில் எந்த மீன் மற்றும் நீர்வாழ் உயிர்கள் வாழ முடியவில்லை.

(10) 'இன்டர்போல்' என்பது என்ன?

விடை: இன்டர்போல் என்பது ஒரு சர்வ தேச புலனாய்ச்சி காவல் அமைப்பு. இன்டர்நேஷனல் போலீஸ் என்பதன் சுருக்கமே இது. அரசியல் — மத — இன சார்பற்ற இவ்வமைப்பில் சுமார் 300 நாடுகள் அங்கம் வகிக்கின்றன.

சர்வ தேசச் சட்டங்களின்படி ஒரு நாட்டில் குற்றம் செய்தவன் வேறு நாட்டுக்குத் தப்பிச் சென்று விட்டால் பிடிக்க முடியாது. இச்சூழ்நிலையில் குற்றவாளிகளைப் பிடிக்க இன்டர்போல் உதவுகிறது. இதன் தலைமையகம் பாரீசில் உள்ளது.

(11) சில மேகங்கள் மழை பெய்யாமல் போய்விடுகின்றன. இதற்குக் காரணம் என்ன?

விடை: நீர் நிறைந்த மேகங்களின் கீழ்ப் பகுதியில் வெப்பக் காற்று வீசினால் மேகங்களில் உள்ள மழைத் துளிகள் மீண்டும் நீராவியாக மாறிவிடுவதால் மழை பெய்யாது போய்விடுகிறது.

(12) ''டார்பிடோ'' என்பது என்ன?

விடை: தரைச் சண்டைகளில் வெடி குண்டுகள் வீசப்படுவது போல் கடற்போரில் நீர்மூழ்கிக் கப்பலிலிருந்து 'டார்பிடோ' என்ற ஆயுதம் பயன்படுத்தப்படுகிறது. இது நீருக்கடியிலேயே சென்று எதிரிக் கப்பலின் அடிப் பகுதியினைத் தொட்டதும் வெடித்து, கப்பலை அழித்து விடும்.

(இந்த க்விஸ் நிகழ்ச்சியில் கேட்கப்பட்ட கேள்வி மற்றும் பதில்களெல்லாம் 'சில்ட்ரன்ஸ் நாலெட்ஜ் பாங்க்' என்ற புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டவை.
வெளியீடு: புஸ்தக் மஹால் காரிபவோலி
டெல்லி-110006)

ஏற்பாடு, தொகுப்பு: எஸ். சந்திரமௌலி, ப்ரியன்

புகைப்படம்: ஸ்ரீதர்

வாசகர் விமர்சனம்

போட்டி முடிவு



ஃ குலுக்கிப் போடுகிறார்.



ஃ தேர்ந்தெடுக்கிறார்.

பல்லாயிரக் கணக்கான வாசகர்கள் மிகுந்த உற்சாகத்துடன் இதில் பங்கேற்றனர். அனைவருக்கும் நன்றி. முதல் மூன்று பரிசுக்கு உரியவர்களையும் ஆறுதல் பரிசுக்கு உரிய நூறு பேர்களையும் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்க திரு எஸ். வி. சேகர் அவர்களை அழைத்தோம். மிகுந்த உற்சாகத்துடன் வந்த அவர், ''என்ன ஸார் உங்க காட்டுல மழை போலிருக்கே! இத்தனை வாசகர்கள் ஆர்வமுடன் பங்கேற்றிருக்கிறார்களே!'' என்று கேட்டுவிட்டுப் பரிசுக்குரியவர்களைத் தேர்ந்தெடுத்தார். பாபுவும், ஏ. வி. பாஸ்கரும் கடிதக் குவியலைப் புரட்டிப் புரட்டிக்கொடுக்க எஸ். வி. சேகர் அன்புடன் தேர்ந்தெடுத்த முதல் மூன்று பரிசுக்கு உரியவர்கள் பின்வருமாறு:

முதல் பரிசு:

பிலிப்ஸ் கேஸட் ரிகார்டர் பெறுபவர்:
கு. அ. ராணி
C/o திரு நா. அருணசலம்
அஸிஸ்டெண்ட்.
அரசு உயர்நிலைப் பள்ளி
உதயநத்தம் எஸ். ஓ.
(வழி) கோபால கருப்பூர்.

இரண்டாம் பரிசு:

ராலி டேபிள் ஃபேன் பெறுபவர்:
திரு. பி. என். துளசிராம்
34, தபால் தந்தி குடியிருப்பு,
திருச்சி-620020.

மூன்றும் பரிசு:

பிரஸ்டீஜ் பிரஷர் குக்கர் பெறுபவர்:
ஆர். லீலா
7, நிர்மல் பில்டிங்,
டியோனர் பஸ் டிப்போ அருகில்
கோவந்தி ஸ்டேஷன் ரோடு,
பம்பாய்-400088.

ஆறுதல் பரிசுகளாக நூறு கல்கி விடுமுறை மலர் '83 உரியவர்களுக்கு அனுப்பப்பட்டு விட்டன. அவர்கள் பெயர்கள், விலாசம் அடுத்த இதழில்.

புகைப்படங்கள்: சிக்கி

படமும் பாடலும்

பரிசு ரூ. 250/=

● இதோ, நாலு டூயட் பாடல்களின் முதல் வரிகள்: தயாரிப்பில் உள்ள படங்களின் ஸ்டில்கள், எந்தப் பாடல் எந்த ஸ்டில்லுடன் பொருந்தும்? சரியாக ஊகித்து அந்த அந்தப் படத்தின் மீதே எழுதி இந்தப் பக்கத்தைக் கத்தரித்து அனுப்பினால் பரிசு ரூ. 250. ஒருவருக்கு மேல் சரியாக எழுதினால் பரிசு பகிர்ந்தளிக்கப்படும். 10 பேருக்கு மேல் சரியாக எழுதினால் அவர்களில், குலுக்கல் முறையில் 10 பேர் தேர்ந்தெடுக்கப் படுவார்கள். உறையின் மேல் **"படமும் பாடலும்"** என்று குறிப்பிட வேண்டும்.

முடிவு தேதி 13–6–83

(கருத்து: சந்திரமௌலி)

என் பெயர்:

விலாசம்:

கையெழுத்து:


பாடல்கள்:

● செல்வந்திப் பூக்களில் செய்த வீடு
வெண்பஞ்சு மேகமே நீ கோலம் போடு.

● முல்லை மலர் வாசம் வீசவில்லையா?
பெண் மனசின் ஆசை பேசவில்லையா?

● என்னம்மா கோபம் ஏனிந்த வேகம்?
பொன்னான பூமுகம் என்னவாகும்?

● கற்பனை வானில் நீந்தி வருகின்ற
கதாநாயகி — தினம்
சொப்பனகீதம் பாடி வருகின்ற
சபாநாயகி



Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd. at the Bharathan Press, Race Course Road Guindy, Madras-600032. (Phone: 431843)

Assistant Editor: P. S. Mani

Editor: K. Rajendran

“காம்ப்ளான்® ஒண்ணுதான் சரி என் குடும்பத்துக்கு ...திட்டமிட்ட பரிபூரண உணவு.”



“பல வேளைகள்
சாப்பிடத் தவறி விடும்
என் கணவருக்கு”



“சாப்பிடும்போது
சண்டித்தனம் செய்யும்
என் மகனுக்கு”



“நோயுடல் தேறிவரும்
என் தாயாருக்கு”

காம்ப்ளான்® ஒன்றுதான் எவருக்கும் தேவைப்படும் 23 மூலாதார ஊட்டச் சத்துக்களால் முழுமை பெற்றது.

காம்ப்ளான் ஒன்றுதான் திட்டமிட்ட விஞ்ஞானக் கலவையாக உடலுக்கு அன்றாடம் தேவைப்படும் 23 மூலாதார ஊட்டச் சத்துக்களை அளிக்கிறது: புரதங்கள், கார்போஹைட்ரேட், கொழுப்புச் சத்து, வைட்டமின்கள், உலோக தாதுக்கள். எனவேதான், டாக்டர்கள் பெரும்பாலும் சிபாரிசு செய்யும் ஆரோக்கிய பானமாக விளங்குகிறது காம்ப்ளான்.

கிடைப்பவை நால்வகை: இன்சுவை ரகங்களாக — சாக்கலேட் காம்ப்ளான், ஏலக்காய்-குங்குமப்பூ காம்ப்ளான், ஸ்ட்ராபெர்ரி காம்ப்ளான், தவிர சாதா காம்ப்ளான்.



“அசதியினால்
சரிவர
சாப்பிட
முடியாத
எனக்கு”

திட்டமிட்ட பரிபூரண உணவு
காம்ப்ளான்®

GLC. 10-2015 TM

REGISTERED No. M 4792
Registered as a Newspaper in Sri Lanka

